# ஈழவர் இடர்தீர...



ஈழ ஆய்வு நிறுவனம்

EELAM RESEARCH ORGANIZATION EROS

# ஈழவர் இடர் தீர ......

இ. இரத்தின சபாபதி

ஈழ ஆய்வு நிறுவனம்
EELAM RESEARCH ORGANIZATION
EROS

ஈழ ஆய்வு நிறுவன வெளியீடு
முதல் பதிப்பு : செப் - 1984

உரிமை : © ஈழ ஆய்வு நிறுவனம்

EELAM RESEARCH ORGANIZATION,
179, Norval Road,
North Wembley, Middle sex,
United Kingdom.

விலை : ரூ. 3-00

தொடர்புக்கு :
'ஈழம்'
த. பெட்டி எண். 2356
சென்னை - 600024.

அச்சிட்டோர் :
அன்பு அச்சகம்
மதுரை - 625001.

## முன்னுரை

இக் கட்டுரைகள் 17-10-80 தொடக்கம் எமது இயக்கத்தால் வெளியிடப்பட்ட ''தர்க்கீகம்'' இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். இவ்வாய்வுக் கட்டுரைகள் எமது இயக்கமான ஈழப் புரட்சி அமைப்பின் (EROS) நிறுவனர் தோழர் இ. இரத்தின சபாபதி அவர்களால் எழுதப்பட்டதாகும். அவரின் உருவத்தோற்றமே இப் புத்தகத்தின் பின் அட்டையை அலங்கரிக்கின்றது. இவ் வாய்வுக் கட்டுரைகள் ஈழத்தை அதன் பிரச்சனைகளை வர்க்கக் கண்ணோட்டத்தில் அறிமுகப் படுத்துகின்றன. மொழிவெறியாகவும் மாணவர்களின் உயர்கல்விப் பிரச்சனையாகவும் 1975 ஆம் ஆண்டு வரை அணுகப் பட்ட ஈழப் பிரச்சனையை இவரின் கருத்துக்களே மார்க்சிய அணுகு முறையில், தமிழ் பேசும் மக்களின் உடைமைப்பாட்டு பிரச்சனையாக ஈழப் போராட்டப் போக்கில் திருப்பு முனையாக்கியது. இதன் பின்னாலேயே ஈழப் போராட்ட அரங்கில் மார்க்சிய அணிகள் தோற்றம் பெற்றன. இவைகளின் முன்னோடியாக ஈழப் புரட்சி அமைப்பு இவரால் ஆரம்பித்துவை க்கப்பட்டது.

இக் கட்டுரைகள் சரியான ஈழப் போராளிகள் உருவாவதற்கு உதவியதுடன் மட்டுமல்லாது, ஈழத்திற்கு வெளியே ஈழத்தைப் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கும் ஒரு சரியான பார்வையை அளித்தன. சர்வதேச அரங்கில்

முற்போக்கு சக்திகளின் ஆதரவை, வசதிகளைப் பெறுவதற்கு இக்கருத்துக்களே கால்கோளாக அமைந்தன. ஈழப் போராட்டம் கூர்மையடைந்திருக்கும் இவ்வேளையில் அதன் அவசியம் கருதி இக் கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளை மீண்டும் நூல் உருவில் கொண்டுவருவதில் நாம் பெருமை அடைகிறோம்.

இந்நூலில் இரண்டாவது பகுதியாக இடம் பெற்றுள்ளவை ஏற்கனவே நூல் வடிவில் வெளிவந்ததாகும். இக்கட்டுரையில் இலங்கையின் இடதுசாரிகளென கருதப்படும் திரு. ரோஹணவிஜயவீரா, பாலாதம்பு ஆகியோரின் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியதான கண்ணோட்டங்களுக்கு விமர்சனரீதியான பதில் அளிக்கப்பட்டுள்ளது.

இம் நூல் வெளிவருவதன்மூலம் ஈழப் போராளிகள் தம் அணுகுமுறையை தெளிவாக்குவார்கள் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

ஈரோஸ் [EROS]

# 1 ஈழவரும் ஈழக்கோரிக்கையும்

ஈழவர் தம்மிடர் திருவதற்கான தீர்க்கமான முறைகளைக் காண நாம் முனையும்போது, ஈழவர் தாம் யார் என குரல் எழுப்புவது நியாயமும் நிதர்சனமுமான வாதமே. ஆனால் வெறும் வாதம், குதர்க்கம் என்பவற்றிற்கு அப்பாற்பட்டு ஆய்வு 'அடிப்படையிலான தர்க்கிகக் கண்கொண்டு பார்க்கும்போது 'ஈழவர்' என நாம் குறிப்பிடுவது ஈழ நாட்டைத் தாயகமாகக் கொண்டவரையே என்பது புலனாகும். மொழிவாரி அடிப்படையில் ஒரு இனம், அதுவும் தமிழினம் முக்கியமாக, ஈழந்தன்னை தம் தாயகமாகக் கொண்ட மக்கள் தம்மை ஈழவர் என அழைப்பதில் தவறெதுவும் இல்லை. இவர்கள் பேசும் மொழி தமிழ் மொழி, தமிழைப் பேசுவோரெல்லாம் தமிழர்கள். தமிழ்ப் பேசும் மக்கள் பலநாடுகளில் முக்கியமாக இந்தியாவில், மலேசியாவில், சிங்கப்பூரில், பிஜீயில், மொரீஷியசில் ஏன் ஆப்பிரிக்காவில்கூட வாழுகிறார்கள் இவர்கள் எல்லோரும் ஈழவர் அல்ல. ஈழத்தை மட்டும் பிறப்பாலும், சுவீகாரத்தாலும் தாயகமாகக் கொண்டவர்களே ஈழவர்கள்.

''பாலஸ்தீன மக்களின் மொழி அரபு. அவர்கள் 'அரபு பாலஸ்தீனம்' கோரவில்லை.

சவூதி அரபிய மக்களின் மொழி அரபு. அங்கு 'அரபு சவூதி அரேபியர்' இல்லை. சிரியா மக்கள் அராபியர், அவர்கள் பேசும் மொழி அரபு அங்கு 'அரபு சிரியர்' இல்லை. ஈராக்கின் மக்கள் பேசும் மொழி அரபு. அங்கு 'அரபு ஈராக்' இல்லை. தேசிய உடமைப் பாட்டு ரீதியில், தேசிய அந்தஸ்து கோரும் போது - மக்கள் - மொழி அடிப்படையில் இணைந்து நாடு கோருகிறார்கள் : இதனாலேயே நாமும்

"- நாம் ஈழவர்
நமது மொழி தமிழ்
நமது நாடு ஈழம்."

எனப் பகர்கிறோம்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள், தாம் வாழ்ந்து வரும் நாட்டை ஈழம் என்றே தொன்று தொட்டு அழைத்து வந்தார்கள். ஏன்! இந்தியாவில் வாழும் தமிழ் மக்கள் "தமிழ் நாடு" என அழைப்பது அவர்கள் வாழும் பிரதேசங்களை அன்றி முழு இந்தியாவை அல்ல. அதே போல் இலங்கை வாழ் தமிழ் மக்கள் "ஈழம்" என்று அழைத்தது தாம் வாழ்ந்த பிரதேசங்களையே. இப்பிரதேசங்கள் என்னவென்று பின்னர் பார்ப்போம். அதேபோல்தான் சிங்களம் பேசும் மக்கள் தாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசங்களை 'அப்பே லங்கா' அல்லது "ஸ்ரீலங்கா" என அழைத்து வருகின்றனர். இவ்விரு



இனங்களையும் இலங்கையர் எனப் பொதுப்படையாக அழைத்து வருவது பல்வேறு மொழி வாரியாகப் பிரிக்கப்பட்ட மக்களையும் இந்தியர் என்று அழைக்கும் மரபிற்கு சமமானது. இதனால்தான் பாரதி கூட 'மொழி பத்துடையவள் இந்தியத் தாய்' எனக் கூறி விட்டு தனது மொழிவாரி அடிப்படையிலான இனப் பற்றினால் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்ற தன் நாட்டுப்பற்றுத் தொனியைப் புலப்படுத்துகிறான். இன்னுமொரு இடத்தில் "வாழிய செந்தமிழ், வாழிய நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு" எனக் கூறும்போது நாடற்ற தமிழர்களின் அவல நிலையையும் அவர்களின் தேசிய நோக்கையும் உணர முடிகிறது. இந்த நாடில்லாத முறையைப் போக்கவோ என்னவோ பெரியாரும், அண்ணாவும் திராவிட நாடு கோரினார்கள். இந்தத் திராவிட நாட்டுப் பரப்பினை தமிழும், கன்னடமும், தெலுங்கும், மலையாளமும் பேசும் மக்களைக் கொண்ட எல்லைப், பகுதி உள்ளடக்கியிருந்தது. இந்த நாடே திராவிட நாடென்றும், அந் நாட்டில் வாழ்வோரைத் திராவிடர் என அழைத்ததும் தர்க்கீகமே. இதே போல் தான் "ஈழம்" தம் தாய் நாடு எனக் கூறுவோர் தம்மை ஈழவர் என அழைப்பதும் தர்க்கீகமே!

### தேசிய அந்தஸ்தைப் பொறுத்தது

ஒரு நாடு முழுமை பெறுவது அந்த நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டாலும், உறுதிப்பாட்டாலும்; அதேபோல் ஒரு இனம் அவ்வினத்தின் மொழி முழுமை

பெறுவது அம்மொழி வாரி இனத்தின் தேசிய அந்தஸ்தைப் பொறுத்ததே! இந்தியாவைப் பொறுத்த மட்டில் திராவிட நாட்டுக் கோரிக்கை சரிவராத அளவிற்கு மாநில சுயாட்சி வழங்கப்பட்ட போது இந்தியாவில் ஒரு கேரளம், ஒரு ஆந்திரா, ஒரு கர்நாடகம், ஒரு தமிழ் நாடு பிறந்தது.

**ஈழக் கோரிக்கை ஈழவரினது**

இலங்கையைப் பொறுத்தமட்டில் அன்னியரிடமிருந்து பெற்ற சுதந்திரத்திற்குப் பின் இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சனைகளை பிரிவினைக்கு அப்பாற்பட்ட ஒற்றை ஆட்சி அடிப்படையில் தீர்க்கலாமென்ற எண்ணத்திலிருந்து பின் சமஷ்டி அரசியல் முறையில் தீர்க்கும் வாய்ப்பே இல்லை என்ற நம்பிக்கை ஓங்கும் காலத்திலேதான் பிரிவினை, சுயநிர்ணயம் என்ற கோரிக்கைகள் எழுந்தன. இதன் மகுடமாகவே ஈழக் கோரிக்கை பரிணமித்தது, பின் 1977ம் ஆண்டுத் தேர்தலின் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டது. அதாவது ஈழக் கோரிக்கை வெறும் முதலாளித்துவ சிந்தனையுள்ள அரசியல் வாதிகளினால் முன்வைக்கப்பட்ட போதிலும் அதை முழுமையாக முன்வைத்தவர்கள் ஈழ மக்கள் அதாவது ஈழவர்களே!

**ஈழக் கோரிக்கை ஏட்டிக்குப் போட்டியல்ல**

ஒரு நாட்டை உருவாக்குவது அந்நாட்டின் மக்கள் அவர்கள் தம் உடமைப்பாட்டு உரிமையினை உறுதிப் படுத்தவே ஒரு நாடு கோருகிறார்கள். மொழிவாரி அடிப்படையில் தேசிய அந்தஸ்து உரிமை கோருவோர்களும் உண்டு. ஸ்கொட்லந்து, வேல்ஸ் போன்ற



தேசங்கள் மொழிவாரி அடிப்படையில் தேசிய அந்தஸ்து கோருகிறார்கள். இத்தேசங்களில், பேசப்படும் மொழிகள் வேறு நாடுகளில் பேசப்படுவதில்லை. ஆகவே அவர்கள் மொழி வாரி அடிப்படையில் தமது உடமைப்பாடு, உரிமைகள் கோருவது தர்க்கீகம். ஆனால் வேறு எந்த நாட்டிலும் பேசப்படாது இலங்கையில் மட்டும் பேசப்படும் சிங்கள மொழியைப் பேண அம்மொழியின் சூத்திரதாரிகள் மொழிவாரி உடமைப்பாடு கோராமல் தனித் தேசிய உடமைப்பாட்டு ரீதியில் தம் உரிமைகளை உறுதிப்படுத்தி வருவது அவர்கள் தம் அந்தரங்க சூட்சுமான ஆக்கிரமிப்புத் திட்டத்தையே பட்டவர்த்தனமாகத் தெரியப்படுத்துகின்றது. உண்மையில் அவர்கள் தம் மொழிவாரி அடிப்படையில் உரிமைப் பாட்டை நிரந்தரமாக்க முனைந்திருந்தால் இலங்கை வாழ் மக்களின் பிரச்சனை என்றோ தேசிய ரீதியில் தீர்க்கப்பட்டிருக்கும். பதிலுக்கு அவர்கள் வகுத்து வரும் ஒற்றை ஆட்சித் திட்டமும், ஒரு மொழிக் கொள்கையும் ஸ்ரீலங்கா சிங்கள நாடு என்பதைப் பகிரங்கப் படுத்துவதிலும் பட்டவர்த்தனமாகிறது. இந்த எதேச்சாதிகார, மிலேச்சத்தனமான கொள்கையை முறியடிக்கவே ஈழவர் ஈழக்கோரிக்கையை முன்வைத்து போராடி வருகிறார்கள். இது ஏட்டிக்குப் போட்டியானதல்ல. இது இயங்கியல் ரீதியில் ஒரு நாட்டில் ஒரு சமூகத்தில் ஏற்படும் நியதி.

**பாலஸ்தீனியரின் உரிமைப் போர்**

ஒரு இனத்தின் முதலாளி வர்க்கம் வெவ்வேறு காரணங்களுக்காக மற்றுமொரு இனத்தை அடிமைப்

படுத்துவதுண்டு உதாரணத்திற்கு வேறு எந்த நாட்டிலும் பேசப்படாத 'ஹீப்புரு' மொழியைப் பேசும் யூதர்கள் பாரம்பரியமாக பாலஸ்தீனியர்களுக்குச் சொந்தமான பிரதேசத்தில் ஒரு இஸ்ரவேலை உருவாக்கியது மட்டுமல்ல, அக்கம்பக்கத்து அராபிய நாடுகளை ஆக்கிரமிக்கவும் அடிமைப்படுத்தவும் எத்தனிக்கின்றனர். இது முரண்பாடு முதிர்ந்த முதலாளித்துவத்தில் நிலவும் எதேச்சாதிகார மிலேச்சத்தனத்தையே எடுத்து காட்டுகிறது. இதை எதிர்த்தே பாலஸ்தீனியர்கள் போராடுகிறார்கள். இங்கு மற்றுமொரு உண்மையைப் பார்க்க வேண்டும். பாலஸ்தீனிய மக்கள் பேசும் மொழி அரபு; ஆனால் அவர்கள் மொழியடிப்படையிலான உரிமை கோரவில்லை. பதிலுக்கு ஏகாதிபத்தியத்தையும் எதேச்சாதிகாரத்தையும் முறியடித்து தேசிய உடைமைப்பாட்டு உறுதிப்பாட்டை நிலை நிறுத்தவே போராடுகிறார்கள்.

இதே சூழ்நிலையில்தான் ஈழவர்களும் உள்ளார்கள். உலகரீதியில் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாயும், முதலாளித்துவ வர்க்கத்தின் மூச்சாகவும் இதனடிப்படையில் உருவாக்கிவரும் நிறவெறி சிங்கள சோவனிசத்தின் ஆட்கொள்ளுதலிலிருந்து மீள்பட்டு மிதவாதமில்லாத, மதவாதமல்லாத மகோன்னத சோசலிச சமுதாயம் காணவே ஈழக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள் ஈழவர்கள். இதுவெறும் மொழிவாரி இன உரிமைப் போராட்டமாக மட்டுமல்லாமல் சமூக அரசியல் ரீதியான உடைமைப்பாட்டு கோரிக்கையாகவும் உருவாகியுள்ளது.

# 2 கடந்த காலங்களில் நடந்ததென்ன?

இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சனையை, அணுகி ஒரு தீர்க்கமான முடிவுகாண வேண்டியது. அரசியல் ஆய்விலும் திறனாய்விலும் நம்பிக்கை கொண்ட முற்போக்கு சிந்தனையாளர்களின் முதலாய கடமையாகும்.

முதலில் பிரச்சனை என்னவென்று பார்ப்போம் மொத்தமாக இலங்கையில் நாற்பது இலட்சம் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் தொழிலாளர்களாகவும் பாமரர்களாகவும் வாழ்கிறார்கள். ஒருசிறு நடுவர்க்கத்தினரும் இருக்கின்றனர். இவர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சனையைத் தீர்த்தால் அன்றி தமிழர்கள் பிரச்சனை தீர்ந்து விடாது. அப்படித் தீர்வுகாணும் வரை அவர்களின் பிரச்சனைகளை எடுத்துக்கூறி அதற்கான ஒரு தர்க்கீகத் தத்துவ மார்க்கத்தையும் காணவேண்டியது நமது கடமையாகும்.

கடந்தகால இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர்களின் 97% தினரின் பிரச்சனையைப் பிரதிபலித்து, அவர்களுடைய தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அரசியல் பிரமுகர்கள் குரல் எழுப்பவில்லை என்பது நிதர்சன உண்மை. அப்படிக்குரல்

எழுப்பி இருந்தால் 1949ம் ஆண்டு தமிழ் தொழிலாளர்களின் அரசியல் உரிமை பறிபோனபோது, அத்தலைவர்கள் தமிழ்த் தொழிலாளர்களையும் பாமரர்களையும் ஒன்று திரட்டி ஒரு பெரிய போராட்டம் நடத்தி தமிழர்கள் பிரச்சனையைத் தீர்த்திருக்கலாம். அப்படி நடக்காமைக்குக் காரணம் தமிழர் பிரச்சனை என்னவென்று தீர்க்கமாகச் சிந்திக்கும் திறனும் அதைத் தீர்க்கும் உறுதியான திராணியும் உள்ள தலைவர்கள் இல்லாததே. ஏதோவொரு கஞ்சிவார்க்கும் கருணையுடன் தொண்டு செய்யும் நோக்குடன் கட்சிகளையும் நிறுவனங்களையும் கட்டி எழுப்பினர். தமிழ்க்காங்கிரஸ் மலைநாட்டினரை கைவிட்டனர் என்ற காரணத்துடன் ஆரம்பிக்கப் பட்ட தமிழரசுக் கட்சி தமிழ்த் தொழிலாளரின் பிரச்சனையை எந்த விதத்திலும் அணுகவில்லை என்பது உண்மை. அப்படித் தமிழரசுப் பிரமுகர்கள் தமிழ்த் தொழிலாளருடன் இறுகப் பிணைத்திருந்தால் வடகிழக்கு மாகாண மக்கள் நடத்திய போராட்டத்தில் அவர்களும் பங்கு கொண்டிருப்பர். ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடக்கவில்லை. இதற்குக் காரணம் இத்தலைவர்கள் தம்முடைய பிரச்சனையையும் தம்மைச் சார்ந்த நடுத்தர வர்க்கத்தினுடைய பிரச்சனையையும் அணுகியதே ஆகும்.

உதாரணத்திற்கு 1960ம் ஆண்டுத் தேர்தல் பிரச்சாரத்தை எடுத்துக் கொண்டால் அத்தேர்தலில் சிங்கள அரசகரும மொழிச்சட்டத்தால் பாதிக்கப் பட்ட அரசாங்க சேவையாளர்களின் பிரச்சனையை



மட்டும் பிரதிபலித்துத் தான் குரல் எழுப்பினார்கள் பாமரமக்களின் அல்லது பாட்டாளி வர்க்கத்தின் பிரச்சனையை பிரதிபலித்து குரல் எழுப்பவில்லை. வடகிழக்கு மாகாணங்களில் கஞ்சி கூடக்குடிக்க வழியற்றவர்களின் நிலைமையையோ பயிர்ச் செய்கைக்கு குத்தகைப் பணம் கொடுக்க வழியற்றவர்களின் நிலைமையையோ இல்லை. மலை நாட்டின் தோட்டத் தொழிலாளரின் வேதனக் குறைபாட்டையோ சிந்திக்கக் கூடத்தவறினார்கள் ஆனால் பாமரர்களும், பாட்டாளிகளும், தொழிலாளிகளும் தான் தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பான்மையோர் மட்டுமன்றி முதுகெலும்பும் கூட. இவர்களுடைய நிலைமையைச் சிந்தித்து பிரச்சனைகளைத் தீர்க்க முனைந்திருந்தால் தமிழர்களுடைய பிரச்சனை எப்போதோ தீர்ந்திருக்கும்.

பதிலுக்கு தேர்தல் முடிந்ததும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் தேடுவதிலும், ஒருசிலருக்கு உத்தியோகம் தேடுவதிலும் காலத்தைக் கழித்தனர். இதுவரை காலம் தமிழர்களுக்குத் தேவையான பொருளாதாரத் திட்டத்தையோ, அல்லது போராட்ட வழிமுறைகளையோ தயார் செய்வதில் அவர்கள் ஈடுபடவில்லை.

1970ம் ஆண்டு சிங்களச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சனை மறைந்து பல்கலைக்கழகத்திற்குள் செல்லமுடியாத மாணவர்களின் பிரச்சனையை மட்டும் பிரதிபலித்து குரலெழுப்பத் தொடங்கினர்.

இப்படி காலத்திற்கு காலம் தலைவர்கள் தம்முடைய வர்க்கத்தின் பிரச்சனையை எதிர் ஒலித்தார்களே அன்றி, தமிழ் மக்களின் பிரச்சனையை எதிரொலிக்க வில்லை, அப்படி மக்களின் பிரச்சனையைப் பிரதிபலித்து உரிமைக் குரல் எழுப்பி இருந்தால் தமிழ்த் தலைவர்கள் நடத்திய போராட்டம் வெற்றியடைந்திருக்கும். ஆனால் நடந்தது என்ன?

1962ம் ஆண்டு கச்சேரி முன்றலில் நடாத்தப் பட்ட சத்தியாக்கிரகம் தமிழர்களுக்காக அவர் தம் பிரச்சனையை பிரதிபலித்து நடத்தப்பட்டிருந்தால் ஆட்சியாளர்களின் படைப் பிரிவினர் சத்தியாக்கிரகி கள் மீது கை வைத்த போது நம் மக்கள் கொந் தளித்து எழுந்திருப்பர். அப்பொழுது மதுரைக்கலம் பகம் போல் ஒரு புரட்சியை தமிழர்கள் நடத்தி தமக்கென ஒரு அரசியல் அந்தஸ்த்தை நிர்ணயித்திருப் பார்கள்.

ஆனால் தமிழ் மக்களுடைய அடிப்படை ஜீவா தாரப் பிரச்சனையைப் பிரதிபலித்து யாரும் இன்னும் தர்க்கீக ரீதியில் போராட்டம் நடத்த முன்வரவில்லை. அப்படியான போராட்டம் எதுவும் நடக்கவில்லை. போராட்டம் நடத்தும் போதுதான் அவர்கள் உறுதி யுடன் உழைக்கவும் போராடவும் முன்வருவார்கள். அப்படியொரு போராட்டத்தை தமிழர்களுக்காகத் தமிழர்கள் நடாத்தும் போதுதான் தமிழர்களுக்கென ஒரு நாட்டையும் சுபீட்சமான சுதந்திர ஆட்சியையும் நிறுவ முடியும். அப்போது தான் எமது பிரச்சாரத் தின் மூலம் பிறநாடுகளின் கவனத்தையும், ஐ. நாவின்



அங்கீகாரத்தையும் பெற முடியும். போராட்டம் ஆரம்பிக்கு முன் அவர்களின் நிலையை ஐ.நாவில் அம்பலப் படுத்த முயலுபவர்கள், உலகின் பல நாடு கள் போராட்டம் மூலம் விடுதலை பெற்ற பின்னரும் விடுதலைப் போராட்டம் நடக்கும் போதுந்தான் குரல் எழுப்புகிறுர்கள் என்பதை இவர்கள் மறந்து விடுகிறுர் கள். போராட்டம் தொடங்குவதற்கு முன்பு கூட்ட மும் வேட்டும் போட்டு பிரச்சாரம் நடத்தினுல் நாம் நம்மையே எதிரிக்கு காட்டிக் கொடுத்தவர்களாக மாட்டோமா?

இலங்கைத் தமிழர்கள் தங்கள் பிரச்சனையைத் தீர்க்க, தீர்க்கமான கொள்கையையும், திடமான கோரிக்கையையும் கொள்ள வேண்டும். கொள்கையும் கோரிக்கையும் சேரும்போது தான் இலட்சியமாகி பின் போராட்டமாய் மலரும். வெறும் கோரிக்கை மட்டும் உள்ளவர்கள் கோட்டையையும், கோட் பாட்டையும் விட்டதையும், வெறும் கொள்கை மட்டும் உள்ளவர்கள் கொட்டாவி விட்டதையும் சரித்திரம் கண்டுள்ளது.

ஈரானிலுள்ள கேடிஸ் மக்களின் முன்னுள் தலைவர் பாஷாணியும் வலது சாரித்தலைமைப் பீடமும்போராட் டத்தைக் கைவிட்டு ஓடி ஒழிந்தது, நமக்கு அனுபவ மாக வேண்டும். ஆகவே இலங்கைத் தமிழினம் விடிவு காண தீர்க்கமான கொள்கையும், திடமான கோரிக் கையும், உறுதியான தலைமையும் வேண்டும். இதை பிற்போக்கு சக்திகளிடமிருந்து எதிர்பார்க்க முடியாது

தமிழர்கள் பிரச்சனையை தனியார் பிரச்சனையாக்காமல் வர்க்கப் பிரச்சனை ஆக்க ஒரு தர்க்கீகத் தத்துவம் தேவை. ஆகவேதான் தனி நாடு வேறு, தமிழர்களுக்கு நாடு என்பது வேறு என்கிறோம். சுதந்திரமடைந்த ஸ்ரீலங்கா இன்று சில குடும்பங்களின் தனிச் சொத்தாகிவிட்டது. அது போல் தமிழர் பிரதேசமும் தனியார் சொத்தாகாமல் தமிழர்களின் பொதுவுடமைச் சொத்தாக்க நாம் ஒரு போராட்டம் நடத்த வேண்டும். போராட்டம் என்னும் போது அது வெறும் ஜனநாயகப் போராட்டமாகவோ அல்லது காலத்தோடு ஒவ்வாத, அகிம்சைப் போராட்டமாகவோ இருந்து விடக் கூடாது. பதிலுக்கு பாமரர் எழுச்சியாக, தொழிலாளர் புரட்சியாக அமைய வேண்டும். அப்படியான ஒரு போராட்டம் மூலந்தான் தமிழர்கள் தமக்கென ஒரு சுயநிர்ணய அந்தஸ்தைப் பெறலாம். அந்த உரிமையையும் உடமையையும் ஒரு சுதந்திர, சமத்துவ, சமுதாய ஆட்சியாக அமைக்கலாம். இந்த அமைப்பையும் ஆட்சியையும் பெருமையுடன் ஈழம் என நாம் அழைக்கலாம்.

# 3 'தமிழீழக்' கோரிக்கையின் முரண்பாடு

ஈழவர் தம்மிடர் ஈண்டு தொலைய வேண்டுமானால் அவர்கள் தம் இடர்தான் என்னவென இயங்கியல் ரீதியில் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் ஒரு தீர்க்கமான முடிவையும் அதற்கேற்ப தர்க்கீக பாதையையும் வகுக்க முடியும். கடந்தகாலத்தில் ஈழவரின் இடர்ப்பாடுபற்றி ஆழ்ந்து நோக்கப்பட்டதோ, அல்லது அவ்விடர்ப்பாட்டிற்கான அடிப்படைக் காரணங்கள் ஆராயப்பட்டதோ என்றால் சந்தேகம் தான் எழும். ஒவ்வோர் கால. கட்டத்திலும், நம்மக்களின் ஒவ்வோர் சாராரை எதிர்நோக்கியே அன்றாடப் பிரச்சனைகளை மையமாக வைத்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதே அன்றி – மக்களின் அடிப்படைப் பிரச்சனையை பின்னணியாக வைத்து அதன் நிரந்தர பரிகாரத்திற்கான கோரிக்கையோ, அல்லது அக் கோரிக்கையை பிரதிபலிக்கும் கொள்கைத் திட்டமோ அக் கொள்கையும், கோரிக்கையும் இணைந்த இலட்சிய போராட்டமோ, நம் மக்களால் மேற்கொள்ளப் பட்டதோ என்றால் இல்லையென்றே சொல்லவேண்டும். கடந்த முப்பது வருடகால அரசியல் அனுபவம் கற்பிக்கும் வரலாற்று பாடம் இது. இல்லாவிட்டால் ஐம்பதுக்கு ஐம்பது கோரி, பின் சமஷ்டி அரசியல் அடிப்படையிலான தமிழரசு கோரி, இப்போ தனி நாட்டு கோரிக்கையை முன்வைப்பார்களா? இப்படி

காலத்துக்குக் காலம் மாற்றுக் கோரிக்கையை முன் வைக்கும் நம்மவர் நாளை என்ன கோரிக்கையை முன் வைப்பார்களோ எனக் கேட்கத் தோன்றுகின்றது. இதனால் தான் ''இன்று எழுந்துள்ள கேள்வி மாவட்ட சபை மசோதா பற்றியதல்ல, இலங்கைவாழ் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி ஈழக் கோரிக்கை பற்றி'' எனக் கூறினோம்.

கடந்தகால அனுபவத்தில் எந்த ஒரு கோரிக்கையும், நிரந்தர கோரிக்கையாக இருக்கவில்லை. ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கைக்காக மக்கள் போராடினார்களோ என்றால் இல்லை. அல்லது அக்கோரிக்கையை முன்வைத்தவர்கள் அதற்கேற்ப மக்களை நெறிப்படுத்தினார்களோ என்றால் அதுவும் இல்லை. மக்கள் தமது உரிமை கோரி நெறிப்படுத்தப்பட்டிருந்தால், கடந்த 30 ஆண்டுக்குள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்திருப்பார்களா? இங்கு தான் வெறும் கோரிக்கைக்கும்,கோரிக்கையும் கொள்கையும் இணைந்த இலட்சியப் பாதைக்கும், இடையிலான தார்பரிய வேறுபாடுகளை உணர முடிகின்றது. அதனாலேயே ஈழக்கோரிக்கையின் முரண்பாடுகளை முதலில் பார்க்க வேண்டும். ஈழவர் தம் பிரச்சனையென்ன? அவர்கள் தம் இடர்பாடுதான் என்னவென புலப்படும் பிரச்சனையை தெளிவாகப் புரியும் போது, இடர்பாடுகள் இணக்கம் காணமுடியாத அளவுக்கும், மறைக்க முடியாத அளவுக்கும், வெளிப்படையாகும். அந்த வெளிப்பாட்டில் வெடித்து கிளம்புவதே விடிவுப் பாதை.



கடந்தகாலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கென முன்வைக்கப்பட்ட மூன்று கோரிக்கைகளுக்குமிடையே பரிமாண வேறுபாடுகள் இருப்பினும், ''ஐம்பதுக் கைம்பது'' சமஷ்டிக்கு உட்பட்ட தமிழரசு' கோரிக்கைகளுக்கும், இறுதியான ஈழக் கோரிக்கைக்குமிடையே ஒரு பாரிய அடிப்படை வேறுபாடு உண்டு. முன்னவை இரண்டும் மொழிவாரி இன உரிமைப்பாடு ரீதியிலானவை. பின்னது தமிழ்தேசிய உடமைப்பாடு ரீதியிலானது. முன்னையவை அரசியல் சாசன ரீதியில் பெறக்கூடியது. பின்னது மக்களின் மறுமலர்ச்சியில் மலர்வது. அந்த மறுமலர்ச்சியுகத்தை உருவாக்கும் ஈழவரின் உடமைப்பாட்டை, இன்றைய ஈழக்கோரிக்கை பிரதிபலிக்கின்றதோ என்றால் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஒரு இனத்தின் சமூக பொருளியலிலான அரசியல் மேம்பாட்டிற்கு (Social Economic and Political Emancipation) அந்த இனத்தின் சமூக அமைப்பில் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டும். அந்தமாற்றத்தை ஏற்படுத்துபவர்கள், அந்த இனத்தின் சமூக அமைப்பில் ஒடுக்கப்பட்டு அடித்தளத்தில் வாழும் மக்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் இன்று தேசிய ரீதியிலும் சரி, இனரீதியிலும்சரி, அடித்தளத்தில் இருப்பவர்கள் மலையகத்தோட்டத் தொழிலாளர்கள். இவர்களை இம்மிகூட இன்றைய ஈழக் கோரிக்கை பிரதிபலிக்கவில்லை. ஆனால் பண்ணாகத்தில் ஈழக்கோரிக்கை பரிணாமம் ஆன போது அதன் கர்த்தாக்களில்

ஒருவராயிருந்தவர் சௌமியமூர்த்தி தொண்டமான். இவர் இன்று ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக விளங்கும் ஸ்ரீலங்காவின் அரசாங்கத்தில் அதுவும் ஈழக் கோரிக்கையை அறவே மறுக்கும் ஆட்சியில் மந்திரியாகவுள்ளார்.

இவரது எண்ணக் கோரிக்கையில் ஈழ அபிலாசை ஈடாட்டம் கண்டு விட்டதால் மலையக மக்களின் முடிவும் அதுவே என்று அர்த்தமா? இல்லை. ஈழப் பிரகடனத்துக்கு சௌ. தொண்டமான் இணைய முன் மலையக மக்களின் மனப்பாங்கை மதிப்பீடு செய்தாரா? அப்படி மதிப்பீடு செய்திருந்தால், ஈழக் கோரிக்கையிலிருந்து பிரிக்க முடியாத ஈழப்பிரதேச எல்லை குறித்து குரல் எழுப்பி அதில் மலையக மக்களின் நிலையென்ன என விளக்கப்பட்டிருக்கும். அப்படி விளக்கப் படாத முரண்பாட்டை ஈழக் கோரிக்கையில் காணக் கூடியதாகவிருக்கிறது.

### ஈழக் கோரிக்கையில் ஜி. ஜி.

அடுத்து ஈழப்பிரகடனத்தின் மற்றுமொரு பொறுப்பாளி காலஞ்சென்ற ஜீ. ஜீ. பொன்னம்பலம். இவர் தான் ஐம்பதுக்கைம்பது கோரிக்கையை முன் வைத்தவர். இந்த ஐம்பதுக்கைம்பது கோரிக்கையையே நிதர்சனமாக்காமல் மோசடி செய்யும் வண்ணம், சுதந்திர இலங்கையின் முதல் பாராளுமன்றத்தில் இலங்கைப்பாட்டாளி வர்க்கத்தின் முதுகெலும்பான, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் தொழிலாளர் வர்க்கத்தின் வாக்குரிமையை பறித்து நாடற்றவர்களாக்கிய, மரணசாசன மசோதாவான பிரஜா உரிமைசட்டத்திற்கு கைச்சாத்திட்டவர் ஜீ. ஜீ. இப்படி தமிழர்களுக்கு சமஅந்தஸ்த்து கேட்டு விட்டு தமிழர்களின் சமபாகியினரின் உரிமைகளையே உருக்குலைத்த ஜி. ஜீ யும், அந்த மக்களின் உரிமைகள் பறிபோவதற்கு காரணமான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இன்று அங்கம் வகிக்கும் தொண்டமானும், ஈழக் கோரிக்கையின் முன்னுள் பங்காளிகள் என்றால் தர்க்கரீதியில் மற்றுமொரு கேள்வி எழுகின்றது. ஈழக் கோரிக்கை முன்னைய கோரிக்கைகளைப் போல் நிதர்சனமற்ற நிச்சயமற்ற கோரிக்கையா? இல்லை, அரசியல் வாதிகள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தத்தமது நலனுக்காகவும், தாம் சார்ந்த வர்க்கங்களின் நலனுக்காகவும், தேர்தல் காலத்தில் வெளியிடும் வாய்வீச்சா ஈழக்கோரிக்கை என கேட்க வேண்டியுள்ளது. இதனுலேயே மீண்டும் "இன்று எழுந்துள்ள கேள்வி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பற்றி ஈழக் கோரிக்கை பற்றி" எனக்கூற முற்படுகின்றோம்.



இந்த கேள்வியினை கேட்க முற்படுபவர்கள் தர்க்கீகக் கண்ணோட்டத்தவர்களாயின், நிலைமையை இயங்கியல் ரீதியில் அணுகவேண்டும். இயங்கியல் ரீதியில் அணுகுவோருக்கு சரித்திர பின்னணியும், சமூக சூழ்நிலையும் புரியவேண்டும். அந்தவகையில் ஈழக் கோரிக்கை எழுந்த பின்னணியை பார்க்க வேண்டும்.

ஈழக்கோரிக்கை பண்ணைகத்தில் பரிணமமாகி 1977ம் ஆண்டு தேர்தல் மூலம் தமிழ் மக்களால் முன்

வைக்கப்பட்ட போதிலும், 'ஈழம்' என்ற நாட்டு வேட்கை நம்மவரில் ஒவ்வோர் சாரரின் பாரம்பரிய பிரியமாக இருந்து வந்தது. இல்லாவிட்டால் முதலில் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை அரசியல் ரீதியில் சுந்தரலிங்கம் முன் வைத்திருப்பாரா? இல்லை பின் சுயாட்சிக் கழகம் சுயநிர்ணயம் கோரி இருக்குமா? இதை எல்லாம் தட்டிக்கழித்த. தமிழரசுக் கட்சியினர் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியினராக, ஈழக் கோரிக்கையை வலியுறுத்தி வருவார்களா?

இங்கு இயங்கியல் ரீதியில் ஆய்வோரும் தர்க்கிக கண்ணோட்டமுடையோரும் கருத்தில் கொள்ள வேண்டியது நம் இனத்தின் முதுகெலும்பான பாட்டாளி வர்க்கமான மலையகத்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோது, அந்த மக்களின் உரிமைகளை உடமையாக்க ஈழக்கோரிக்கை எழவில்லை. ஏன் தமிழ் பாமர மக்களின் பாரம்பரிய நிலச் சொத்தான அல்லை, கந்தளாய், அம்பாறை பறிபோன போது ஈழக் கோரிக்கை எழவில்லை. ஆனால் நடுத்ர வர்க்கத்தினரின் அன்றாட அபிலாசைகள், நாளாந்த நலன்கள் பாதிக்கப்பட்டபோது தனிநாடு, சுயநிர்ணயம், ஈழவிடுதலை, பிரிவினை, ஈழம் என்ற கோட்பாடுகள் ஒவ்வோர் சாரரால் அவர்தம் சிந்தனை நிலைப்பாட்டையொட்டி எழுப்பப்பட்டது.

ஆரம்பத்தில் தனிச் சிங்கள மசோதாவால் பாதிக்கப்பட்டவர்கள் தமது பிரச்சினை தமிழர் பிரச்சினை என நினைத்தார்கள் பின் உயர் கல்வி பெற முடியாத



வர்களும், தரப்படுத்தலால் தத்தளித்தவர்களும், பல்கலைக்கழகப் படி ஏற முடியாதவர்களும் வேலை வாய்ப்பற்றவர்களும் தத்தமது பிரச்சனைகளை தமிழ் மக்களுடைய பிரச்சினையாக கருதினார்கள். அதற்கேற்ப தமது நடுத்தர வர்க்க நலன்களையும், உரிமைகளையும் பேணவே கோரிக்கை எழுப்பதொடங்கினர். இதன் ஒட்டு மொத்தமான பரிணாமமே பண்ணாகப் பிரகடனம். ஆகவே இப்பிரகடனம் நடுத்தரவர்க்கத்தின் நலன் உரிமைக் கோரிக்கையா? அல்லது நம்மினத்தின் உரிமைத் தேவையா?

தர்க்கீகத் தத்துவத்தின் மற்றுமொரு தாற்பரிய உண்மையை தமிழர் வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. அதாவது ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் அடித்தளத்தினரானமக்கள்பாமரரும்.பாட்டாளிகளும் (அவர்கள் பெரும்பான்மையாயினும்) பாதிக்கப்படும் போது, அச்சமூகத்தின் உயர் மட்டத்தினரும், நடுத்தரவர்க்கத்தினரும் மௌனம் சாதிப்பர். ஆனால் உயர் மட்டத்தினரும். நடுத்தரவர்க்கத்தினரும் பாதிக்கப்படும்போது கூக் குரல் எழுப்புகின்றனர்.

இந்த கூக்குரல்தானா ஈழக் கோரிக்கை? அல்லது ஈழவர்தம் உடமைக்கானதா ஈழக் கோரிக்கை? எனக் கேட்கின்றோம்.

வரலாற்றில் அரசியல் நாகரீகம் பேணப்பட்ட காலந் தொட்டு ஒரு சமூகத்தினதோ, நாட்டினதோ இல்லை இனத்தினதோ அபிலாசைகளை பிரதிபலித்து முதலில் கூக்குரல் எழுப்புவது நடுத்தர வர்க்கத்தின்

உயர் மட்டத்தினரே. இது இயங்கியல் ரீதியில் அரசியல் நியதி.

அந்த வகையில் இலங்கைத் தமிழர்களின் ஒரு சாரரின் கோரிக்கையாக அல்லாமல் ஒட்டுமொத்தமாக நடுத்தர வர்க்கத்தின் தனி நாட்டு உரிமைக் கோரிக்கையாக உருவெடுத்துள்ளது ஈழக் கோரிக்கை என்பது உண்மை. ஆனுல் பண்ணுகத்தில் பரிணுமமான ஈழக் கோரிக்கை வெறும் தனிநாட்டு உரிமைக் கோரிக்கையாக அல்லாமல், ஈழவரின் தேசிய அந்தஸ்த்து கோரிக்கையாகவும், பாமரமக்களினதும் பாட்டாளி வர்க்கத்தினதும் உடமைப்பாட்டுக்கான கிளர்ச்சியாகவும் அமைய வேண்டும் அந்தப் பணியில் அறிவுஜீவிகள் ஈடுபட வேண்டும்.

# 4

# ஈழமும் "தமிழீழமும்"

ஒவ்வோர் காலகட்டத்தில் ஒவ்வோர் இனத்தின் - சமுதாயத்தின் மேல்மட்டத்து அல்லது அடிமட்டத்து அபிலாசைகளே, எண்ணக்கோட்பாடுகளைப் பிரதிபலித்து, சிந்தனையாளர்கள், முன்னேடிகள் உருவாகி ஆக்கபூர்வமான வேலைகளைக் கவனிக்கும் கைங்கரியத்தில் ஈடுபடுவார்கள். அத்தோடு அவர்கள் ஈடுபாடு எல்லாம் அவர்கள் தம் தத்தமதுவர்க்க நலன் சார்ந்த அடிப்படையிலானது என்பதை இயங்கியல் ரீதியில் ஆய்பவர்கள் புரிவார்கள் இவர்கள் தம் அபிலாசையடிப்படையிலான எண்ண ஒட்டத்தின் எல்லையையும், செயற்பாட்டையும் காலரீதியிலான சரித்திரம் தான் எடைபோடும். அந்த எடையின்படி இலங்கையின் சுதந்திரகால கட்டத்தில் முன்வைத்த ஐம்பதுக்கைம்பது கோரிக்கை முதல்—ஈழப் பிரகடனம் வரை நம் மக்களின் கோரிக்கை யாவும் வெறுங் கூக்குரலாகவே இருந்து வந்துள்ளன என்பது வெளிப்படை. இதனுலேயே "ஈழக் கோரிக்கையும்" வெறும் கூக்குரல்தானே எனக் கேட்க முற்பட்டோம்.

ஒவ்வோர் காலகட்டத்தில் நம்மவர்கள் முன்வைத்த கோரிக்கைக்குரிய பின்னணியை இயங்கியல் ரீதியில் புரிந்து கொண்டால்தான்

அக்கோரிக்கைகளின் எதிர்காலத்தைப்பற்றி எஃக
முடியும். இந்த வகையில் ஈழக் கோரிக்கையின்
பின்னணியைப் பார்க்க வேண்டியது முக்கியமா
கிறது. ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகள்
ஞானப்பிரகாச சுவாமிகள் போன்றோரின் சமய
மேம்பாட்டு சிந்தனை நாடியை மையயாகக்
கொண்ட அரசியல் கோட்பாடுகளே சேர்.
பொன் அருணாசலம் முதல் ஜி. ஜி. பொன்னம்
பலம் வரையீறாக முன்வைத்த அரசியல் கோரிக்
கைகள். அவர்கள் தம் நிலப்புரத்துவ வர்க்க நலனையும்,
அதன் மகுடமான சமய சம்பிரதாயத்தைப் பேணக்
கூடிய விதத்தில் அரசியல் கோரிக்கைகளை நிர்மாணித்
தார்கள். இது சர்வ ஜன சமூகப் பிரதிநிதித்துவம்
எனக் கருவெடுத்து ஐம்பதுக்கைம்பது என உரு
வெடுத்துப் பின் முடமானது. பின் பண்டிதர்கள்,
முதல் பாமரர்கள் வரையில் இணையோடிய மேலெழு
ழுந்தவாரியான அபிலாசையைப் பிரதிபலித்து நடேசர்
ஐயர் முதல் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் வரை
எழுதிய எழுத்துக்கள், ஒற்றையாட்சி ஒவ்வாது எனப்
புகட்டி சமஷ்டிக்குட்பட்ட தமிழராட்சியே சாலச்
சிறந்தது என்ற அடிப்படையிலான அரசியல் கோரிக்
கைகளை முன்வைத்தவர்கள் தந்தை செல்வா, தலைவர்
வன்னிய சிங்கம், தளபதி அமிர்தலிங்கம் மற்றும்
இராசதுரை, இராசமாணிக்கம், மௌலானா போன்
றோர்.

இதன் பின்தான் ஈழக்கோரிக்கை பிரகடன
மானது. இதன் பின்னணியைப் பார்க்கும் போது,



ஈழக் கோரிக்கை பண்ணாகத்தில் பிரகடனமாவதற்கு
முன் மக்கள் மத்தியில் பரவலான தனிநாட்டுச்
சிந்தனைப்பாடு இருந்ததில்லை எனக் கூறலாம். ஏன்!
ஆவரங்கால் மாநாட்டுக்கு முன்னமும் அப்படியே!
இனங் கண்டு கொள்ளக் கூடிய அளவுக்கு ஊறிவிட்ட
இனப்பற்றும், மொழிப்பற்றும் இழையோடியதே
யன்றி அவர்களிடம் நாட்டுப்பற்றோ. தனிநாட்டுப்
பற்றோ உறைவிடம் கொள்ளவில்லை. இதனால் தான்
தமிழ்பேசும் விவசாயிகளின் சொத்தான அல்லை. அம்
பாறை பறிபோகும் போதும், பாமர மக்கள் பாதிக்
கப்பட்டபோதும் ஈழக்கோரிக்கை எழவில்லை எனக்
கூறுகிறோம். ஏன் நம் இனத்தின் முதுகெலும்பான
மலையக மக்களின் அதுவும் தமிழ் பாட்டாளி வர்க்கத்
தின் உரிமையும், உடமையும் பறிபோனபோது ஈழக்
கோரிக்கை எழவில்லை. இவைகள் தான் போகட்டும்,
குடாநாட்டுப் பொருளாதாரத்தின் உயிர் நாடியான
புகையிலையின் மலையாள ஏற்றுமதி 1950-ம் ஆண்டு
தடைப்பட்டபோது ஈழக்கோரிக்கை எழவில்லை. ஏன்
அவ்வப்போது அப்புகையிலைச் சுறுட்டுத் தொழிலா
ளர்களின் ஜீவனம் பாதிக்கப்பட்டபோதும் ஈழக்
கோரிக்கை எழவில்லை. ஏன் இலங்கை அரசாங்கத்தின்
தமிழ் எழுதுவினைஞர்களின் ஜீவனப்பாடு பாதிக்கப்
பட்டபோதும் ஈழக்கோரிக்கை எழவில்லை! ஆகவே
இங்கு ஈழக்கோரிக்கையை எழுப்பியவர்கள் யார்
எனக்கேட்க வேண்டியதும், பதிலளிக்க வேண்டியதும்
தர்க்கீகமே!

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம்தொட்டு சிங்கள இனவெறி கொண்டோரின் திட்டமிட்ட 'இன ஒடுக்கல் கொள்கையால் பாதிக்கப்பட்டுவந்த தமிழ் இனத்தின் இறுதிக்காவலர்களான இளைஞர்களாலும், மாணவர்களாலுமே ஈழக்கோரிக்கையை முதலில் எழுப்பப் பட்டது. பாடசாலை மாணவர்கள் 'தரப்படுத்தலினால்' பல்கலைக்கழகம் செல்ல முடியாதபோதும், படித்த மாணவர்கள் தம்திறமைக்கேற்ப வேலை பெற முடியாத போதும், தத்தமது நடுத்தரவர்க்கப் பிரச்சனைகளைத் தமது இனத்தின் பிரச்சனையாகக் கருதினார்களேயன்றி அப்பிரச்சனையை இலங்கையின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனையாகக் கருதவில்லை என்பது உண்மை. ஆனாலும் ஒரு இனத்தின் 'எதிர்காலம்' அந்த இனத்தின் மொழியையும், மொழியோடிணைந்த சமூக பொருளியல் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என்ற அடிப்படையில் மொழிவாரிரீதியில் படிப்படியாகத் தமிழ் பாட்டாளி முதல் பாமரர் வரை, பின் தமிழ் இனத்தின் இறுதிக் காவலர்களாகிய தமிழ் மாணவர்களும், இளைஞர்களும் பாதிக்கப் பட்டபோது அவர்கள் தம் இனத்தின் உரிமைகளைப் பேணத் தனிநாட்டுக் கோரிக்கையை எழுப்பியது நியாயமும் தர்க்கீகமுமே! ஆனால் அவர்கள் தம் கோரிக்கை உடமைப்பாட்டு ரீதியில் உருவெடுக் காமல், வெறும் நடுத்தர வர்க்க இளைஞர்களின் உள்ளக்குமுறலாகவே வெடித்தெழும்பியது. ஆட்சி யாளர்களின் அநீதியைத் தட்டிக்கேட்க முடியாத தமிழர் தலைமைப் பிடத்தாலும், அந்த அநீதிகளால் தத்தளித்த தமிழ் இளைஞர்களும், மாணவர்களும்



தமது எதிர்காலத்தை நிர்ணயிப்பதன்மூலம் தமது இனத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்க முனைந்தது நியாயமே! இதன் பிரதிபலிப்பே-மாணவர் பேரவை-இளைஞர் பேரவைக்காலமும், அந்தக்காலக் கட்டத்தில் எழுப்பப்பட்ட ஈழக் குரலும்

தமிழ் இளைஞர்களினதும், மாணவர்களினதும் ஈழக் குமுறலுக்கு அப்போதைய அரசியல் பின்னணிக் காரணத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் காலகட்டத்தில்தான் மேற்கு பாகிஸ்தானின் பொருளாதாரக் கெடுபிடிகளிலிருந்து மீள்பட்டுத், தமக்கென ஒரு "வங்காளதேசம்' என்ற தேசிய அமைப்பை உருவாக்கிய கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் அரசியல் போராட்ட வரலாறு, இலங்கை வாழ் தமிழ் இளைஞர்களையும், மாணவர்களையும் மட்டுமன்றி தமிழர்களின் அரசியல் காவலர்களாகிய ஜனநாயக அரசியல் வாதிகளுக்கும் உற்சாகமூட்டியது. இருந்தும் தமிழ் இளைஞர்கள்-முக்கியமாக மாணவர்கள் ஈழக்குரல் கொடுத்தமைக்கு மற்றுமொரு காரணத்தை உணர வேண்டும்.

1965-ம் ஆண்டு முதல் உலக ரீதியில் இளைஞர்களையும், மாணவர்களையும் கவரக்கூடிய விதத்தில் சீனாவில் கலாச்சாரப் புரட்சி (Cultural Revolution) ஏற்பட்டது. இதன் தாக்கம் உலக மாணவர்கள் மத்தியிலும் ஏற்பட்டது, பாரிஸ், கலிபோர்னியா, டோக்கியோ, புதுதில்லி போன்ற தலைநகரங்களில் 1968-ம் ஆண்டு மாணவர்கள் ஏற்படுத்திய ஆர்ப் பாட்டங்கள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இதற்கு

இலங்கையிலுள்ள இளைஞர்கள் முக்கியமாகத் தமிழ் இளைஞர்கள் விதிவிலக்காகவில்லை. இந்த காலக்கட்டத்தில் தான் ஈழக் குமுறலும் தலை எடுத்தது. குமுறல் வெடித்துக் கிளம்பும் போது கூக்குரலாக மாறி மக்கள் மத்தியில் பரபரப்பூட்டுவது நியதி வெறும் பரபரப்பு (Spontanitty) ரீதியில் மக்கள் அபிலாசையைப் பெற்று அரசியல் காவலர்களான ஜனநாயகவாதிகள் இந்த மக்கள் பரபரப்பைக் கண்டு பாராமுகமாக இருந்திருக்க முடியாது. இந்தக் கால கட்டத்தில் தான் பண்ணாகம் மாநாடும், அக்கால கட்டத்துக் கருத்தரங்குகளும் இடம்பெற்றன.

இங்கு மற்றுமொரு அரசியல் தார்ப்பரிய உண்மையை உணர வேண்டும். அதாவது மக்கள் மத்தியிலோ, அல்லது அம்மக்களின் ஒருசாராரின் – அது பாட்டாளி வர்க்கமாயினும் சரி. அல்லது பாமரராயினும் சரி, இல்லை நடுத்தர வர்க்கத்தினரிடமாயினும், அல்லது அம்மக்கள் சமுதாயத்தின் இளைஞர் சாப்தத்தினராயினும் சரி, அவர்கள் மத்தியில் எழக்கூடிய எண்ண ஓட்டங்களையும், அபிலாசைகளையும் உயிர்நாடியாக வைத்தே அரசியல் கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன. இந்த வகையில் நடுத்தர வர்க்க சிந்தனையுடைய இளைஞர்களின் எண்ணங்களையும், அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் வண்ணம் ஈழக்கோரிக்கைக்கு நடுத்தர வர்க்க அரசியல் வாதிகள் இணங்கியது அரசியல் ராஜ தந்திரமே! அதன் பரிணாமமே பண்ணாகப் பிரகடனம். அதன் பொறுப்பாளிகளில் இலங்கை அரசியல் வரலாற்றில் ஒற்றை ஆட்சி ஒவ்வாது என்பதால் நியாயமான முறையில் சமஷ்டிக்குட்பட்ட தமிழாராட்சி கோரிய தமிழரசுக் கட்சியினரும், பண்ணாகத்தில் உருவான தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் குத்துவிளக்கேற்றியதும் அரசியல் சூட்சுமமே. அதன் காரணமோ என்னவோ இல்லை அவர்கள் உள்ளாந்தர உண்மைப்பாட்டை எடுத்துக் காட்டவோ என்னவோ, தமிழ் ஈழக்கோரிக்கையைப் பிரகடனம் செய்த விடுதலைக் கூட்டணியினர் இன்று மாவட்ட சபையின் மகோன்னதம் பற்றிப் பறை சாற்றுவது. ஆனால் மாவட்ட சபை பற்றியதல்ல இன்றைய பிரச்சினை. இதனாலேயே இன்று எழுந்துள்ள கேள்வி மாவட்டசபை மசோதா பற்றியதல்ல– இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பற்றியது- ஈழக்கோரிக்கை பற்றியது எனக் கூற முற்பட்டோம். அதன்படி ஈழக்கோரிக்கையின் முரண்பாடுகளைப் பார்க்க முனைந்தோம்.

ஈழக்கோரிக்கையைத் தேசிய ஜனநாயக அரசியல் ரீதியில் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் 1977ம் ஆண்டுத் தேர்தலில்முன்வைத்ததும், அதன் அச்சாணியான பொறுப்பாளிகளும் காவலர்களும் ஜனநாயக அரசியல்வாதிகளின் கூட்டணியினரே. ஆனால் இந்தக் கூட்டணி அங்குரார்ப்பணப்படுத்தப் பட்டபோது மேல்மட்டத்து ஓட்டு மொத்தமான ஓரளவில் இலங்கைப் தமிழர்களின் ஒரு அங்கமான இசுலாமியத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் சேர்க்கப்படவில்லை. இவர்கள் தமிழர்கள் இல்லையா? என நாம் கேட்க முனையும்போது ''தமிழ் ஈழக் கோரிக்கையின்'' மற்றுமொரு

முரண்பாடு தெளிவாகிறது. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் மேல்மட்டத்துப் பிரதிநிதிகள் ஜனநாயக ரீதியில் வாக்களித்த வடகிழக்கு மக்களின் வாக்கைப் பெற்று 1956ல் தந்தை செல்வா, தலைவர் வன்னியசிங்கம், கல்முனை காரியப்பர், பொத்துவில் முஸ்தாபா ஆகிய மூவரையும் இணைத்து சமஷ்டிக்குட்பட்ட தமிழரசு கோர முடியுமானால் அடித்தளவர்க்கத்துத்தமிழ் பேசும் மக்கள் சாதிசமய வேறுபாடின்றி இலட்சிய ரீதியில் இணைந்து சுயநிர்ணயம் பெற முடியாதா? என்ன? அந்த இலட்சியக் கோரிக்கையே ஈழம். அதைக் கோருபவர்களே ஈழவர்கள். அவர்கள் பேசும் மொழியே தமிழ்.

இந்த முழுமையான ஈழக் கோரிக்கைக்கும், தமிழ் ஈழக் கோரிக்கைக்கும் இமாலய மாறுபாடுகள் உண்டு. இம்முரண்பாட்டைப் புரியவைக்கவோ என்னவோ தமிழ் ஈழக் கோரிக்கைக்கு வக்காலத்து செய்யும் அரசியல் விற்பனர்கள், கிழக்கு மாகாணத்தில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள் ''இஸ்லாமிய ஈழம்'' கோரலாம் எனப்பகிரங்மாகப் பறை சாற்றுகின்றார்கள்! அப்படிப் பகரும்போது இலங்கைவாழ் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்கு-மலையக பகுதிகளைப் பார்த்து புள்ளி விபரப்படி இதுசாத்தியமா என சிந்தித்தார்களா? எனக் கேட்கத் தோன்றுகிறது. அப்படித் தமிழர்களின் ஒரு சாராரான இஸ்லாமிய தமிழர்கட்கு''இஸ்லாமியஈழம்'' எனப்பகரும். 'தமிழ் ஈழக் கோரிக்கையாளர்கள் ''நம்மவர்களில் மற்றொரு சாராரான கிறிஸ்வ அல்லது சைவ மக்களுக்கெனத் தனித் தமிழ் ஈழம் கோர அனுமதிப்



பார்களா? எனக் கேட்கத் தோன்றுகிறது. இங்குதான் 'தமிழ் ஈழக் கோரிக்கையின் முக்கிய முரண்பாட்டையும் அதன் பொதுக் காவலர்களான கூட்டணியினரின் அந்தரங்க சுத்தியையும் அரசியல் சூட்சுமத்தையும் பற்றிக் கேள்விக்குறி எழுப்பவேண்டிருக்கிறது.

இருந்தும் கடந்த ஆய்வில் கூறியது போல் ஒரு இனத்தின் அடித்தள வர்க்கத்து மக்கள் பாதிக்கப்பட்டபோது குரல் எழுப்பாத அவ்வினத்தின் மேல்மட்டத்தினரும் முன்னோடிகளும் தமக்கும் தம்மவர் சலுகைகளுக்கும் பாதிப்பு ஏற்படும்போது குரலும் கூக்குரலும் எழுப்புவது இயங்கியல் நியதி. ஆனால் இந்தக் கூக்குரலை இயங்கியல் ரீதியில் இதர சாராரின் ஏகோபித்த குரலாகவும், குறிக்கோளாகவும், இலட்சியமாகவும் முழுமை பெறச் செய்ய வேண்டியது தர்க்கீக வாதிகளினுடைய கடமை. ஏனெனில் தத்துவ வித்தகனின் கருத்துப்படி ஒரு சமுதாயத்தின் அல்லது இனத்தின் விமோசனப் போராடடத்தின் கூர்மைக்கட்டத்தில் அப்போராட்டத்தின் அச்சாணியான பாட்டாளிவர்க்கத்துடன் நடுத்தர வர்க்கத்தவர்கள் இணைவார்கள் என்பதனாலேயே! ஆகவே இன்று உருவாகியுள்ள ஈழக் கோரிக்கையின் குறிக்கோளுக்குரிய இலட்சிய சூழ்நிலைகளை (objective conditions) ஆதாரமாக வைத்து அதற்கு அடித்தள சூழ்நிலைகளை (subjective conditions) முழுமை பெறச் செய்ய வேண்டும். அத்தகைய அடித்தள சூழ்நிலைகள் ஈழத்தில் இன்று உருவாகி வருவதை அவதானிக்கலாம். இது காலவரை மலையகத் தொழிலாளர்கள் பாதிக்கப்

பட்டது மட்டுமன்றி அல்லையிலும், கந்தளாயிலும், அம்பாறையிலும் விவசாயிகள் தமது நிலச் சொத்தை இழந்தது மட்டுமன்றி, எழுதுவினைஞர்கள் தமது சம்பள உயர்வை இழந்தது மட்டுமன்றி, மாணவர்கள் பட்டப் படிப்பு வாய்ப்பை இழந்தது மட்டுமன்றி, இளைஞர்கள் வேலைவாய்ப்பை இழந்தது மட்டுமன்றி, நம் இனத்தின் ஏனைய சாராரும் இன்றைய ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரக் கொள்கையினால் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது பட்டவர்த்தனம். அந்தப் பாதிப்புக்களை இயங்கியல் ரீதியில் ஆய்ந்து மக்கள் உணரக்கூடிய விதத்தில் எடுத்துக் கூறுவதன் மூலம் தான் அடித்தளக் காரணங்களும், சூழ்நிலைகளும் அம்பலமாகும். இந்தக் கைங்கரியம் தர்க்கீகவாதிகளின் தலையாய கடமை. இதையே புரட்சிப் புரவலனும் வற்புறுத்துகின்றான். அவ்விதம் நம் இனத்தின் ஒவ்வோர் சாராரின் பாதிப்புக்களுக்கான காரணங்களை அவர்கள் உணரும் போது தான் மக்கள் போராட்ட அணியின் அச்சாணியான பாட்டாளி வர்க்கத்துடன் சகலரும் இணைவர். அப்போது தான் மக்கள் போராட்டத்திற்கான அணிவகுப்பு ஆரம்பமாகும்.

# 5 ஈழவர் பாரம்பரியமும், பண்பாடும்

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் — வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்."

என்று பாரதி பாடும்போதே உழவுத் தொழிலின் தனித்தன்மையையும், அதன் அடிப்படையில் உருவாகும் ஏனைய தொழில்களின் பெருமையையும் வலியுறுத்துகிறான். அத்தோடு உழவர்களுக்கும் ஏனைய தொழிலாளர்களுக்கும் உள்ள பிணைப்பையும் சமூக அம்ச வேறுபாடுகளையும் முன்வைக்க முனையும் போது, 'உழவர்கள்' (Tillers) தொழிலாளர்கள் (Workers) ஒன்றிணைந்த பாட்டாளி வர்க்கம் (Proletariat) என்ற இயங்கியல் ரீதியான பரிசீலனைமூலம் உண்டு கழித்திருப்போர் (Leisure class) இல்லாத சமதர்ம சமுதாயக் கொள்கையையும் கற்பிக்கிறான்.

ஈழவரிற்கான ஒரு சமதர்ம சமுதாயத்தை நாடுவோர் ஈழவர் வரலாற்றையும் இயங்கியல் ரீதியில் அணுகவேண்டும். வெறும் சரித்திர சம்பவ கண்கொண்டு பார்க்காமல், ஈழவரின் சமூக பொருளியல் அடிப்படையில் பார்க்கும் போது உழவுத்தொழிலுக்கும் ஈழவர்க்கும் உள்ள உறவைப் புரிவார்கள்.

மொழிக்கும் மக்களுக்கும் அவர்கள் தம் தொழிலுக்கும் இடையே இருக்கக்கூடிய இறுக்கமான தொடர்பை உணர்வார்கள்.

அந்த வகையில் பார்க்கும்போது ஈழவர்கள் ஆதியில் எந்த அடையாளமும் இல்லாத மக்கள் கூட்டமாக இணைந்து தொழில் செய்தார்கள். இவர்கள் கூட்டுப்பாடு உறவை வலுப்படுத்தியது அவர்கள் பேசிய பேச்சுக்கள். 'மொழி, ஆரம்பத்தில் இடத்திற்கேற்ப நிலைப்பாட்டிற் கேற்ப ஊர்ப்பாசையாகவும் கொச்சையாகவும் (Dialects) இருந்தது. ஆனால் ஒரு சமுதாயத்தின் நாகரீக வளர்ச்சியில் ஏற்படும் சமூக பொருளாதார அரசியல் ஸ்திரணத்தினாலும் நிலைப்பாட்டினாலும் ஊர்ப்பாசை அல்லது கொச்சைப்பாசை உறுப்பான மொழி வடிவம் பெறுவதோடல்லாமல் தனித்துவமான தேசிய மொழியாகிறது' இது இயங்கியல் நியதி. இந்த நியதியின்படி பல நூற்றாண்டுகளுக்கு முன்னம் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலும் காடு மலையில்லாத வடகிழக்கு நிலப்பகுதிகளிலும் வாழ்ந்து படிப்படியாகச் சமூக நாகரிக வளர்ச்சி பெற்று வந்த மக்கள் கூட்டமாக இணைந்து உழவுத்தொழிலை மேற்கொண்டனர்.

உழவுத்தொழிலை மேற்கொண்ட மக்கள் பேசிய பேச்சுக்கள் மொழிவடிவம் பெற்று தமிழ் ஆகப் பரிணமித்தது. தமிழ் மொழியைப் பரம்பரை பரம்பரையாகப் பேசிய மக்கள் தம்முடைய சமூக



பொருளாதார அரசியல் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கவும்—கட்டி வளர்க்கவும் தாம் வாழ்ந்து வளம் படுத்திவந்த பகுதிகளை உடமைப் பாட்டு ரீதியில் 'ஈழம்' என அழைக்கத் தொடங்கினர். இதே சம வேளைகாலத்தில் அல்லது அதற்கு முன்பே பாரதத்திலும் தமிழ் நாகரிகம் திளைத்து சிறப்பாக வளர்ந்து கொண்டிருந்தது. இது திராவிடர் நாகரிகம் என்பதாகும். இதற்கும் இந்துநதி நாகரிகத்திற்கும் 'ஹாரப்பா' 'மொஹஞ்சதாரோ' நாகரிகத்திற்கும் சொந்தபந்தம் உண்டு என்பாரும் உண்டு. அதை உறுதிப்படுத்துவது அவர்கள் கடமை. ஆனால் இன்றைய இந்தியா அல்லது அன்றைய திராவிட நாட்டில் தமிழ் அரசோச்சியபோதும் தமது தனித் தன்மையையும், தேசிய சுதந்திரத்தையும் உறுதிப்படுத்த, ஈழவர் தமது பிரதேசததை மொழிவாரி அடிப்படையில்லாமல் உடமைப்பாட்டு ரீதியில 'ஈழம்' என அழைக்கத் தொடங்கினர். நம்முன்னோரும் அவர் தம் தலைவர்களும் இந்த 'ஈழம்' என அழைதத பகுதியை 'வீரமாநகர்' ஆகக் கண்டான் கம்பன். இராவணன் ஆண்ட நாடாகக் கண்டான் வால்மீகி. 'ஈழமாமணித் திருநாடு' எனப்பறை சாற்றியது சங்க காலத்துக்கு முன்னும் பின்னும் எழுந்த இலக்கிய காலப் படைப்புக்கள்.

பின் 'எல்லாளன்' ஆண்ட நாடு என்றார்கள். ஒல்லாந்தரும், போர்த்துக்கேயரும் இலங்கைக்கு வந்து ஆட்சி நடத்தியபோதும் தமிழர்கள் தனித்துவமான ஆட்சி நடத்தினார்கள். இதற்கு 'சங்கிலியன் தோப்பு

சான்று' என்றார்கள் சரித்திர ஆசிரியர்கள். ஆங்கிலேயரின் ஆட்சி வருமுன் ஆதிக்க பலமுடையவர்களாயிருந்தவர்கள் தமிழர்கள் என்கிறார்கள் அரசியல்வாதிகள். ஆங்கிலேயரின் ஆட்சி அகன்றதும் அதிகாரம் கைவிடப்பட்டு மாறியதேயன்றி, தமிழர்கள் தம் அடிமை நிலை மாறவில்லை என்றனர் ஆங்கிலேயர் ஆட்சியில் அடிவருடி வாழ்ந்தவர்கள். இதற்கெல்லாம் பரிகாரமாக, சம அந்தஸ்துக் கேட்டார்கள் மறைந்த தலைவர்கள். சரிவராமல் போகவே, சமஷ்டி அரசியல் சாசனத்தை முன்வைத்தார்கள் முன்னைய தலைவர்கள். இதற்கும் ஒற்றையாட்சி அரசாங்கம் இணங்காமல் போகவே தனிநாட்டுக் கோரிக்கையை தலை எடுக்கச் செய்தார்கள் சில தலைவர்களும், அரசாங்கத்தில் அதிருப்தி அடைந்தவர்களும்; இதை ஆரம்பத்தில் தட்டிக்களித்தனர் தமிழ்த் தலைவர்கள். பின் இப்பிரக்ஞையைப் பிரதிபலிக்கச் செய்தார்கள் தமிழ்த் தலைவர்களும் அவர்கள் தம் அரசியல் நிறுவனங்களின் காவலர்களும். ஆதரவு நல்கினர் இளைஞர்களும் மற்றையோரும். மக்களும் தமது உடமையைப் பேணவும் காக்கவும் ஈழக்கோரிக்கையை முன்வைத்தார்கள்.

ஆகவே, வெறும் ஊகம், உணர்ச்சி, உணர்வு என்ற நிலையில் மட்டுமல்லாது தர்க்கீக அடிப்படையிலும், இயங்கியல் ரீதியிலும் கூட 'ஈழம்' என்பது இந்த நூற்றாண்டின் இறுதிப் பாட்டில் எழுப்பப்பட்ட குரலல்ல. பல நூற்றாண்டுகளாக ஈழவர் தம்மை மொழிவாரி இனமாக இனங்கண்டுகொண்ட காலம்தொட்டு, தமது உடமைப்பாட்டை உறுதிப்படுத்த 'ஈழம்' என்ற அடித்தளம் (Base) அவர்களின் இதய



வேட்கையாக இருந்து வந்தது. ஈழவர்களுடைய அடித்தளத்துக்கான அபிலாசை காலத்துக்குக் காலம், அவர்கள் தம் பொதுவுடமை உடமைப்பாட்டு ரீதியில்லாமல் அவர்கள் தம் முன்னோடிகளின் உரிமைப்பாட்டு ரீதியில் அமைப்பு வரையறை பெற்று ஸ்திரணப்படுத்தப்பட்டது. இதையே அரசர்கள் ஆட்சி முதல் சங்கிலியன்தோப்பு வரை கண்டோம். பின் உலக அரசியல் மாற்றங்களால். நிலப்பிரபுத்துவ நிலைமுதல் மக்கள் அடிப்படையில், அவர்களின் முன்னோடிகளின் கட்சிகளாகவும், அவர்கள் வர்க்க எண்ணப்பாட்டிற்கமைந்த கோரிக்கைகளாகவும் இருந்து வந்தது. இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் கோரிக்கையாக ஈழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு, ஈழவர்களாலும் 1977ஆம் ஆண்டுத் தேர்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஒரு நீண்ட தொடர்காலச் சுற்றுக்குப்பின் மீண்டும் நம் மக்கள் தம்முடைய உடமைப்பாட்டை உறுதிப்படுத்தத் தமது அடித்தளத்துக்கான அபிலாசையான ஈழக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். உரிமை வேறு, உடமைப்பாடு வேறு ஈழக்கோரிக்கை வெறும் உரிமையா? அல்லது உடமைப்பாடா? இதனாலேயே கடந்தகால நம்பிக்கையீனத்தாலும், எதிர்கால எண்ணப்பாட்டாலும் ஈழக்கோரிக்கைபற்றி கேள்விக் குரல் எழுப்ப முற்பட்டதோடல்லாமல், அதன் முரண்பாடுகளையும் பார்க்க முனைந்தோம். இந்த முயற்சியில் ஈடுபடும்போது, ஈழவர், ஈழம், மொழி இவற்றின் நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

ஆதிகால சமூக பொருளியல் நிலைப்பாட்டை ஆய்ந்த தத்துவவித்தகன் கார்ல் மார்க்ஸ், நிலப் பிரபுத்துவம், முதலாளித்துவம் போன்ற நிலப்பாடுகளை அறியத்தரும்போது, "ஆசியாவிலுள்ள உற்பத்தி முறை (Asiatic mode of Production) என்பதனையும் குறிப்பிடுகிறான். இதுபற்றி ஆழமான ஆராய்ச்சி செய்யப்படாவிட்டாலும், கூட்டுறவுத்தன்மையான உற்பத்தியும், பகுந்துண்ணலும் (Communal Production and Distribution) ஆசியாவில் இருந்தது என்பதனை வற்புறுத்துகிறான். இதையே வள்ளுவனும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ......" என்று கூறும்போது உழவர்கள் மத்தியில் வழமைப்படுத்தியிருந்த கூட்டுறவத் தன்மையான உற்பத்தியையும், பகுந்துண்ணலையும் அறியத்தருகிறான், பின் பகுந்துண்ணல் ஒழுக்கம் வழுகியபோது "பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் தொகுத்தவற்றி லெல்லாம் தலை" என்று "கம்யூன்" தன்மையான உற்பத்தியையும், விநியோகத்தையும் சிறப்புப்படுத்துகிறான். அத்தோடு "அஃதிலார் தொழுதுண்டு பின் செல்வர்" எனவும் சொல்லி வைக்கிறான்.

இயங்கியல் ரீதியில் இந்தச் சமூகநிலை மாற்றம் ஈழவருக்கும் ஏற்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது. உழவுத்தொழிலை மேற் கொண்ட ஈழவர்கள், கூட்டுறவுத் தன்மையான உற்பத்தியையும், விநியோகத்தையும் வழமைப் படுததியிருந்தார்கள் என்பது தர்க்கீகம். பின் அந்தக் காலகட்டத்தில் உலகிலும், அண்டை நாடுகளிலும் ஏற்பட்ட



மாற்றங்களால் மேற்படி வழமையைக் கைவிடத் தொடங்கினர். அதனால் தொழுதுண்டு வாழத் தொடங்கியது மட்டுமல்லாமல் வேறு நாடுகளுக்கும் செல்லத் தொடங்கினர். அந்நிய காலனித்துவ காலத்துக்கு முந்திய நிலப் பிரபுத்துவ காலத்துக்கு முன்னரே ஈழவர் இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் குடியேறினர். இவர்கள் ஈழவர் என இன்றும் கேரளாவில் அழைக்கப்படுகின்றனர். "மலையாள நாட்டில் இன்று ஈழவர் என்று அழைக்கப்படுகின்ற வகுப்பார் இலங்கையிலிருந்து அந்நாட்டில் குடியேறிய வரேயாவர். ஈழவர் என்ற சொல்லே அவர் ஈழ நாட்டிலிருந்து வந்தவர் என்பதை உணர்த்துகின்றது" என பேராசிரியர் சேதுப்பிள்ளை வலியுறுத்துகிறார். மேலும் கேரளாவில் உள்ள ஈழவர்களைப்பற்றிய பூர்வீக வரலாறு குறித்து ஆதாரம் காட்டும் நூல்களில் ஒன்றான "மலபார் யாப்பு" என்னும் நூலின் ஆசிரியரான வில்லியம் யோகன் என்னும் ஆங்கிலேயர் ஈழவர்கள் கேரளாவின் ஆதித்திராவிடர்கள் அல்லவெனவும், அவர்கள் ஈழத்திலிருந்து முதல் நூற்றாண்டுக்கும் ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடையே வந்து குடியேறினர் எனக் கூறிவைத்தார். இவர் கருத்தைப் பிரபல சரித்திர சமூகவியல், பூர்வீகவியல் ஆராய்ச்சியாளர்களான இ. தேஸ்ரன், சி. ஏ. அய்ன்ஸ், கிருஷ்ணய்யர், டி. கே. வேலுப்பிள்ளை போன்றோர்தத் தமது ஆய்வுகளின்மூலம் மெய்ப்பித்துள்ளார்கள். ஆனால் இந்தியாவில் தலைவிரித்தாடிய சாதி, சமய வேறுபாடுகளால் கேரளாவில் ஈழவர்கள் தாழ்த்தப் பட்டவர்களாகவே கருதப்பட்டு வருகிறார்கள் என்பது

உண்மை. இது ஒரு தேசத்தைவிட்டு வேறு தேசத்திற்குச் சென்று குடியேறியவர்களுக்குச் சமத்துவ, சமதர்ம, சமுதாயமில்லாத நாடுகளில் ஏற்படும் பரிதாபகரமான அடையாள முத்திரை. ஏன்! இலங்கையில் ஓரிரு நூற்றுண்டுகளாக வாழ்ந்து ஈழத்தையே தாயகமாகக் கொண்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களை அவர்கள் தமிழர்களாக இருந்தும் தமிழ் பேசியும் இந்தியர் என ''நம்மடையாட்கள்'' அதாவது, யாழ்ப்பாணத்தவர்கள் அழைத்து வந்ததை மறைக்க முடியாது. அதேபோல் ஈழத்திலிருந்து சென்று குடியேறியவர்களைக் கேரளாவின் பூர்வீக குடிகள் தாழ்த்தி வந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. சென்றேறு குடிகள் தாழ்த்தப்பட்டு விட்டார்கள் என்பதற்காக நாம் வரலாற்று உண்மையை மறைக்கவோ, மாற்றவோ கூடாது. ஈழம்வாழ் மக்கள் ஈழவரே. இவர்கள் மொழி தமிழ். இதனுலேயே நாம் ஈழவர், நமது மொழி தமிழ். நமது நாடு ஈழம் என்ற இலங்கை வாழ் தமிழர்களுக்கான புதிய யுகத்தையும், சகாப்தத்தையும் உருவாக்க வேண்டும்.

ஈழவர், மொழி, ஈழம் என்ற இணைப்பிலும் பிணைப்பிலும் மொழியின் முக்கியத்துவத்தைக் காண்கின்றும். ஈழவரின் வரலாற்றில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனுல் அமைப்புக்கள் (Super Structure) மாறியபோதும், கலை, கலாச்சாரப் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டபோதும், தேசவழமையில் முரண்பாடுகள் ஏற்பட்டபோதும் பல யுகங்களாக மொழி பேணப்பட்டு வந்துள்ளது. மொழியையும் மக்களையும் பேணுவது அடித்தளம். எப்படி மக்களையும் அடித்தளத்தையும் மொழி பிணைக்கிறதோ அதே போல் மக்களையும் மொழியையும் கட்டிக் காத்து வருவது அடித்தளம் ஈழவருக்கும், தமிழ்மொழிக்கும் அடித்தளம் ''ஈழம்'' இதனுலேயே ஈழக்கோரிக்கையும் வலுவடைகிறது.

ஆதியில் பகிர்ந்துண்டு பல்லுயிரும் ஓம்பி வாழ்ந்து வந்த ஈழவரின் கூட்டுறவு அமைப்பில் எந்தவித சமூக, சமய வேறுபாடுகளும் இருந்ததில்லை. பின் ஏற்பட்ட அமைப்பு மாற்றங்களால் பல சமூகப் பிரிவுகள் மட்டுமல்லாமல், சமய வேறுபாடுகளும் ஏற்பட்டன. இருந்தும் இவர்களை இணைப்பதும், பிணைப்பதும் மொழியும் அடித்தளமுமே. அடித்தளம் என்னும் போது வெறும் நிலப்பரப்பு அடிப்படையிலான அடித்தளத்தை மட்டுமல்லாமல், கூட்டுறவுத் தன்மையான உற்பத்தியும் பங்கீடும் அமைந்த சமுதாயத்தை அடித்தளமாகக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மக்களும், மொழியும் அடித்தளமும் இறுகப் பிணைக்கப்படும். இதனுலேயே ''எந்த வனத்தில் வாழ்ந்தாலும் ஈழத் தமிழர் ஈழவரே, சொந்தம் என்பது உறுதியடா, இது சோசலிசத்தின் சுருதியடா'' என்று சமதர்ம, சமுதாய அடிப்படையிலான ஈழவர் நிலைப் பாட்டையும், அதற்கான எண்ணப்பாட்டையும் உறுதிப்படுத்த வேண்டும்.

# 6 உடைமைக்கான போராட்டம்

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பரந்த நோக்கிற்கும், 'உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்'' என்ற தத்துவ வித்தகனின் நோக்குக்கும் இடையிலான தர்க்கீக வேறுபாட்டைக் காணலாம். முன்னது பூர்ஷுவா சிந்தனையின் அடிப்படையிலானது. பின்னது வர்க்க ரீதியிலானது. இருந்தும் முன்னதில் மற்றுமொரு தர்க்கீக உண்மையை ஊகிக்கலாம்.

அதாவது ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தமிழ்ப் புலவன் 'நன்றும் தீதும் பிறர் தரவாரா'' எனச் சொல்லிவைக்க மறக்கவில்லை. அதாவது ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஈழப்பிரகடனத்தை உலகிற்குப் பறைசாற்றுகிற அதே வேளை ஈழத் தமிழரின் — அதாவது ஈழவரின் எதிர்காலமும், அவர்கள் தம் விமோசனமும் ஈழவர் அல்லாதோர் கையிலில்லை. அவர்கள் தம் தன்நம்பிக்கையிலும், போராட்ட விதத்திலும்தான் தங்கியுள்ளதே அன்றி பிறர் கையில் இல்லை என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். இதுபற்றி ஈழத்தமிழர்களின் இன்றைய முன்னோடிகளான ஜனநாயக அரசியல் தலைவர்களுக்கும், ஏனைய தமிழர் தம் அரசியல் சிந்தனை ஈடுபாட்டினருக்கும், தர்க்கிக வாதிகளுக்கும், மக்களுக்கும் எந்தவொரு மாறுபட்ட கருத்தும் இருக்க



முடியாது. ஆனால் ஈழத்திற்கான மக்கள் சகாப்தத்தை, ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க அணுகும் முறையில் தான் மாறுபாடு இருக்கக் கூடும். இது இயங்கியல் உண்மை. இந்த உண்மையை இயங்கியல் வரலாற்றில் படிக்கக் கூடியதாய் உள்ளது. இல்லாவிட்டால், உலகத்தொழிலாளர்களின் நலன் பாட்டிற்கு உழைத்த தத்துவவித்தகனின் தத்துவத்தை, நிதர்சனமாக உலகத்தொழிலாளர்களுக்கு, ''ருஷ்யப் புரட்சி'' மூலம் புரவலன் நிரூபித்துக் காட்டியிருப்பானா? ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என்று 1848 ஆம் ஆண்டிலேயே கார்ல்மார்க்ஸ் குரல் கொடுத்த போதிலும், 1905–1917-ம் ஆண்டுக் காலகட்டத்தில்தான் ஒரு தொழிலாளர் புரட்சி மூலம் முதலாவது சோசலிச சோவியத்தை உருவாக்க முடிந்தது. இதன் பரிமாணங்களை உலகத் தொழிலாளர்களின் உன்னத நாளான மே நாளில் பார்க்க வேண்டியது ஈழவர்களினுடைய கடமை. ஆனால் இங்கு இயங்கியல் ரீதியில் அடிப்படைத் தத்துவ உண்மையை ஆயவேண்டும்.

சகல வர்க்கத்து மக்களையும், சகல மட்டத்து தொழிலாளர்களையும் கொண்ட பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் (Dictatorship of the Prolitareat) பற்றிய, தத்துவத்தைத் தந்த மார்க்சினுடைய வாழ்நாள் காலத்தில், ஒரு வெற்றிகரமான தொழிலாளர் புரட்சி ஏற்படவில்லை. அவ்வப்போது ஜெர்மனியிலும் பிரான்சிலும் ஏற்பட்ட புரட்சிகளின் தோல்வி காரணமாக அதற்கான காரணங்களையும், அக்காரணங்களுக்கு அடிப்படை 'முதலாளித்துவம்'

என்பதனால் அக்காலகட்டத்தில் முதிர்ந்த முதலாளித் துவ நாடாகவிருந்த பிரித்தானியாவில் ஆய்வு நடத்திக் கொண்டும், ஆக்கபூர்வமான அரசியல் வேலைப்பாடு களையும் கவனித்துக் கொண்டிருந்தார் மார்க்ஸ். இங்கிருந்து தான் 'கம்யூனிசத் திட்டத்தை' வெளியிட் டார். பின் 'டாஸ் கப்பிற்றல்' எழுதிமுடித்தார். இன்னும் இன்னோரன்ன ஆய்வுகளை (இருபதுவரை) எழுதி முடித்தார். அத்தோடு 'கம்யூனிச அகிலம்' என்ற இயக்கத்தையும் வலுவடையச் செய்தார். இந்தக் காலகட்டத்தில், இவர் கருத்தின்படி,

''முதிர்ந்த முதலாளித்துவ நாடுகளில், முக்கியமாக பெரிய பிரித்தானியாவில் பொருளாதாரக் கஷ்டங்கள் கூர்மையடையும்போது 'தொழிலாளர் சர்வாதிகாரம் ஏற்படுவதன் மூலம் சோசலிசம் மலரும் என்பதே. இதன் எதிரொலியாக உலகநாடுகளிலும் சோசலிச மயமான பொருளாதார அமைப்பு ஏற்படும்'' என்ற ஊகமே மார்க்சின் கருத்து.

ஆனால் இந்தக் கருத்து புரட்சி மயமாக்கப்பட்டு தொழிலாளர் புரட்சி ஏற்படாத அளவுக்கு அந்தக் காலகட்டத்தில் 'பூர்சுவா ஜனநாயகம்' தலையெடுத் திருந்தது. பெரிய பிரித்தானியாவின் தொழிலாளர் களையோ, பிரான்சின் தொழிலாளர்களையோ, ஜேர்ம னியின் தொழிலாளர்களையே புரட்சிப் பாங்கில் ஈடுபடாத அளவுக்கும் அவர்கள் ஏனைய உலகத் தொழிலாளர்களின் நலத்தில் அக்கறை கொள்ளாத



அளவுக்கும், அவர்களுக்கு உகந்த வேதனத்தைக் கொடுக்க முடிந்தது. இந்நாடுகள் கையாண்டுவந்த உலகச் சுரண்டலின் மூலம் அவ்வப்போது ஏற்பட்ட வேதன உயர்வுப் போராட்டங்கள், மற்றும் உரிமை குறித்த போராட்டங்களில் தொழிலாளர்கள் இரத்தம் சிந்த உரிமைகளும், பொறுப்புக்களும் பூர்சுவாக்களின் கையில் சேர்ந்தது. இவைகள் அனைத்தும் வெறும் தொழிற் சங்க ரீதியிலான போராட்டங்களாகவே இறுதியில் முடிந்தது. இதன் தாக்கங்களை இதர நாடு களிலும் காணக்கூடியதாகவிருந்தது. இலங்கையில் கூட சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் நடந்த தொழி லாளர் போராட்டம் வெறும் உரிமைப் போராட்டமா கவே முடிந்தது. உடைமைப்பாட்டுப் போராட்டத்துக் கான தொழிலாளர் புரட்சியாக ஏற்படவில்லை. இல்லா விட்டால் இலங்கையின் பாட்டாளி வர்க்கத்தின் முது கெலும்பான தோட்டத் தொழிலாளர்களின் உரிமை கள் பறிபோயிருக்குமா? இல்லை அவர்கள் உரிமைக் கான இயக்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிர சின் தலைவராகப் திரு.தொண்டமான் இருப்பாரா?

இருந்தும் மார்க்சினுடைய அடிப்படைத் தத்து வம், அதாவது ''தொழிலாளர்களுடைய சர்வாதிகா ரம் தளரவில்லை.'' இதை நினைப்பூட்டுவது மட்டுமல் லாமல் நிரூபித்துக் காட்டியது, 'போல்சிவிக் போராட் டமும் சோவியத் ஒன்றியமும்'. 'போல்சிவிக்' போராட் டத்தின் மூலம் புரவலன் லெனின் மார்க்சிய சித்தாந் தத்துக்கு முழுமையான வடிவம் கொடுத்தான்.

அதாவது மார்க்சிய தத்துவத்தை அனுட்டிப்பதன் மூலம் ருசிய சூழ்நிலையில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டதுடன் அவைகளைப் பாடமாகவுந் தந்துள்ளான்.

உதாரணத்துக்கு, தொழிற்சங்க ரீதியானமுறையில் தொழிலாளர்களுடைய வெறும் பொருளாதார போராட்டம் (Economic Struggle) மூலம் ஜாரின் ஆட்சியை வீழ்த்தி, ஆட்சியைக் கைப்பற்றி, சீர்திருத்தமயமான (Reform) முறையில், ருசியாவை முன்னெடுத்துச் செல்லலாம் என்று கூச்சலிட்ட ஒருதரப்பட்ட ருசிய சமூக ஜனநாயக வாதிகளை முதலில் சாடுகிறான். இந்தப் 'பொருளாதார வாதத்துக்கு' எதிரான போராட்டமே லெனினின் ஆரம்பப்போராட்டம். இந்தச் சாடல் (Criticism) அல்லது போராட்டத்தின் (Struggle) மூலம் ஒரு உண்மையை உணர்த்தி வைக்கிறான். அதாவது வெறும் உரிமைகளுக்கு அதுவும் தனித்தனியே தொழிலாளர்களுக்குக் கூடிய வேதனமும், உகந்த வேலைச் சூழ்நிலைகள் என்றும், பாமரருக்கு பலதரப்பட்ட சலுகைகள் என்றும், குரல் எழுப்புபவர்கள் வெறும் கூக்குரலையும் பரபரப்பையுமே ஏற்படுத்துகிறார்கள். இந்தப் பரபரப்பால் மக்கள் மத்தியில் எந்தவித அடித்தள உணர்வும் ஏற்படுவதில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டினான். இதனாலேயே நாமும், தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில், அது தோட்டத் தொழிலாளர்களாயினும் சரி, பாமர மக்களாயினும் சரி, இல்லை மாணவர்களாயினும் சரி, நடுத்தர



வர்க்கத்து உத்தியோகத்தர்களாயினும் சரி இவர்களது தனித்தனிப்பட்ட ரீதியான வெறும் உரிமைகளைப் பிரதிபலித்துக் கூக்குரல் எழுப்பாது, ஈழவர்களின் ஏகோபித்த ஒட்டுமொத்தமான உடமைப்பாட்டு ரீதியில் குரல் எழுப்புவதோடு, அது மக்கள் மத்தியில் பரபரப்பை மட்டுமன்றி ஆழ்ந்த உணர்வையும் அதனடிப்படையிலான எழுச்சியையும் ஏற்படுத்த வேண்டுமென வற்புறுத்தி வருகிறோம். இதுவே ஈழப் போராட்டமாக அமையும்.

இந்த ஈழப்போராட்டத்தின் முக்கிய அணியாக நம்மினத்தின் முதுகெலும்பான தொழிலாளர் வர்க்கத்தைத் தலைமைதாங்க ஏற்பாடு செய்வோமாக.

# 7 போராட்ட சக்திகளின் தோற்றம்

வழி நடத்துவது வேறு; முன்னெடுத்துச் செல்லுவது வேறு. மக்களை வழி நடத்துபவர்கள் மக்கள் தம் சமூக அரசியல்-பொருளாதார விமோசனத்திற்கான ஒட்டுமொத்தமான விடுதலைப் போராட்டத்திற்கு, வகையான போராட்டப் பாதையை வகுக்க வேண்டும். அதற்கேற்ப விடுதலைப் போராட்டப்பாங்கில் ஈடுபட மக்களின் இதர சமூக பிரிவுகளைப் பிரதிபலிக்கும் அணிகளையும், அரசியல் பிரச்சார சபைகளைக் கட்டும் திராணியும் திண்மையும் கொண்ட முன்னோடிகளை உருவாக்க வேண்டும். அந்த முன்னோடிகள் மூலம் அணிகளின் முன்னணி அமைத்து அவற்றின் ஊடாகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

முன்னெடுத்துச் செல்பவர்கள் வழிநடத்துபவர்களின் போராட்ட பாதைக்கேற்பத் தத்தமது அணியினரை நெறிப்படுத்தித் தயார் செய்ய வேண்டும் அந்தத் தயாரிப்பு ஆழ்ந்த அரசியலில், கோட்பாட்டில் அர்த்தமுள்ள போராட்ட முறைகளில் ஊறித் திளைத்ததாக இருக்க வேண்டும். அந்தத் திளைப்பின் தொனிப்பில் உறுதியுடனும், திண்மையுடனும், போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இவ்விதம் முன்னெடுத்துச் செல்பவர்கள் அமைப்பது தான்



போராட்டப் பாதை அதை வகுத்துக் கொடுத்து முன்னெடுத்துச் செல்வதே வழிநடத்துபவர்களின் கடமை. இந்தப் பிணைப்பில் பிரசவமாவதே மக்கள் விடுதலை. இந்த விடுதலையின் போது, முன்னெடுத்துச் செல்பவர்கள் வழி நடத்துவதும், வழி வகுப்பவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதும் தவிர்க்க முடியாத இயங்கியல் நியதி.

இந்த வகையில் இலங்கை வாழ் தமிழர் தம் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதா? இல்லை அவர்கள் தம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்கள் நம்மவர்கள் எதிர்கால நலத்தை எஃகி வழி நடத்துகிறார்களா? இவை விடை காணாத வினாக்களாகவே இன்றைய அரசியல் சூழ்நிலை இருள் சூழ்ந்த சூனியமாக இருக்கின்றது. இதன் சூட்சுமத்தையே அண்மையில் நடந்த மாவட்டசபைத் தேர்தலும் அதற்கு முன் யாழ் நகரில் நடந்த சம்பவங்களும் எடுத்துக் காட்டுகின்றது இல்லாவிட்டால் மே 31 முதல் ஜூன் 5 வரை குடாநாட்டில் கோரமான சம்பவங்கள் நடைபெற்றிருக்குமா?

இங்கு நடந்த சம்பவங்களால் ஏற்பட்ட பாதிப்பையும் இழப்பையும் கணக்குப் போடுவதல்ல 'தர்க்கீகம்'. பதிலுக்கு இச்சம்பவங்களுக்கு காரணங்களையும் கர்த்தாக்களையும் இயங்கியல் ரீதியில் ஆய்ந்தறிந்து கொள்வதே யதார்த்தம். அந்த யதார்த்த நிலைப்பாட்டுக் காரணங்களுக்கேற்ப எதிர்காலத்தை எஃகுவதே "தர்க்கீகம்".

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களுக் கான பொறுப்பாளிகள் ஸ்ரீலங்கா ஆட்சியின் ஆணைக் குட்பட்ட அத்துமீறிய படையினர் என்பது ஆட்சி யாளரும், பொதுஜன பாதுகாப்பில் அக்கறை கொண்டோரும், சமாதான நல்லெண்ணம் கொண் டோரும் ஒப்புக்கொண்ட உண்மை. அதுமட்டுமல்லா மல் குடா நாட்டு மக்கள் அனுபவரீதியாக அறிந்து கொண்ட விடயம். அவர்கள் தம் ஆத்திரத்தையும், மனக்குமுறலையும், உள்ளக் கொந்தளிப்பையும் தர்க்கீ கம் வெறும் தார்மீக ரீதியில் மட்டுமல்லாமல் உள் ளார்ந்த உடைமைப்பாட்டு ரீதியிலும் உணரத் தவற வில்லை.

அதனால்தான் யாழ்ப்பாணத்தில் ஆட்சிப் படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட ''நாசசம் காரத்தை''யும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களை யும், அவர் தம் இழப்பையும் வெறும் மனிதாபி மானப் பிரச்சனையாக மட்டும் கண்ணோக்காமல் இயங்கியல் ரீதியில் நோக்கி, இரு இனங்கள் வாழும் இலங்கையில் வர்க்க அடிப்படையில் நாடு தழுவிய ரீதியில் மக்கள் அடிப்படைப் பிரச்சனை தீர்க்கப்படா மையாலும், இன்றைய அரசியல் அமைப்பு பொருளா தார ரீதியாகவோ அல்லது மனிதாபிமான ரீதியிலோ, இரு இனங்களின் இதர பிரச்சனைகளைத் தீர்க்க முடியாத அளவுக்குக் கூர்மையடைந்து வருகின்ற நிலையில் தமிழர் பிரச்சனையைத் தனித் தேசிய இனப் பிரச்சனையாகக் கண்ணோக்குகிறோம். இந்த உணர்வினால் தான் ஆட்சியாளரின் படையின் அட்டகாசங்களை



வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளையில் நம் மக்களின் இயலாமையையும், பலவீனத்தையும் சாட முற்படுகின்றோம். இதனால்தான் தமிழர்கள் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறதா? அவர்கள் தம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்கள் நம்ம வரின் எதிர்கால நலத்தை எஃகி வழிநடத்துகிறார்களா? எனக் கேட்க முற்பட்டோம்.

நம்மவரின் நலன் கருதி மக்கள் போராட்டம் வழிநடத்தப் பட்டிருந்தால் அல்லது மக்கள் போராட்டப் பாதையில் போராட்டம் முன்னெ டுத்துச் செல்லப்பட்டிருந்தால் அண்மைச் சம்ப வங்கள் நடந்திருக்குமா? வழி நடத்துபவர்கள் அதைத் தவிர்த்திருக்க வேண்டும். அல்லது எதிர் பார்த்திருக்க வேண்டும். முன்னெடுத்துச் செல்ப வர்கள் அதைத் தடுக்கவும் எதிர்க்கவும் தயாராய் இருந்திருக்க வேண்டும். அப்படி ஒன்றும் நடக்க வில்லையே ஏன்? தமிழர்கள் தமது பாரம் பரிய கோட்டைப் பிரதேசமான யாழ்ப்பாணத்தில் பாதிக் கப்படுவதும், தாக்கப்படுவதும் இதுவா முதல் முறை யெனக் கேட்க வேண்டியது யதார்த்தவாதிகளின் கடமை. 1962-ல் கச்சேரிக்கு முன் சத்தியாகிரகிகள் மீது ஆட்சிப்படையினர் கைவைக்கவில்லையா? அப்போதும் சத்தியாகிரகப் போராட்டத்தை வழி நடத்தியவர்கள் நம் மக்களைத் தயார் செய்யவில்லை. அவர்கள் தம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய சக்திகளை உருவாக்கவில்லை. 1962

அனுபவத்தையொட்டி முன்னேடிகளை உருவாக்கியிருந்தால் 1974-ம் ஆண்டு நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழர்கள் மீது தகாதவர்கள் கை வைத்திருப்பார்களா? இல்லை பதினெரு உயிர்களைத் தாரை வார்த்துக் கொடுத்திருப்போமா? அதுதான் போகட்டும். 1977-ல் நடந்த இனக்கலவரத்தின் போது யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்ட போதும் பாராமுகமாக இருந்தார்கள். இப்போ 1981-ல் மீண்டும் யாழ்ப்பாணம் தவிடு பொடியாக்கப்பட்டபோது நம் மக்களின் போராட்ட 'முன்னேடிகள்' என பறைசாற்றுவோரும், சுவரொட்டி விளம்பரம் செய்வோரும் மௌனம் சாதித்தது ஏன்? அவர்கள் மக்களை அணிவகுத்திருந்தால் அந்த மக்கள் காடையர்களைக் கட்டாயம் எதிர்நோக்கியிருப்பார்கள். அவர்கள் எதிர் நோக்கவில்லையே. காரணம், "மக்கள் இன்னும் போராட்டத்திற்கான தயார் நிலையில் இல்லை"° என விளக்கம் தருகிறுர் கூட்டணியின் தலைவர் எம். சிவா, அப்படியிருந்திருந்தால் யாழ்ப்பாண எம். பியின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட போது கண்ணுற்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு போலீஸ் நிலையத்தை நோக்கிச் சென்றிருப்பார்களே!' என விஞவும் எழுப்புகிறுர். இதனுல்தான் 'தர்க்கீகம்' இன்று தமிழர்கள் தம் போராட்டம் வழிநடத்தப்படுகிறதா? இல்லை முன்னெடுத்துச் செல்லப்படுகிறதா? எனக் கேட்கத் துணிகிறேம். இல்லை என்கின்ற எம். சிவா "அரசியல் ஸ்திரணமற்ற நிலையில் இருக்கிறேம் என்பதை ஒப்புக் கொள்கிறேம். அதை உருவாக்க வேண்டும்" எனக் கூறியிருப்பாரா? அந்த ஸ்திரண மற்ற



நிலையை அப்பட்டமாகத் தெரிவிக்கிறது கூட்டணியின் செயல் நாயகத்தின் பேச்சு. "பல வருடப் பிரிவினைகளை மறந்து, எமது மறைந்த தலைவர்களும், இருக்கின்ற தலைவர்களும் 76-ம்-77-ம் ஆண்டுகளில் ஒன்ருக இணைந்தார்கள் அந்த ஒற்றுமையின் வலிமையினுலேயே போராட முனைந்தோம். எமது விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம்." (ஈழநாடு 6-4-81) என வவுனியாக் கருத்தரங்கம் ஒன்றில் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருப்பது மட்டுமல்லாமல், "ஆனுல் எம் இளைஞர்களிடையே வலதுசாரி-இடதுசாரி, அதி தீவிரவாதிகள், தீவிர தமிழீழவாதிகள் எனக் கூறி ஒற்றுமைக் குலைப்பு நடைபெறுகிறது இந்த நிலை மாற வேண்டும். மறைந்ததலைவர்கள் பெயரால், எக்காரணம் கொண்டும் எங்களுக்கு மதிப்பைத் தேடித்தந்த ஒற்றுமையை நாம் இழக்கக் கூடாது", என்று தலைவர் அமிர் கூறும்போது 1976-ம் 1977-ம் ஆண்டுகளில் தலைவர்கள் கட்டியெழுப்பிய ஒற்றுமை பற்றி ஐயப்பாடு எழுப்ப வேண்டிய அவசியத்தைத் தர்க்கீக வாதிகள் புரிய வேண்டும். அன்று ஏற்பட்ட கூட்டு அணி மறைந்த தலைவர்களுக்கும், இருக்கின்ற தலைவர்களுக்கும் இடையேயான ஒப்பந்தக் கூட்டணியா? அல்லது மக்கள் சக்திகளை ஒன்றிணைக்கும் கூட்டணியா? எனக் கேட்க வேண்டியுள்ளது. அப்படி மக்கள் சக்திகளை இணைக்கும் கூட்டணியானுல், தலைவர் அமிர் தலிங்கம் செயல் நாயகம் என்ற முறையில் விடுதலை நாட்டங் கொண்ட மேலே குறிப்பிட்ட இதர பிரிவுகளையும் கூறுகளையும் இணைத்தும், அணைத்தும் கூட்டணி நடத்த வேண்டும்.

இதுவே விடுதலைக்கான கூட்டணி. அப்படியில்லாத நிலையில், அன்று தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டது ஒப்பந்தக் கூட்டணி என்றே சொல்லத் தோன்று கிறது அது அர்த்தமற்ற ஒன்று என்பதைக் கடந்த நாலுவருடகால சம்பவங்களும், நிலைமைகளும் தெளி வாக்குகிறது இது இயங்கியல் ரீதியில் ஒரு வரலாற்று நியதியும் கூட. ஒரு நாட்டில் அல்லது ஒரு சமுதாயத் தில் பூர்சுவா ஜனநாயக வாதிகள் கூடிக் கூட்டணி கட்டுவது உண்டு. அது போல் சில நாடுகளில் வலது சாரித் தன்மையுடைய சமூக ஜனநாயகவாதிகளும் கூட்டணி கட்டுவதோடல்லாமல் அர்த்தமற்ற கோரிக்கைகளை முன்வைத்து மக்களின் பரபரப்பை (Spontanity) தூண்டி, அவர்கள் ஆதரவையும் பெறு வார்கள். பின்பு அந்தக் கோரிக்கைகளையும், லட்சியத்தையும் அடைய வேண்டிய வகைகளையும், வழிகளையும் உருவாக்க முடியாத நிலையில் அவரவர் வர்க்க நலன் இடம் தராமையினால் தத்தளிப்பார்கள். அப்போது அர்த்தமற்ற கோரிக்கைகளிலும், அடிப் படையில்லாத பரபரப்பாலும் தூண்டப்பட்ட சில சக்திகள் வன்முறையிலீடுபடுவதும் நியதியே. இந்த வன்முறையையும் பரபரப்பையும் தூண்டிவிடுபவர்கள் வகையாக இதை உபயோகிப்பதும் உண்டு. இங்கு வன்முறையும், பரபரப்பும் பிணைக்கப்பட்ட நிலைப் பாட்டையும், இதற்கும் மக்கள் போராட்டத்துக்கும் உள்ள பாரிய இடைப்பாட்டையும் உணர வேண்டும்.

இந்த இடைப்பாட்டுக் காலத்தில் தான் எதிர்க் கட்சித் தலைவர் கூறிய மேற்படி சக்திகள் தோன்றிற்று.

# 8 பணிப்பு வேறு: திணிப்பு வேறு.

இது ஈழவர் தம் இடர் தீர்க்கக்கூடிய பணிப்பு களே அல்லாமல் திணிப்புகள் அல்ல.

திணிப்புகள் தன்னிச்சைக்காரர்களின் தான் தோன்றி நோக்கங்கள். அதற்கும் மாந்த சக்தியை இட்டுச் செல்லக்கூடிய பணிப்புகளுக்கும் அளப்பரிய வேறுபாடு உண்டு. இதனாலேயே 'தர்க்கீகம்' தன்னுடைய தலையாய குறிக்கோளாகத் தத்துவவித் தகன் கார்ல்மாக்ஸின் கோட்பாடான, "கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் அது சக்தியாய் உரு வெடுக்கும்" என்ற மேற்கோளை முன்வைத்து முனைப்பு அமைத்து முன்னணி அணிவகுத்துத் தர்க்கீக வாதி களை முன்னெடுத்துச் செல்லும் பணியிலுங் பணிப்பு களிலும் ஈடுபட்டுள்ளது.

இந்த அணிவகுப்பில் 'தர்க்கீகம்' தனது பணி யைக் கடமையோடு மேற்கொண்டது என்பதைக் கடந்த 11 இதழ்களும் இந்தப் 16 பக்கங்கள் கொண்ட 12-வது இதழும் நெறிசார்ந்து நினைவுறுத்தும், ஆனால் ஈழவர் தம் அரசியல் சூழ்நிலையில் இந்தப் பணிப்புகள் எவ்வளவில் மேலெடுத்துச் செல்லப்படும் என்பதைத் தான் இன்றைய வினாவாக எழுப்பி விடை காண வேண்டியுள்ளது இதனாலேயேதான், வழி நடத்துவது

வேறு முன்னெடுத்துச் செல்வது வேறு என்ற கருத்து விளக்கத்தை முன் தந்தோம்.

இல்லாவிட்டால், இலங்கைவாழ் தமிழர்களின் கடந்தகால வரலாற்றில், இலங்கைத் தமிழ் காங்கிரஸ் முதல் இந்திய தொழிலாளர் காங்கிரஸ் வரை இலங்கைவாழ் தமிழர்களின் நிரந்தர விடிவுக்கு வழி நடத்தியும் முன்னெடுத்தும் சென்றிருந்தால் தமிழ்மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கும். ஏன்? மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட போது உதயமான தமிழரசுக்கட்சி கூட, இன்று தமிழர் விடுதலைக்கூட்டணி என்ற உதயசூரியனானபோதும் தமிழர்களுக்கு விடிவு காணவில்லையே. இதனால்தான் 'தர்க்கீகம்' கடந்த இதழில் புதின ஆய்வுச்செய்தி அறிக்கையாகக் குறிப்பிட்டதுபோல் இவர்கள்கூட, "தமிழ் ஈழத்திற்கு ஆறுமாத விடுதலை பெற்றுள்ளார்கள்". இங்கு தான் தர்க்கீகவாதிகள் பணிப்புகள் பற்றியும் திணிப்புகள் பற்றியும் மேலும் கேள்வி எழுப்பி விடை காணும் சூழ்நிலைக்காகிறார்கள். 'தமிழ் ஈழ'க் கோரிக்கை மக்களிடத்தில் திணிக்கப்பட்ட தொன்று, பணிக்கப்பட்டதல்ல. இருந்தும் தந்தை செல்வநாயகமும். தலைவர் வன்னியசிங்கமும் தமிழர்களின் இடர்பாடுகளை நன்குணர்ந்து தார்மீகரீதியிலும், நிதர்சன அரசியல் ரீதியிலும் சமஷ்டிக்குட்பட்ட தமிழரசு கோரினார்கள். இது சரிவராமல் போகவே, தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைத் தீர்க்க தரிசனமாக, உள்ளார்ந்த ரீதியில் உணர்ந்து



உரிமையுடன் சாசனரீதியில் சுயநிர்ணயம் கோரினார், தந்தை. தந்தை ஒரு தார்மீகவாதி மட்டுமல்ல, மான்யத் தலைவரும்கூட, இவரது, தமிழர்களுக்கான சுயநிர்ணயக் கருத்தைத் தர்க்கீகக் கண்கொண்டு அணுகி அவரின் சிந்தனையோட்டத்தைப் தர்க்கீகமாக்கி, தமிழர் தம் விடிவிற்கு இயங்கியல்ரீதியில் நிதர்சனமாக பணிப்புகள் செய்யவேண்டிய காலகட்டமும் நிர்ப்பந்தமும் இன்று 'தர்க்கீகத்'திற்கு ஏற்பட்டுள்ளது.

எமது பார்வையில் தர்க்கீக பக்குவ வளர்ச்சியை மட்டுமல்வாமல் எம்மவர் தம் சமுதாயத்தின் எழுச்சியையும் காணக் கூடியதாக இருக்கிறது. எமது சமுதாயத்தில் பொதுவுடமைவாதிகள் தோன்றினார்கள்; வாழ்ந்திருக்கிறார்கள். ஏன்? வாழுகிறார்கள், அவர்கள் எம்மவர்கள் தம் நல்வாழ்வுக்கு வழி வகுக்கவில்லை. ஆனால் இன்று தமிழர்தம் சமுதாயத்தில் புதியதோர் சக்தி; பொதுவுடைமைச் சமுதாயத்தை அமைக்கப் பொறுப்புள்ள தோழர்கள்; இன்னுயிர் ஈந்தும் ஈழம் அமைத்திட இனியதோர் அணி; அணியான தர்கீகவாதிகளைக் கொண்ட முன்னோடிகள் தமிழர்கள் மத்தியில் காணக்கூடியதாக இருக்கிறது. தமிழர்கள் தம் நல்வாழ்வுக்கு வகையான வழியான வனப்பான வழிவகுக்க தர்க்கீகம் தன் பணியைச் செய்ய வேண்டும் என்பதே தர்க்கீகவாதிகளின் எண்ணப்பாடு; இல்லை பணிப்பும் கூட. இங்கு மேலும் பணிப்புக்கும் திணிப்புகளும் உள்ள தார்ப்பரிய வேறுபாடுகளை உள்ளார்ந்த ரீதியில் யதார்த்த நிலையிலும் உணர வேண்டும்.

குதர்க்கவாதிகள் திணிபபார்கள். ஏன்? கட்டுக் கதைகள் கட்டுவார்கள். இயங்கியலைப் புரிந்து கிர கித்துக்கொள்ள முடியாத பட்சத்தில் பிரிந்து நின்று பித்தலாட்டம் பேசுவார்கள். தம்மையே தமிழர் தம் விடுதலைச் சிற்பிகளாக விளம்பரப்படுத்துபவர்கள், இன்னும் புரட்சிவாதிகளாக புராணக்கதை அளப்பார் கள். இவர்கள் தமது இயலாமையை மறைக்க இன்னோரன்ன தத்துவங்கள் பேசுவார்கள். புரட்சி வாத சூட்சுமத்தைப் புரியாதபட்சத்தில் சூட்சுமம் பேசுவார்கள் ஆனல் தர்க்கீகவாதிகள் பணிப்பார் கள். இந்தப் பணிப்பின் இயங்கியல் அடிப்படையை தந்தவன் தத்துவ வித்தகன் மார்க்ஸ்.

உலக மக்களிடையே இரண்டே இரண்டு வர்க் கங்கள் தாம் உண்டு. ஒன்று ஆளும் அல்லது (Exploiting Class) உறிஞ்சும் வர்க்கம் மற்றது ஆளப் படும் அல்லது (Exploited Class) உறிஞ்சப்படும் வர்க்கம். இந்த உண்மையைத் தத்துவரீதியில் உணர்த்தியவன்வித்தகனே. இந்தத்தத்ரூப, நிதர்ச னத்தை யதார்த்தமாக இயங்கியல் ரீதியில் உலகிற்கு நடைமுறையில் உணர்த்தியவன் புரவலன் லெனின். இந்த அடிப்படையிலேயே இலங்கைத் தமிழர் பிரச் சினையை அணுகும்போது இயங்கியல் ரீதியில் காலா காலம் தொட்டு நிலப் பிரபுத்துவ அடிப்படையில் உருவான சிங்கள சமுதாயத்தின் தலைமைப்பீடம் அதன் பிற்போக்குத் தகைமையின் குணும்சமாகச் சிங்களசோவனிசம் ஆகக் கருத்திலும் எண்ணப்பாட்டி லும் உருவெடுத்து வளர்ந்து வந்துள்ளது. இதன்



வெளிப்பாடே இலங்கை சுதந்திரம் பெறுமுன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே, இன்றைய ஜனாதி பதி சிங்களக் கோரிக்கையை எழுப்பியது. பின் பண் டாரநாயக்கா பதவிக்கு வருவதற்காகத் தனிச் சிங்களக் கோரிக்கையை முன்வைத்ததோடு மட்டுமல்லாமல் மசோதாவாக்கியதும் கூட. இதன் பின்னணியிலேயே முன்னாள் வெளிமடைத் தொகுதிப் பிரதிநிதி கே. எம். பி. ராஜரத்தின முதல் இன்றைய சிறில் மத்யூ வரை பார்க்க வேண்டும். அதன் காரண மாகவே 1958 இல் நடந்த கலவரம் முதல் அண்மை யில் நடந்த சம்பவங்கள் வரை இருந்துவந்துள்ளது. இங்கு ஆளும் இனமாகந் தம்மை ஏகோபித்த ரீதியாக யூகித்துக்கொண்ட சிங்கள சோவனிஸ்டுகளிடமிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள விடுதலை கோரும் ஈழ வருக்குத் தர்க்கீகத்தின் பண்புகள் என்ன எனக் கூற வேண்டியுள்ளது.

இங்கு மற்றொரு கணிப்பையும் உணரவேண்டும். சிங்களச் சோவனிஸம் தமிழ்மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் வன்முறையால் அடக்குமுறை செய்துவருகிறது. கடந்த நாலு ஆண்டுகால அனு பவத்தில் 40,000 சிங்களப் பாட்டாளி வர்க்கத்தினர் வேலை இழந்து தவிக்கின்றனர் மேலும் முன்னாள் பிரதமமந்திரி திருமதி பண்டார நாயக்கா பாராளு மன்றத்திலிருந்து சட்ட விரோதமாக நீக்கப்பட்டு இருக்கிறார். இதற்கிடையில் இன்னும் பல செய்தி கள். இதன்மூலம் சோவனிஸத்தின் தன்மையை நன்குணர வேண்டும்

''சோவனிஸம்; பாசிசம்; நாசிசம்'' போன்றவை மிலேச்சத்தனமான அராஜகச் சக்திகள். இதற்கும் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் போன்றவைக்கும் இடையே பாரிய வேறுபாடு உண்டு. எப்படி நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவ கால மாற்றம் பெற்றுப் பின் படிப்படியாக ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற்றுள்ளதோ அதேபோல் சோவனிஸம் முதல் ஆரம்பித்து, பாசிசம், நாசிசமாக உருவெடுத்து உள்ளது. நாசிச ஆட்சியில், அதாவது ஹிட்லருடைய ஆட்சியில் யூதர்களைக் கூண்டோடு அழிக்கக் கங்கணம் கட்டப்பட்டிருந்தது. இலங்கையிலுள்ள சிங்கள சோவனிசமும் இது போன்ற ஒரு கங்கண மாயையில் தவிக்கிறது. இங்கு மற்றுமொரு கேள்வியை எழுப்பவேண்டும். அதாவது, தமிழர்கள் மத்தியில் ''தமிழ் சோவனிசம்'' இல்லையா என்பதே?

பொருளியல் ரீதியாக நிலப்பிரபுத்துவ காலம் ஸ்தம்பித்து நிற்கும்போது சோவனிசமும் தலையெடுக்க ஆரம்பிக்கிறது. ஆனல் இலங்கையை ஆண்ட வெள்ளையர் காலத்தில் தமிழர்கள் முக்கியமாக வடக்கிலுள்ளவர்கள் அவ்வரசின் அடிவருடிகளானுர்கள். இதனல் தமிழர்கள் மத்தியில் நிலப் பிரபுத்துவம் நிலைப்பாடடையவில்லை. இல்லாவிட்டால் தமிழர்தம் பிரதேசத்தில் வவுனியா மன்னுர் போன்ற இடங்களில் தமிழர் வாழுவதற்குச் சிங்கள அரசிடம் காணி நிலம் கேட்டு கையேந்தி நிற்கவேண்டுமா? இங்கொன்றும் அங்கொன்றுமாக, ஆங்காங்கே நிலப்பிரபுக்கள் இருந்தார்கள். பொன்னம்பலம் இராமநாதன் ஒரு நிலப்



பிரபுவே. அதேபோல் முதன்முதலில் ''தனித்தமிழ் நாடு'' கோரிய சி. சுந்தரலிங்கம் போன்ற நிலப்பிரபுக்கள் ''சோவனிஸ்டுகளாக'' இருந்தார்கள். பதிலுக்கு செல்வநாயகம், வன்னியசிங்கம், பொன்னம்பலம் போன்றவர்கள் பூர்ஷுவா ஜனநாயக வாதிகளாக மாறினுர்கள். இதன் பரிணமமே இன்றைய பூர்ஷுவாக்களான தமிழ்த் தேசியவாதிகள் விடுதலை நாடும் ஒட்டு மொத்தமற்ற கூட்டணியினர் இவர்கள் காலத்தில்கூட தமிழர்கள் தம் விமோசனம் நிதர்சனமற்றதொன்று என்ற நிலைக்காகிறது. இந்த நிலையில், ஈழவர் விமோசனத்திற்கு வழிவகை என்ன எனத் தர்க்கீகவாதிகள் வினவவேண்டியது அவசியம்.

ஈழவர் தம் இடர்தீர ஈண்டு தொலைந்திட இயங்கும் தோழர்கள் இலங்கைவாழ் தமிழர்களின் முற்போக்குச் சக்திகளை அணி திரட்ட வேண்டும். ஈழவர் சமுதாயத்தின் முதுகெலும்பான பாட்டாளி வர்க்கத் தொழிலாளர்களான மலையகத் தொழிலாளர்களையும் அவர்களுக்கு அனுசரணையாகவும், துணையாகவும் வடக்கிலும், கிழக்கிலுமுள்ள பாமரர்கள் பங்களிக்க, கொள்கை–கோரிக்கை-இலட்சியம் என்ற அடிப்படையில் அணிவகுக்கவேண்டும். இதை மலையகத் தொழிலாளர்களோ அல்லது வடக்கிலும் கிழக்கிலும் உள்ள விவசாயிகளோ இல்லை நடுத்தர வர்க்கத்தினரோ தாமாக முன்வந்து பங்களிக்க மாட்டார்கள். இந்தப் பங்களிப்பைச் செய்யும் கைங்கரிய பொறுப்பு, வடக்குக் கிழக்கிலும் மலையகத்திலுமுள்ள தர்க்கீகவாதிகளின் பொறுப்பே இதுவே முதல் பணிப்பு.

ஈழம் எமது தாயகம். அதை அமைப்பது எமது ஆதர்ச உரிமை என்ற அடிப்படையில் தர்க்கீகம் தமது பணியைச் செய்யட்டும். சமூக சனநாயக அரசியல் வாதிகளும் தம் பணியைச் செய்யட்டும். தவிர்க்க முடியாத தன்னிச்சைக்காரர்கள் ஓடி ஒழியட்டும். இது திணிப்பல்ல. எமது ஆழ்ந்த பணிப்பு என்பதை ஈழப்போராட்டம் ஈழவர் மத்தியில் நிரூபித்து, அவர் தம் இலக்கைக் குறிக்கும் செங்கொடியை பறக்கச் செய்வார்கள். ஈழவர் இந்த மணியான கொடி பட்டொளி வீசிம்போது, தமிழோசை கேட்கும். அதற்காக, பாரதி கூறியதுபோல, ''தாயின் மணிக்கொடி பாரீர்; அதை தாழ்ந்து பணிந்திடவாரீர்'' என ஈழவர் திரண்டெழுவர். அந்த எழுச்சியின் விடிவே ஈழவர் விமோசனம்.

# 9 எழுத்தும் மக்கள் போராட்டமும்

ருசிய போராட்டத்தின்போது சமுதாயத்தின் தூண்டுகோலாக இருந்தவர்களுள் டால்ஸ்டாயும் ஒருவர். ஆனால் புரட்சிப் புரவலன்தான் சோவியத் ஒன்றியத்தை உருவாக்க, அந்த மக்களின் இடர் தீர, இடைவிடாது தர்க்கீக அடிப்படையில் ஒவ்வொரு விஷயத்தையும் இயங்கியல் ரீதியில் அணுகி, அதற் காகத் தோழர்களுக்குப் புரட்சிக் கருத்தையும், அந்தப் புரட்சிக்கு உகந்த கருவியான ''மார்க்சிய'' தத்துவத் தையும் புகட்டிப் புதுப்புதுப் பாடங்களை அரசியல் அனுபவப் பரிசீலனை மூலம் கற்பித்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியதன் மூலம், இயங்கியல் ரீதியில் புரட்சித் தத்துவமான மார்க் சியத்திற்கு, தர்க்கீக நிதர்சனத்தையும், சாத்திய நியதியையும் ஆன புரட்சி மெருகூட்டினார். இதனால் தான், ''மார்க்சிய-லெனினியம்'' மாந்தரின் மாட்சி மைக்கான மகத்தான சமூக—அரசியல்—பொருளா தார விஞ்ஞான தத்துவ சாத்திரமாக தர்க்கீகவாதிகள் ஏற்றிப் போற்றுகிறார்கள்.

லெனின் காலத்தில் புரட்சிச் சிந்தனையாளர் கள் தத்துவார்த்த ரீதியில் எழுதத் தவறவில்லை. ,'பெலக்னோவ்'' ''ட்றொஸ்க்கி'' (Trosky)

''கையோலின்'' போன்றவர்கள் மார்க்சிய ரசனை பெற்று அதன் மூலம் அவர்கள் தம் சிந்தனை அடிப் படையில், சித்தாந்தம் படைத்தார்கள் உதார ணத்திற்கு ட்ரொஸ்கியின் 'நிரந்தரப்புரட்சி'' (Permanent Revolution) வெறும் புத்தகத் தத்துவ மாக இருந்ததே தவிர ருசிய மக்களின் அடிப் படை மாற்றத்திற்கோ, அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கண்ட சோவியத் ஒன்றியத்திற்கோ உதவவில்லை. புத்திஜீவிகள் மட்டத்தில் விவாதங்களையும், விதண்டாவாதங் களையும் மட்டுமே உருவாக்கியது. பதிலுக்கு லெனின், மார்க்சிய தத்துவத்தை அடிப்படை யாக வைத்து, ருசிய போராட்டத்தை நடத்துவ தற்கு, மக்கள் அடிப்படையிலான எழுத்துக்களை எழுதினர். அவை வெறும் தத்துவப் பரிசீலனை மட்டு மல்லாமல், சமூக, பொருளியல், அரசியல் அடிப்படை யில் அமைந்தது அவை மக்களையும், முக்கியமாகத் தொழிலாளர்களை இணைத்துப் பிணைத்துப் போராட் டத்தை நடத்தக்கூடிய சக்தியான ''போல்ஷிவிக்', அமைப்பையும் உருவாக்கக்கூடியதாக இருந்தது. இறுதி வரை மக்களுக்கானதாக தொழிலாளர் பாமரர் எதிர்நோக்கிய பிரச்சினை தீர்க்கும் ஆய்வுப் பரிசீலனை களாக இருந்தது. இதனல்தான் ஸ்டாலின், ''லெனினை வெறும் கட்சித் தலைவராக மட்டும் கருதவில்லை. பதிலுக்கு எமது கட்சியின் தாபகராக, அமைப்பாள ராகவும் ஏற்றேன். ஏனெனில் லெனின் ஒருவர் மட்டுமே கட்சியின் தேவைகளையும், உட்சாராம்



சத்தையும் உணர்ந்திருந்தார். மற்றத் தலைவர்களுடன் ஒப்பிடுகையில் சக தலைவர்களான பெலக்னேவ், மார்னேவ், அலெக்சீட் போன்றோரை விட முன்னேடி யாகவே இருந்தார்'' என்றும், இன்னும் ஒரு இடத்தில் ''ஞாபகம் வைத்திருங்கள், லெனினில் அன்பு வைத்து அவரைப் படியுங்கள். அவர் எமது ஆசிரியரும் தலைவரு மாவார் எதிரிகள் உள்ளிருந்தாலும் சரி, வெளியிலிருந் தாலும் சரி அவர்களை அயராது சாடுங்கள் லெனின் காட்டிய வழியில் புதிய வாழ்வு, புதிய இருப்பு, புதிய கலாச்சாரம் இவற்றை லெனின் காட்டிய வழியில் கட்டி எழுப்புங்கள். சிறுசிறு அலுவல்களிலிருந்து ஆரம்பித்துத் தான் பெரிய அலுவல்கள் செயல்படுத்தப் படுகிறது. இது லெனினுடைய முக்கியமான உள்ளடக்க சொத்து'' என்றும் கூறியுள்ளார்.

லெனினுடைய காலத்தில் தர்க்கீக அடிப்படையி லான சித்தாந்த எழுத்துக்களைத் தவிர, மக்கள் போ ராட்ட மலர்ச்சியை மையமாக வைத்து ஜனரஞ்சன எழுத்துக்கள் வரவும் தவறவில்லை மார்க்சிம் கோக்கி யினுயுடைய ''தாய்'' என்ற நாவல் போராட்டத்திற்கு உந்து கோலாக இருந்தது. இதேபோல் ஈழவர் போராட்டத்திற்கும் ஒரு உந்து சக்தியாக இருந்தது— இருக்கிறது ''லங்காராணி''. இது ஒரு போராட்டத் தின் ஆரம்பக் கட்டத்தை அனுபவ வாயிலாக உணர்ந்து நிகழ்ச்சிகளைக் கோர்த்து. நிறைவான வடிவமாக அமையும் படிப்பினையான பாடம். உந்து சக்தியாக மட்டுமே இருந்ததன்றி தர்க்கீகப் பாதையில் மக்களை இட்டுச் செல்லவில்லை. அந்தக் கைங்கரியப்

பங்களிப்பை லெனினின் எழுத்துக்கள் மட்டுமே செய்தன. அதே போல் தான், ''லங்காராணி'' ஏற்படுத்தும் உந்து சக்திக்கு உறுதுணையான தர்க்கீக போக்கையும், இயங்கியல் அமைப்பையும் உருவாக்க ஈழவர் இடர்தீர செயலாற்ற வேண்டியது தர்க்கீகத்தின் கடமை. இந்தக் கடமையில் தர்க்கீகம் தன் ஓராண்டுப் பணியைச் சிறப்புடன் நிறைவேற்றியுள்ளது.

## இனி என்ன செய்ய வேண்டும்?
## (What is to be done now?)

''இனி ஒரு விதி செய்வோம். அதை என்றும் காத்திடுவோம்'' என்றான் கவிஞன் பாரதி. அது என்ன விதி?

''விதியே! விதியே! தமிழ்ச் சாதியை என்ன செய்ய நினைத்தாய்?'' எனக் கேட்டு அதற்கு விடை காண வேண்டிய ''பரிசோதனைக்'' காலகட்டத்தில் ஈழத் தமிழர்கள் இன்று உள்ளார்கள். இந்தப் பரிசோதனை என்ன?

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை அணுகுவோர், அவர்தம் வர்க்க நலன் சார்ந்த அடிப்படையிலேயே அணுகுவர் என்பதை ஆணித்தரமாக வற்புறுத்தி வந்தோம். வெறும் பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் அணுகுவோர், அந்தப் பொருளியலுக்கான அரசியல் அடிப்படைத் தளத்தைப்பற்றிப் பாராமுகமாக இருப்பதைக் காணக்கூடியதாக



உள்ளது. இல்லாவிட்டால் தமிழர் தம் பொருளாதார நலன் பாதிக்கப்படும்போது இவர்கள் கூக்குரல் எழுப்பியிருக்க மாட்டார்களா?

இதேபோல் தான் பொருளியல் தவிர்த்து வெறும் அரசியல் சாசன உரிமை கோருபவர்கள் அந்த அரசியல் சாசனத்தின் ஸ்திரணத்திற்கான பொருளாதார அடிப்படையையும் நிலைப்பாட்டையும் நாடியதில்லை. இல்லாவிட்டால், பெயரளவில் இலங்கை சுதந்திரம் பெற்று 33 வருடங்களாகியும், தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டு 33 வருடங்களாகியும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழர்களால் உருவாக்கப்பட்ட தொழில் துறைகள் என்னென்னவென்று வினவினால். விரல் விட்டு எண்ணுவதற்குப் பதிலாக நிலைகெட்டுத் தலைகுனிய வேண்டியுள்ளது. இந்த அபிவிருத்தியடையாத பொருளாதார நிலையாலும், ஆட்சியின் அரசாங்க சேவையிலும், போதிய பொருளாதார வாய்ப்பு இல்லாததாலேயே, தமிழ் இளைஞர்கள் இன்று வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்கிறார்கள். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்திற்கு இவர்களின் அணுகுமுறை, இன்னும் விகற்பமானது. இல்லாவிட்டால் இவர்களில் ஒரு சாரார், '82-ம் ஈழம்' என்று கொட்டாவிப் பிரசித்தம் செய்திருப்பார்களா? இல்லை இந்த ''82-ல் ஈழத்திற்கு அடிப்படை ரீதியில் என்ன அணிவகுப்பு செய்துள்ளார்கள் இந்த தமிழீழங்காவிகள்'', என்று கேட்கத் தோன்றுகிறது. இதனால்தான் நாம், சமுக—

பொருளியல்—அரசியல் அடிப்படையிலான மாற்றம் காண வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம்.

வெறும் பொருளாதார அமைப்புக்களை ஏற்படுத்தி விட்டால் போதாது. அது அரசியல் ரீதியில் சமூக வரையறப்புக்கள் மக்கள் அடிப்படையானதாக இருக்க வேண்டும். அத்தகைய திட்டங்களைத் திட சங்கற்பத்துடன் நடை முறைப்படுத்தும்போது, ஏற்கனவே மக்கள் பெயரிலும், தனியார் துறைத் தன்னலத்துக்காகவும் இயங்கும் பொருளியல் தொழில் துறைகளை அம்பலப்படுத்த வேண்டும். அதுதான் எமது முதற் கடமை. ஏனெனில், ''அரசியல் அம்பலம்; (political Exposives) இதன் மூலமே மக்களை அரசியல் கவனத்திற்காளாக்கலாம்'' என்கிறர் லெனின்.

இந்த 'அரசியல் அம்பலங்கள்' எத்தகையது என்பதை மக்கள் மேலெழுந்த வாரியாகப் புரிந்துள்ளார்கள். தனிச் சிங்கள மசோதாவால் அரசாங்க ஊழியர்கள் ஊதியமும், உயர்வும் பாதிக்கப்பட்டபோது அரசியல் வாதிகளும், ஏனையோரும் அம்பலப்படுத்தினர்கள்.

இதேபோல்தான் பல்கலைக்கழக அனுமதிக்கு ''விகிதாசார முறை'' கொண்டு வரப்பட்டபோது விமர்சனம் செய்தார்கள் நம்மவர்கள். பல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வரும் கட்டாயக் குடியேற்றம் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இவை யாவும் மேலெழுந்த வாரியாகவே அம்பலப் படுத்தப்பட்டுள்ளது. இவைக்கு அடிப்படையான



இயங்கியல் ரீதியான அடிப்படை அரசியல் காரணங்களை அம்பலப்படுத்த வேண்டும். இதை மேலெழுந்த வாரியாகச் செய்துவிட முடியாது.

கடந்தகாலத்தில் நடந்தது அப்படித்தான். அதனுல்தான் மக்கள் அடிப்படையில் தாக்கம் பிடிக்கவில்லை கட்டாயக் குடியேற்றத்தைப்பற்றி அரசியல்வாதிகளும், ஏனையோரும் கூக்குரல் எழுப்பினர்களேயன்றி, அதனுல் பாதிக்கப்பட்ட மக்கள் தமது பாதிப்பை வெளிக்காட்டமுடியாதளவுக்கு அரசியல் சூன்யம் சூழ்ந்திருந்தது. அல்லை, கந்தளாய் போன்ற இடங்கள் கட்டாயக் குடியேற்றத்தால் பாதிக்சப்பட்ட போது அந்தந்த ஊர்மக்கள் தத்தமது குமுறலை வெளிக்காட்ட சாதனமில்லாது தவித்தார்கள். இந்த நிலையை ஈடேற்றும் நோக்கத்துடன் என்னவோ தர்க்கீகம் தனது தலையாயபணியாக ஒவ்வோர் ஊர் பிரச்சினையை அணுகி, ஆங்காங்குள்ள அடிப்படை பிரச்சினையை நன்கு வெளிக்கொணர்ந்துள்ளார்கள். ஆரம்பத்தில் மூதூர்பற்றி எழுதும்போது (2வது இதழ்) ''1977ம் ஆண்டுக்கு முன்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்தது. பின் மூதூரில், சேருவிலை என்ற சிங்கள தொகுதி உருவாக்கப்பட்டது'' போன்ற விபரங்களைத் தந்து, அதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்கி 'இங்குள்ள சிறுவர்முதல் முதியோர்வரை தாம் இம்மண்ணில் வாழ்வதென்றல் தமக்கென ஒரு தேசிய அந்தஸ்து அவசியம் என்பதில் அசைக்கமுடியாத, தீர்க்கமான

முடிவுடன் இருக்கின்றனர்'' என அவ்வூர் மக்கள் சார்பில் எழுதப்பட்டது. இதுபோல் ''மயிலங்காடு'' ஊர்பற்றி எழுதும்போது (10/11 இதழ்) ''இவ்வாறு பல ஆயிரக்கணக்கான ஏழைச் சிறுவர்களின் கல்வி முளையிலேயே கிள்ளப்படுவதைக் கண்டுகொள்ளாத அரசியல்வாதிகள் சிலநூறு மாணவர்களின் பிரச்சனையே தமிழ்பேசும் மக்களின் பிரச்சனையாகப் பிரதிபலித்துக் கூக்குரல் எழுப்புவது அவர்கள் தம் வர்க்க நவன் சார்ந்த தன்மையினையே காட்டுகிறது'' என அவ்வூர்த் தோழரால் எழுதப்பட்டு உள்ளது. இதன் மூலம் தர்க்கீகத்தின் தாக்கத்தை உணரமுடிகிறது. அதாவது அடிப்படை மாற்றத்தின் மூலம்தான் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கலாம் என்பது! இது மக்களால்தான் முடியும். மக்கள் என்னும்போது மேலெழுந்தவாரியாக. கூட்டம் கூடிநின்று கூடிப் பிதற்றிவிட்டு, நாட்டடத்தில் கொள்ளாதவரல்ல. பதிலுக்கு ஒவ்வோர் ஊரிலும் உள்ளவர்கள் அவர்தம் ஊரைப்புரிந்து. பிரச்சினையையும் அதற்கான காரணங்களையும் ஆழ்ந்தறிந்து விடை காணும்போது தான் விடுதலையை நாடுவார்கள். அப்போதுதான் விடுதலைக்கான புரட்சிக்குரிய தோழர்களும், அவர்களால் ஊக்குவிக்கப்படும் மக்கள் போராட்டமும் மலரும்.

# 10 மக்கள் புரட்சியே பூரண விடுதலை

சோசலிசம் எந்த அடிப்படையில் அமைவது என்பது பற்றி ஆழமான ஆய்வு உண்டு. இன்று உலகில் பல நாடுகளில் முக்கியமாக ஐரோப்பிய நாடுகளில் கூட சோசலிசக் கட்சிகள் உண்டு. இவை களும் தான் சோசலிசம் பேசுகின்றன. ஆனால், இவர்களுடைய சோசலிசம் முதலாளித்துவ அமைப்புக்குட்பட்டதே, ஏன்? ஹிட்லர் கூட சோசலிசம பேசவில்லையா? இல்லை நமது ஜனாதிபதி கூட ''தம் இஷ்ட'' சோசலிசம் பேசவில்லையா?

## சோசலிசத்தின் அர்த்தம்

மார்க்ஸ் காலத்தில் கூட பிரான்சிலிருந்தசெயின்ட் சைமன் கூட சோசலிசம் பேசினான். இத்தகைய சோசலிசம், தர்க்கீக நெறிக்கு புறம்பானதும் இயங்கியல் நியதிக்கு நிதர்சனம் அற்றதும் ஆகும். இயங்கியல் முறையில் ஆய்ந்த தத்துவவித்தகன் கார்ல் மார்க்ஸ் ''சோசலிசம் என்பது சோசலிசத்துக்கான புரட்சியின் குழந்தையே'' என வலியுறுத்துகிறார். அது மட்டுமல்லாமல் மார்க்சியத்தின் பிரதிபிம்பமான புரட்சிப் புரவலன் லெனின் ''சோசலிசம் என்பது சமூக அரசியல் அடிப்படையிலான புரட்சிக்குப் பின் மக்கள் தம் அரசியல் தலைமையை பொறுப்பேற்றுக் கொண்ட

பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார (Dictatorship of the proletariat) ஆட்சியில் ஏற்படும் சமூக பொருளியல் மாற்றமே'' என்கிறார் அதாவது சோசலிசம் மக்கள் புரட்சிக்குப் பின்னும் கம்யூனிச சமுதாயம் ஏற்படுவதற்குமிடையிலான காலகட்டமே சோசலிசம்.

மேலும் விளக்கினால், மார்க்சீய மேற்கோளின்படி புரட்சிக்குப்பின், மக்கள் ''அவரவர் திறமைக்கேற்ப வாழ்தலும்'' (Each according to his ability) அதன் பயனாக பின், ''அவரவர் தேவைக்கேற்ப வாழ்தலும்'' (Each according to his needs). இந்தப் பின்னைய நிலையில் தான் பூரணத்துவ கம்யூனிச சமுதாயம் உருவாகும். இதற்கும் புரட்சிக்கும் இடையே அமையும் காலகட்டம் தான் சோசலிச சமுதாயம். இதை தர்க்கீகவாதிகள் அறிவார்கள். அறிவதோடு மட்டுமல்லாமல் உணரவும் வேண்டும்.

ஆகவே ஈழவருக்கு ஒரு சோசலிச சமுதாயத்தை அமைக்க நாடுவோர் ஈழவரின் சோசலிச சமுதாயம் மக்கள் அடிப்படையிலான புரட்சியின் மூலமே அமைக்க வேண்டும். அப்போது தான் பூரணத்துவ விடுதலையை நாடமுடியும்.

## அடிப்படையான மாற்றம் வேண்டும்

புரட்சி வேறு; விடுதலை வேறு. காலனித்துவத்திற்கு முன்னைய சரித்திர சமூக வரலாற்றுக்குப் பின், பிரித்தானிய காலனித்துவத்துக்கு அடிமைப்பட்ட இந்தியா, இலங்கை போன்ற விடுதலை பெற்ற நாடுகள்



பல ஆனால் அங்கு மக்கள் சமூக பொருளியல் அடிப்படையில் விடுதலை காணவில்லையே! உதாரணத்திற்கு இந்தியா சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆகியும் அங்கு எந்த சமுதாய மாற்றமும் ஏற்படவில்லையே! இதனால் தான், பாரதி கூட ''விடுதலை, விடுதலை, இங்கு தீய பறையருக்கும், புலையருக்கும் விடுதலை'' என்று பாடியபோது, சமூக, சமுதாய அடிப்படையிலான விடுதலையையே வேண்டுகிறான் என்பது தெளிவு. அந்த விடுதலை, புரட்சியின் அடிப்படையில் தான் அமையவேண்டும் என்பதையும் வற்புறுத்தத் தவறவில்லை.

இதே போலத்தான் இலங்கையிலும் கூட ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று முப்பத்திமூன்று ஆண்டுகள் ஆகியும் சமுதாயமாற்றம் மட்டுமில்லாமல் சமூக மாற்றம் கூட ஏற்படவில்லை. இதனாலேயே இன்று இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களுடைய தேசிய அந்தஸ்து பிரச்சனை கூர்மையடைந்து வெறும் இனவாரிப் பிரச்சனையாக மட்டுமல்லாமல் ஈழக் கோரிக்கை என்ற ஈட்டி முனைக்கும் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஈழப் பிரகடனம் பண்ணுகத்து சோசலிச ஈழப் பிரகடனமாக அமைந்துவிடாமல், அடிப்படை மாற்றத்தைக் காணக்கூடிய ஒரு புரட்சிப் பாங்கிலானதாய் அமைய வேண்டும். அதனாலேயே ஈழவருக்கான சோசலிச சமுதாயம் மக்கள் அடிப்படையிலான புரட்சி பிரவசமாக அமைய வேண்டும் என வற்புறுத்துகிறோம். அதை உருவாக்கிக்

கொடுக்கக் கூடியவர்களை உருவாக்க வேண்டும். அதாவது மக்கள் தாமாகவே எழுச்சி அடைவதில்லை. அந்த எழுச்சியை உருவாக்கக் கூடிய புத்தி ஜீவன்களை (அல்லது அறிவானவர்கள்) உருவாக்க வேண்டும் அதுவே நமது முதற்கடமை; தர்க்கீகத்தின் தலையாய பொறுப்பு.

கடமை வேறு; பங்களிப்பு வேறு. உணர்ச்சிக்கும், உணர்வுக்கும் எத்தனை வேறுபாடோ அதே போல் தான் கடமைக்கும் பங்களிப்புக்கும் இடைப்பாடு. உணர்ச்சியும் உணர்வும் பிணைக்கப் படும்போது பிரதிபலிப்பது தான் மனித எழுச்சி. இதை மக்கள் எழுச்சியாக்க வேண்டும். அதற்கு அணிவகுப்பதே கடமையுணர்ச்சியுள்ள அறிவானவர்களின் பங்களிப்பு. இந்தப் பங்களிப்பில் பல அடையாளங் காணக்கூடிய வர்க்க நலன் சார்ந்த வேறுபாடுகளைக் காணலாம். இதன் பிரதிபிம்பமே தலைவர் அமிர்தலிங்கம் கூறியது போல் ''எம் இளைஞர்கள் மத்தியிலே வலதுசாரி-இடதுசாரி, தீவிரவாதிகள் — அதிதீவிரவாதிகள், தீவிர தமிழீழ வாதிகள்...'' என்ற பல்வேறு கூறுகளை இயங்கியல் ரீதியில் ஈழவர்களின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் அவதானிக்க கூடியதாக இருக்கிறது. ஆனால், ஆரம்பத்தில் கோடிட்டுக் குறிப்பிட்டது போல், நாம் நாடும் சோசலிச சகாப்தத்தை எஃகுவோர் மேற்கூறிய அணிகள் மக்கள் போராட்டத்தின் பிரதிபலிப்பா? என்ற கேள்விக்குறியை எழுப்ப வேண்டியது அவசியம்



ஆகிறது. இதனாலேயே, அர்த்தமற்ற கோரிக்கைகளை முன்வைத்து மக்களின் பரபரப்பை தூண்டி (Spontainity) அவர்கள் ஆதரவைப் பெறுகிற சக்திகட்கும், அதனால் தூண்டப்பட்ட சக்திகள் வன்முறையில் ஈடுபடுவதும் நியதியே என்கிறோம். இந்தச் சூழ்நிலைக்கும் மக்கள் போராட்டத்திற்கும் பாரிய வேறுபாடு உண்டு. இதைத் தர்க்கீகவாதிகள் புரிந்து கொள்ளவேண்டும். பூர்ஷுவா ஜனநாயகவாதிகள் எழுப்பும் அர்த்தமற்ற கோரிக்கைகளால் தூண்டப்படும் வன்முறைக்கும் மக்கள் போராட்டத்திற்குமான இடைக்காலத்தில் இன்னோரன்ன எண்ணப்பாட்டு சிந்தனையுடையோர் வெளிக்கிளம்பவதுஉண்டு, இவர்கள் தத்தமது வர்க்க அடிப்படையில் இயங்குவதோடு மட்டுமல்லாமல் தமது எண்ணப்பாட்டு சிந்தனையையும் ஒரு பாரிய சக்தி என்று நினைப்பதும் உண்டு. முதலில் ஜனநாயகவாதிகளை விரோதித்துக் கொண்டு ஈழவிடுதலைக்கு முற்படுவார்கள். மாணவர்கள் தமக்கென அமைப்பு ஏற்படுத்துவார்கள். இளைஞர்களும் தமக்கென அமைப்பு ஏற்படுத்திக்கொள்வார்கள். இவற்றில் விரக்தியடைந்தோர் தமது விழிப்பைக் காட்ட ''ஈழ விடுதலைக்கு வழிகாட்டி'' யாக முற்படுவர். ''அங்கு ஒரு கொலை. இங்கு ஒரு கொள்ளை' என வன்முறையிலும் ஈடுபடுவார்கள். இவை விடுதலையின் பெயரில் நடைபெறும். பின் இது தவறு என நினைத்து ''புதிய பாதை'' யிலும் போவார்கள். சிலசமயங்களில் புதிய ''உணர்வு''ம் வரும். இதற்கும் அப்பாற்பட்டு ''மனிதன்'' என்ற

எண்ண "ஊற்று" பெற்று தார்மீக அடிப்படையிலும் இயங்குவார்கள். இதற்கும் மக்கள் சக்திக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு என்பதை இயங்கியல் ரீதியில் ஆய்வோரும், அணுகுவோரும் அறிவார்கள். உதாரணத்திற்கு பல்வேறு தேசிய இனங்கள் வாழுகின்ற சோவியத் ஒன்றியத்தில் மக்கள் அடிப்படையிலான ஒரு அடிப்படை புரட்சி ஏற்பட்டது. இந்தப் புரட்சியில் முக்கிய சக்திகள் லெனின் தலைமையிலான போல்சுவிக் புரட்சிவாதிகளே. ஆனால் போல்சுவிக் புரட்சிவாதிகளால் 1917 அக்டோபர் மாதம் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்துமுன் அந்த நாட்டில் ஏற்பட்ட பல்வேறு அரசியல் கட்சி பூசல்களை புரிந்தவர்களுக்கு ஏன் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதன் பொருள் புரியும். அங்கு "ஜார்" மன்னனை வீழ்த்துவதற்கு பல சக்திகள் முன்னின்றன. அவற்றுள் முக்கியமானவை "மென்சுவிக்குகள்" என்ற பூர்ஷுவா ஜனநாயகவாதிகள், "பந்து" (Bandu) என்ற யூதர்களைக் கொண்ட நிறுவனம்; "நரோடினிக்" (Narodinic) என்ற இயக்கம்; தவிர "ரபோச்சிடிலோ" (Rabochdilo) போன்ற பல்வேறு இடதுசாரி இயக்கங்களோடு "கிரேடோ" (Credo) என்ற வன்முறை இயக்கமும் இயங்கியது. ஆனால் இவையெல்லாம் இறுதியில் மக்கள் போராட்டத்தை நடத்தி மக்களுக்கான ஒரு மக்கள் ஆட்சியை ஏற்படுத்த முடியவில்லை. பதிலுக்கு மக்கள் போராட்டத்தின் மூலம் மக்களாட்சியை



கைப்பற்றி அவர்களுக்கான "சோசலீச சகாப்தத்தை நடத்துவதற்கான பாட்டாளிவர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தியது "போல்சுவிக்கே". ஆனால் இந்த "போல்சுவிக்" புரட்சிவாதிகளின் சரித்திரமே ஒரு பெரும் பாடமாக ஈழவருக்கு உதவவேண்டும். "போல்சுவிக்" என்றால் ருசிய மொழியில் பெரும்பான்மை என அர்த்தம். இடதுசாரிகள் இணைந்து தம்மை பெரும்பான்மையினர் என்றஎண்ணப்பாட்டில் 'போல்சுவிக்" என அழைத்தனர் தமது எதிரிகளான ஜனநாயகவாதிகளான சிறுபான்மையினரை "மென்சுவிக்" என்றும் ஒதுக்கினர். இந்த இடது சாரிகளான போல்சுவிக்குகள்' எல்லோரும் புரட்சி வாதிகள் அல்ல. அதனால் தான் லெனின் ஆரம்பித்த "இஸ்ரா" பத்திரிகையை கைப்பற்றிக்கொண்டு தம்மைத் தாமே போல்சுவிக்குகள் என பேரம் பேச முற்பட்டனர். அது மட்டுமல்லாமல் லெனின் தலைமையையும் நிராகரித்தனர். ஆனால், புரட்சிப் பாங்கிலும், மக்கள் போராட்டத்திலும் நம்பிக்கை கொண்ட லெனின் படிப்படியாக தோழர்களை உருவாக்கி, அதாவது மக்கள் போராட்டத்துக்கான தோழர்களை உருவாக்கி, "போல்சுவிக்" கையும் இறுக்கமாக்கி, அதனடிப் படையிலான கட்சியையும் உருவாக்கி மக்கள் போராட்டத்தை நடத்தி, சோசலிச சகாப்தத்துக்கான பாட்டாளி வர்க்க ஆட்சியையும் ஏற்படுத்தினர். இதுவே இயங்கியல் நியதி என தார்க்கீகவாதிகள் புரிய வேண்டும். இந்த ஆட்சி கடந்த

64 ஆண்டுகளாக திடகாத்திரமான ஆட்சியாக நிலைத்து வருகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் மக்கள் அடிப்படையிலான போராட்டமும் அந்த மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கக் கூடிய சக்தியை ஆட்சிக்கு அரங்கேற்றுவதே. இதனால் தான் ஈழத்தமிழர்கள் தம் எதிர்காலம் ஜனநாயக சக்திகள் மூலம் நிதர்சனமற்றது எனக் கூறுகிறோம். அது நிச்சயமாக இயங்கியல் ரீதியிலும், தர்க்கீக அடிப்படையிலும் இயங்குவோர் கையிலேயே என அறுதியிட்டு கூறுகிறோம்.

## பகுதி 2

# மலையக மக்களும் போராட்ட முன்னெடுப்பும்

ஈழத்திற்கு வெளியே பல நாடுகளில் சிறப்பாக இங்கிலாந்தில் இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை பற்றி வெகுவாகப் பேசப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. இலங்கையில் உருவாகியுள்ள சூழ்நிலையும் அதற்கு ஏதுவான நிலைமைகளும் முக்கிய காரணங்களாக இருந்த போதிலும் இன்று இலங்கைத் தமிழர்கள் பற்றி வெளிநாடுகளில் ஏற்பட்டுள்ள பொறுப்பான அபிப்பிராயமும், எண்ணப்பாங்குமே இப்பிரச்சினை பற்றி இங்கிலாந்திலும் தமிழர்கள் வாழும் இதர நாடுகளிலும் பேசப்பட்டு வருவதற்குக் காரணங்கள்.

இலங்கைத் தமிழர்களல்லாதவர்கள் இன்று இலங்கையில் வாழும் இரு இனங்களான சிங்கள-தமிழ் இனங்களிடையே ஒற்றுமையின்மை நிலவுவதையும் அத்தோடு ஒற்றையாட்சி அடிப்படையில் பெரும் பான்மையினராகிய சிங்கள மக்களின் எதேச்சாதிகார அரசாங்கம் தமிழ் மக்களை ஒரவஞ்சகமாக இனஒடுக்கல் செய்து வருவதையும் அறிந்து அதில் அக்கறையும் காட்டி வருகின்றார்கள். இல்லாவிட்டால் கடந்த வருடம் ஆகஸ்டில் இலண்டனில் நடந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 'ஈழம்' பற்றிய ஆராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றிய விடுதலை (Liberation) பத்திரிகையின் ஆசிரியர் தோழர் அந்தனிகில்பர்ட்,

''இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தனித்தன்மை வாய்ந்ததாயினும் அவர்கள் தம் பிரச்சினை பொதுவாக ஏகாதிபத்தியத்தின் கெடுபிடியில் உலகத் தொழிலாளர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினையில் ஒருபங்கு என்றும் இப்பிரச்சினையில் ஏனைய நாட்டுத் தொழிலாளர்களை முக்கியமாகப் பெரிய பிரித்தானியா தொழிலாளர்களை அவர்கள் சார்ந்த இபக்கத்றை அக்கறை காட்ட செய்ய வேண்டும்'' எனக் குறிப்பிட்டார். அத்தோடு இப் பிரச்சினையினால் இன்று இலங்கையில் அவதியுறும் மலையகத் தொழிலாளர் பிரச்சினையை உலகம் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். அவர்கள் படும் அல்லலைக்கண்டும் காணாததுமாக உலகத் தொழிலாளர்கள் இருந்துவிட முடியாது'' எனவும் சொல்லி வைத்தார். இவர் வேண்டுகோளை நிறைவேற்றும் வண்ணமோ என்னவோ அதே வாரத்தில் இங்கிலாந்தில் உள்ள பிரபல்ய தினசரியான ''கார்டியன்'' பத்திரிக்கை அதன் முதல் பக்கத்தில் மலையகத் தொழிலாளர்களைப் பற்றி 'Bitter taste on the Tea Plants' என்றும், 'The Tamil Pressure' என்றும் கட்டுரைகள் பிரசுரித்திருந்தது.

இப்படி இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளில் இலங்கையரல்லாதவர்களும் அக்கறை காட்டி அப்பிரச்சினையை ஒரு சர்வதேசப் பிரச்சினையாக்க முனையும்போதுதான் இலங்கைத் தமிழர்களிடத்தில் சாதி சமயம் கடந்து ஏனைய கட்டுப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டு உருவாகி வந்த மக்கள் ஐக்கியத்திற்கு ஆபத்துத் தீட்டுவது போன்று இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு



சாரார் ஆன மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரதிநிதி திரு, சௌமிய மூர்த்தி தொண்டமான் ஜே. ஆர். அரசாங்கத்துடன் இணைந்து மந்திரி பதவியும் ஏற்றுக் கொண்டார். இவரது தான்தோன்றித்தனமான நடவடிக்கையால் பாதிக்கப்படுவது இனவாரி அடிப்படையில் மேலெழுந்தவாரியாகத் தமிழ் மக்கள் என்றாலும் அவ்வினத்தின் முதுகெலும்பான தோட்டத் தொழிலாளர்களே மிக பார தூரமாகப்பாதிக்கப் படுவர்.

புதிய ஜே. ஆர். ஆட்சியின் அரசியல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள சலுகைகளில் ஒன்று 1949 ஆம் ஆண்டு முதல் நாடற்ற பிரஜைகளாகக் கணிக்கப்பட்ட மலையகத் தமிழர்களுக்குத் தேசிய பிரஜை என்று அந்தஸ்து வழங்கப்படுவதேயாகும். இது என்றும் கண்துடைப்பு என்பதைத் திரு. தொண்டமான் நன்குணர்ந்தவராயினும் பதவியை ஏற்றுக் கொண்டது சுயநலத்திற்காகவும் முதலாளிவர்க்க உறுதிப்பாட்டிற்காகவும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதனால் எவ்வளவு தூரம் மலையகத் தொழிலாளர்கள் இழப்புக்குள்ளாவார்கள் என்பதையும் அதன் மூலம் அவர்கள் தம் இனம் எந்த அளவுக்குப் பலமற்றதாகும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

புதிய அரசியல் சட்டத்தின் கீழ் வேலை நிறுத்தம் போன்ற தொழிலாளர் போராட்டம் சட்ட விரோதம் என்பதை மலையகத் தொழிலாளர்கள் முழுமையாக உணரவேண்டும். அவர்கள் நலனில் அக்கறை கொண்ட

வர்கள் இதை அவர்களுக்கு நன்கு உணர்த்த வேண்டும். அத்தோடு புதிய அரசியல் சட்டமும் ஏனைய சலுகைகளும் மலையகத் தமிழர்களை இந்தியாவுக்குக் ''கட்டாயக்கடத்தல்'' செய்யும் சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்திலிருந்து விதிவிலக்கு வைக்கவில்லை என்பதை உணர வைக்கவேண்டும்.

இந்த நிலையில் தான் தொண்டமான் அரசாங்கத்துடன் சேர்ந்துள்ளார். அவரது இணைவால் பலனடையப்போவது கொழும்பு, கண்டி, மாத்தறை அட்டன், நாவலப்பிட்டி போன்ற இடங்களில் எஞ்சியுள்ள வம்சாவழி முதலாளி வர்க்கக்கும்பலே. தோட்டத் தொழிலாளர்களையும், மலையகப் பாமரமக்களையும் உறிஞ்சி வாழும் வள்ளியப்பாக்களும், செட்டிமார்களும், துரைமார்களுமே பலனடையப் போகின்றார்கள். பாரதூரமாகப் பாதிக்கப்படப் போகின்றவர்கள் தமிழ்த்தொழிலாளர்களே.

இவர்கள்தம் நலனை நாடாத எந்த இலங்கைத் தமிழர்களின் எதிர் காலத்திலும் சர்வதேச முற்போக்குச் சக்திகள் அக்கறை காட்டமாட்டாது என்பது தெளிவு. உலக அரசியலில், 'தன்னாட்சி' 'சுயநிர்ணயம்' 'பிரிவினை' கோரும் இனங்களின் போராட்டச் சரித்திரங்களைப் பார்க்கும்போது இது புலனாகின்றது. சுயநிர்ணயத்திற்காகப் போராடும் இலங்கைத் தமிழர்களையும், ஈரானில் உள்ள ''கேடிஷ்'' மக்களையும் பார்ப்போமேயானால் இலங்கைத் தமிழர் தமது உரிமைகளுக்காகச் சோல்பரி திட்டக் காலம் முதல் போராடி



வந்தாலும் சுயநிர்ணயக் குரல் எழுப்ப ஆரம்பித்ததும் அதற்காகப் பாராளுமன்றம் அல்லாத பலாத்கார முறையைத் தொடங்கியதும் கடந்த சில ஆண்டுகளில் தான். ஆனால் 'கேடிஷ்' மக்கள் கடந்த பல ஆண்டுகளாகத் தமது உரிமைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றார்கள்.

1975 ஆம் ஆண்டுக்கு முன் அவர்கள் தம் போராட்டத்தை வழி நடத்தி வந்த வலது சாரி கொள்கையுடைய தலைமைப்பீடமும் அதன் தலைவருமான பாஷானியும் போராட்டத்தைக் கைவிட்டு ஓடி ஒளிந்தபோதிலும் அம்மக்கள் மீண்டும் இடது சாரி புரட்சிவாதிகள் தலைமையில் போராடி வருகின்றார்கள். இருந்தும் அவர்களுடைய போராட்டம் உலக அபிப்பிராயத்தை அவ்வளவாக ஈர்க்கவில்லை; ஆனால் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் அவர்தம் போராட்டத்தில் உலக நாடுகள், முக்கியமாக மேற்கத்திய நாட்டுப் பத்திரிகைகள் அனுதாப அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன.

மொழிவாரி இனங்களின் ஆதர்ஸ உரிமைகளில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட அணி சேரா நாடுகளும், ஆங்காங்கே சுதந்திரத்திற்கும், சுயநிர்ணயத்திற்கும் போராடிவரும் இயக்கங்களும் 'ஈழவர்' மீது சகோதரப்பற்றும் தோழமைப் பாங்கும் கொண்டுள்ளமை காணக் கூடியதாக இருக்கின்றது. இதற்குக் காரணம் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையைத் தர்க்கீக அடிப்படையில் அணுகி ''அவர்கள் பிரச்

சினைக்கு நிரந்தர பரிகாரம் அவர்களுக்கென "ஒரு தேசிய அமைப்பு (Statehood) நிறுவுவதே" என்ற வாதத்தை உலகில் உள்ள முற்போக்குச் சக்திகள் ஏற்றுக் கொள்வதே.

ஆனால், இலங்கைத் தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும் அவர்களுக்கு ஒரு சுய ஆட்சியும் சுய நிர்ணய உரிமையும் மறுக்க முடியாத உடைமை என்பதையும் தமிழரல்லாத இலங்கையரும் இலங்கையரல்லாத ஏனையோரும் ஒப்புக் கொண்ட போதிலும் அவர்கள் தத்தமது வர்க்கப்பாட்டு நலன் சார்ந்த அடிப்படையிலேயே இலங்கைத் தமிழரின் சுயநிர்ணய உரிமையையும் அதற்கான மார்க்கத்தையும் அணுகுகின்றார்கள். இவர்கள் தம் கருத்து கடந்த சில மாதங்களில் தெளிவாகப் புரியக்கூடியதாக உள்ளது.

தமிழர்களின் ஏகோபித்த முடிவையும் அதற்கான மார்க்கத்தையும் பார்ப்பதற்கு முன் தமிழரல்லாத இலங்கையரின் கருத்தையும் அவர்தம் வழிவகைகளையும் முதலில் பார்க்கவேண்டும். அண்மையில் இலண்டன் வந்த சில அரசியல் பிரமுகர்களின் கருத்தும் அவதானிப்பும் நம் ஆய்வுக்கு உதவுகின்றன. ஒரு நாட்டின் அரசியலில் தாக்கமும் பாதிப்பும் ஏற்படும் போது அந்நாட்டு அரசியல்வாதிகளில் சிலர் வெளிநாடுகளுக்குப் படையெடுப்பது வழமை. சிறிமாவோ அரசாங்கத்தின் இறுதிக் கட்டத்தில் ஜே. ஆர். உட்பட பலர் இலண்டன் வந்து சென்றனர். இப்போது ஜே ஆரின் வலதுசாரி ஆட்சி வலுப்பெறுமுன் இடதுசாரிகள் சிலர் இலண்டன் வந்து போகின்றனர்.



வலதுசாரிக் கட்சியோ இடது சாரிக் கட்சியோ எது இலங்கையில் அரசு வகித்தாலும் ஒவ்வோர் பாராளுமன்ற நடைமுறைக் காலத்திலும் இலண்டன் வந்து போகிறவர்கள் தமிழ்ப் பிரமுகர்களே இந்த ரீதியில் கடந்த வருட இறுதிப் பாட்டிலும், இவ்வருட முற்பகுதியிலும் இலங்கை அரசியல் பிரமுகர்களான மக்கள் விடுதலை முன்னணியைச் (J V P.) சார்ந்த ரோகண விஜயவீராவும் புரட்சிவாதலங்கா சமசமாஜக் கட்சியைச் சார்ந்த வாசுதேவ நாணயக்கார- விக்ரமபாகும் தொழிற்சங்கவாதியும் மார்க்சீய புரட்சிவாதக் கட்சியைச் சார்ந்தவருமான பாலாதம்புவும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும்-எதிர்க் கட்சித் தலைவருமான அமிர்தலிங்கமும் மற்றும் வி. என் நவரத்தினம் போன்றோரும் வந்தனர். இவர்கள் கருத்தோட்டங்களையும், கண்ணோட்டங்களையும், அபிப்பிராயங்களையும் அணுகும் போது ஈழத் தமிழர் பிரச்சினையின் பரிசீலனையும் அதன் முடிவுக்கான மார்க்க வேறுபாடுகளும் தெளிவாகின்றன.

முதலில் ஜே வி. பி யின் கருத்தையும் தோழர் ரோகணாவின் கண்ணோட்டத்தையும் பார்ப்போம். தோழர் ரோகண விஜய வீர ஒரு புரட்சிவாதி. இவர் ஒரு மார்க்சீய சிந்தனையாளர். இலங்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் மட்டுமல்ல; 1971இல் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியவர்களில் ஒருவருமாவார். அதற்காகச் சிறையும் சென்றவர். இந்த அளவில் அவரை இடதுசாரி நாட்டமும் மார்க்சீய மார்க்க

சிந்தனையும் உள்ள எவரும் பாராட்டாமலும், மதிக்காமலும் இருக்க முடியாது.

ஆனால் சிந்தனை வேறு; செயல் முறை வேறு; புரட்சி வாதம் வேறு! புரட்சிப் பாதை வேறு. இவை இரண்டும் இணையும்போது தான் ஒரு யுகப் புரட்சி உருவெடுக்க முடியும். இதை அவர் கடந்த காலத்தில் உணரவில்லை என்பதை அவரே ஒத்துக் கொள்கிறார். இல்லாவிட்டால் இலங்கையில் நல்ல முறையில் உருவாக்கப்பட இருந்த யுகப் புரட்சியை (Revolutionary Epoh) வெறும் கிளர்ச்சியாக (Uprising or Insurgency) முடிக்கக் காரண கர்த்தாவாக இருந்திருக்க மாட்டார். இதற்கு அடிப்படைக் காரணங்கள் பல. அவற்றைத் தனியாகவே பார்க்க வேண்டும். ஆனாலும் வெளிப்படையாகக் காணக்கூடிய ஒரு காரணத்தை அது தமிழர்களைப் பொறுத்த வரை முக்கியமானது என்பதனால் இங்குக் குறிப்பிடுகின்றோம்.

நாடு தழுவிய போராட்டம் (National Struggle) அல்லது மக்கள் எழுச்சி வேறு; யுகப் புரட்சி அல்லது மக்கள் புரட்சி வேறு. இவற்றிற்கான அடிப்படை விபரங்களையும் வேறுபாடுகளையும் 1969-71 வரை தோழர் ரோகண நன்கு புரிந்து கொண்டிருக்கவில்லை. மக்கள் புரட்சியே (Peoples Revolution or Struggle) நாடு தழுவிய கிளர்ச்சி என்று கருதி அந்நாடு தழுவிய கிளர்ச்சி சிங்கள மக்களின் எழுச்சி (Singalese People's Struggle) என்ற சிந்தனையில் திக்குமுக்காடியவர். இதனாலேயே 1971 கிளர்ச்சி வெறும் சிங்கள இளைஞர்களின் எழுச்சியாகவும் அப்போது



தோழர் என். எம். பெரேரா கூறியதுபோல ''சிங்களம் படித்த இளைஞர்களின் விதண்டாவாதப் போராட்டமாகவும் '' முடிந்திருக்கிறது.

இதிலிருந்து 1971 இல் ஏற்பட்ட எழுச்சியில் தமிழ் இளைஞர்கள் பங்கு பற்றவில்லை என்பது தெளிவாகின்றது. அதற்கான காரணம் அக்கிளர்ச்சி எண்ணத்திலும் பேச்சிலும், உருவெடுப்பிலும் நாடு தழுவிய கிளர்ச்சியாக உருவெடுக்காமல் சிங்கள இளைஞர்களின் அபிலாசைக் கிளர்ச்சியாகவே உருவெடுத்தது. இதற்குத் தோழர் ரோகண போன்றவர்கள் காரணகர்த்தாக்களாக இருந்த போதிலும், தமிழர்களும் தமிழ் இளைஞர்களும் பொறுப்பாளிகள் என்பதையும் மறைக்கமுடியாது. இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் தமிழர்களின் அரசியல் வெறும் தமிழ் இனப்பற்று (Tamil Nationlism), சம்பிரதாயம், பாரம்பரியம் என்ற பந்தோபஸ்துகளுக்குள் உட்பட்டு வந்தமையால் இடதுசாரிக் கொள்கையோ தர்க்கிக சித்தாந்தமோ ஊடுருவ இடமளிக்காத அளவுக்கு வெறும் இன உணர்ச்சி வலுப்பெற்றிருந்தது.

சிங்கள மக்களிடத்து எவ்வளவு தூரம் சிங்கள தீவிர வாதம் வலுப்பெற்றிருந்ததோ அவ்வளவு தூரம் தமிழ் வகுப்பு வாதமும் வலுப்பெற்றிருந்தது. இதனாலே தானோ என்னவோ ஜே. வி. பி. யினர் நாடு தழுவிய புரட்சிக்கு அடிகோலாமல் சிங்களக் கிளர்ச்சிக்கு வழி வகுத்தனர். இங்கு தான் தோழர்ரோகண

போன்ற தோழர்களின் சிந்தாந்தத்தின் சூனியத்தையும் அவர்களின் புரட்சிப் பாதையின் சூட்சுமத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது.

திரிகரணசுத்தியுடன் இலங்கையில் ஒரு தேசியப் புரட்சிக்கு வித்திடும் எந்த இடது சாரியோ அல்லது மார்க்சிய சித்தாந்தவாதியோ ஓர் அடிப்படை உண்மையை மறந்து விடக் கூடாது. "ஒவ்வொரு போராட்டமும் வர்க்கப் போராட்டமே'' என்றான் வித்தகன் மார்க்ஸ். இலங்கையில் யுகப் புரட்சிக்கு வித்திடுபவர்கள் இந்தவர்க்கப் போராட்டத் தர்க்ககீகத்தை அனுதினமும் அவதானிக்க வேண்டும்.

இலங்கையில் இரண்டு வர்க்கங்கள் உண்டு. ஒடுக்குபவர்களும் ஒடுக்கப்படுபவர்களும் இலங்கையைப் பொறுத்த மட்டில் நாடு தழுவிய ரீதியில் பார்க்கும் போது இலங்கை சுதந்திரம் அடையுமுன் ஆங்கிலேயர் ஆதிக்கமும் தோட்ட முதலாளித்துவமும் ஒடுக்கும் வர்க்கத்தினராகவும் சுதந்திரத்திற்குப் பின்னர் அண்மை வரை தோட்ட முதலாளித்துவமும் சிங்கள-தமிழ் நிலப்பிரபுத்துவமும் அதிகார வர்க்கமாகவும் தோட்டத் தொழிலாளர்களும் விவசாயிகளும் அடக்கி ஒடுக்கப்படும் வர்க்கத்தினராகவும் இருந்து வந்துள்ளனர். 1972-ல் வெளியிடப்பட்ட "டட்லிசியேர்ஸ்'' (Dudlyseer's Report) அறிக்கைபடி இலங்கையின் 89 சதவீதத்தினர் தலைக்குத்தலை ஆண்டுக்கு நானூறு ரூபாவுக்குக் குறைந்த பட்சமே சம்பாதிக்கின்றனர்.



ஆகவே, நாடு தழுவிய அடிப்படையில் புரட்சி காண விரும்புவோர் தமிழர் சிங்களவர் என்ற இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு சாதி சமயமற்ற முறையில் வர்க்கரீதியில் ஒடுக்கப்படும் வர்க்கத்தினரின் உரிமைக்காக மட்டுமே இல்லாமல் அவர்கள் சமூக உடைமைக்காகப் (Social Ownership) போராட முனைந்திருக்க வேண்டும். அந்த வகையில் போராட முனையும்போது மலையகத் தோட்டத் தொழிலாளர்களை அப்போராட்டத்தின் பொதுவலராகவும், முன்னணியினராகவும் உருவாக்கியிருக்கவேண்டும். 1971-ல் நடந்த கிளர்ச்சியில் இது நடைபெறவில்லை. காரணம் ஜே. வி. பி தோழர்களின் தெளிவற்ற சிந்தனையையும், திரிகரண சுத்தியற்ற இலட்சியத்தையுமே அது எடுத்துக் காட்டுகின்றது. அவர்கள் நிச்சயமாக மார்க்சியவாதிகள்!

ஆனால், புரட்சிப்புரவலர் லெனின் கூறியதுபோல் ''இந்த மார்க்சியவாதிகளெல்லாம் சமூகக் கிராதகர்கள்'' (Social Chuvanists are Marxists Now) என்ற அவதானிப்புக்கு எடுத்துக் காட்டாகின்றார்கள். இதே தவறை இன்று தமிழர்களைப் பொறுத்தமட்டில் தமிழர் விமோசனம் என்ற பெயரில் சில கிராதகக் குழுக்கள் புரிந்து வருவது காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் ஜே. வி. பி. யினர் ஏனைய சிங்கள இடதுசாரிகள் சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் செய்த தவறையே செய்துள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சி, சமாசமாஜக் கட்சி உட்பட எல்லோரும் மலையகத்

தோட்டத் தொழிலாளர்களை வர்க்க அடிப்படையில் அணுகாமல் வெறும் இன ரீதியாகக் கண்டு அவர்களை வர்க்கப் போராட்டத்திற்கு உட்படுத்தாமல் விலக்கி வைத்தே வந்துள்ளார்கள்.

இதற்குச் சிங்கள இடதுசாரிகளையும் சிங்களப் புரட்சிவாதிகளையும் சாடும்போது மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அல்லாத இந்திய வம்சாவழியினரையும் பொறுப்பாளிகளாக்க வேண்டும். இங்குத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இந்திய வம்சாவழியினருக்கும் உள்ள தாத்பரிய வேறுபாட்டை உணரவேண்டும் மலையகத் தொழிலாளர்கள் வம்சாவழிகள் அல்ல. அவர்கள் இலங்கையில் அப்போது அபிவிருத்தி அடையாத நிலப்பிரபுத்துவத்தின் காரணத்தால் வளப்படுத்தப்படாத அல்லது அபிவிருத்தி பெறாது இருந்த நிலப் பிராந்தியத்தில் பொருளியல் அடிப்படையில் முதலாளித்துவ அமைப்பில் ஒரு தோட்டமயமான ஏற்றுமதிப் பொருளியலை உருவாக்க உதவியவர்கள்.

ஆங்கிலேயர் காலத்தில் அடிமைத் (Slave Trade) தொழிலுக்குப் பின் உருவான கூலி (Serfdom) அடிப்படையில் இலங்கையில் குடியேற்றப்பட்டவர்களேயொழிய வந்தேறு குடிகளல்லர். குடியேற்றப்பட்ட காலந்தொட்டு இலங்கையை முக்கியமாக மலையகத் தேயிலைத் தோட்டங்களைத் தாயகமாகக் கொண்டவர்கள். இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கித் தொடர்ந்து தொடர் சந்ததிகளாகவே இருந்து வந்திருக்கின்றனர். இன்றும் உழைக்கும் வர்க்கத்தினராக இலங்கையில் இருந்து வருகின்றனர்.



ஆனால் ஆங்கிலேயரின் ஆட்சியில் முதலாளித்துவ மயமான பொருளாதார அமைப்பு இலங்கையில் வளர்ந்து வரும் காலத்தில் உலக ரீதியில் ஆங்கிலேயரால் கைக்கொள்ளப்பட்ட கட்டுப்பாடில்லாத ('LAI-ZEFARE'') கொள்கையினால் பல நாடுகளில் இருந்தும் பணம் தேடும் நோக்கமாக இலங்கைக்குப் பலர் வந்து சென்றனர். பாகிஸ்தானில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் வியாபார நோக்குடன் வந்தவர்கள் பலர். இவர்களின் நோக்கம் தோட்டத் தொழிலாளிகளின் நோக்கத்திற்கு எதிர்மாறானது. எப்படியாவது பணம் சேர்த்து இந்தியாவுக்குப் பணம் அனுப்புவதே இவர்கள் நோக்கம்.

இவர்கள் தமது நோக்கத்திற்குச் சாதகமாக தோட்டத் தொழிலாளர்களை உபயோகிக்க முயன்றார்கள் என்பது பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இல்லாவிட்டால் இலங்கைத் தோட்டத் தொழிலாளருக்கென ஒரு தொழிற் சங்கம் தொழிலாளர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் இலங்கை இந்தியக் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டதின் மூலம் அதன் ஆரம்ப விழாவிற்கும், அங்கு பார்ப்பணக் கூட்டத்திற்கும் இந்தியதேசிய காங்கிரசின் முக்கியத் தலைவரான பண்டித ஜவகர்லால் நேரு வந்ததன் மூலம் இந்திய வம்சாவழியினரின் நோக்கை, இந்திய முதலாளித்துவப் பிரமாண்டத்தை, அதன் வர்த்தக விஸ்தீரண மனப்பான்மையை ஊகிக்க முடிகிறது. அத்தோடு காங்கிரசின் முதல் தலைவர்

களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் முக்கியமான
வர்கள் திரு சௌமியமூர்த்தி தொண்டமானும், திரு
ஏ. அஸீசும் ஆவார்கள். அவர்களும் ஏனைய தலைவர்
களும் எந்த விதத்திலும் தோட்டத் தொழிலாளர்
வர்க்கத்தைச் சார்ந்தவர்களல்லர். பதிலுக்குப் பணம்
படைத்தத் தோட்ட முதலாளித்துவ, வாணிப
வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு எந்த
விதத்திலும் தொழிலாளர்கள் பேரிலேயோ ஈழத்தின்
பேரிலேயோ பற்றுதல் இல்லை.

பதிலுக்குத் தங்கள் முதலீட்டிலும், இந்தியாவி
லுள்ள தமது பாரம்பரிய சொத்திலுமே எண்ணம்
கொண்டிருந்தார்கள். இதற்கு மாறாகத் தோட்டத்
தொழிலாளர்கள் இந்தியாவின் தமிழ்ப் பகுதியிலிருந்து
வந்தாலும் இலங்கையின் மலைப் பகுதிகளைத் தாயக
மாகக் கொண்டிருந்தார்கள். இவர்களுடையந லனில்
வம்சாவழியினரோ அல்லது வடக்கு கிழக்குப் பகுதி
களில் வாழ்ந்து வந்த 'பூர்வீகக்குடிகள்' என்று
சொல்லிக் கொள்பவர்களே அக்கறை காட்டவில்லை.

வம்சாவழியினரின் வாணிபப் போக்கும் அவர்கள்
தம் இந்திய தேசியச் சிந்தனையும் தோட்டத் தொழி
லாளர்களை இலங்கை அரசியல் போராட்டங்களில்
பங்கு பற்ற விடாது ஒதுக்கி வைத்தது. இல்லா
விட்டால் 1949 ஆம் ஆண்டு அவர்களின் வாக்குரிமை
பறிக்கப்பட்டபோது அத்தொழிலாளர்கள் திரண்டு
ஆக்கப்பூர்மானதொரு போராட்டத்தை நடத்தியிருக்க
வேண்டும். அப்படியொன்றை அவர்களோ, வம்சா



வழியினரோ அல்லது இடதுசாரித் தலைவர்களோ
நடத்தவில்லை. இதனால் இலங்கை இந்தியக் காங்கிரஸ்
கட்சி கலைக்கப்பட்டபோது இந்திய வம்சாவழியினர்
பிரிந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (C.W C.)
என்று இந்திய வம்சாவழியினரான தொண்டமான்
தலைமையிலும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்
(D W. C.) என்று பாகிஸ்தானிய வம்சாவழியினரான
ஏ. அசிஸ் தலைமையிலும் அமைக்கப்பட்டன. இவர்கள்
இருவரும் தோட்டத் தொழிலாளர்கள் அல்லர். நிலப்
பிரபுவும் வர்த்தகரும் ஆவார்கள்.

இவர்கள் எந்தக் காலத்திலும் தோட்டத்தொழி
லாளர்களின் நலனில் அக்கறை காட்டவில்லை. இல்லா
விட்டால் தமிழ்த் தொழிலாளர்களைப் பாதிக்கும்
வண்ணம் தோட்டங்கள் தேசிய மயமாக்கப் பட்ட
அத்தோட்டங்களிலுள்ளத் தொழிலாளர்களின்
நிலங்கள் பலவந்தமாகப் பறிக்கப்பட்டபோதும், ஏன்
தொழிலாளர்களையும் மலையகத் தமிழர்களையும்
'இந்திய வம்சாவழியினர்' என்ற தரப்பில் சிறிமாவோ
சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் கட்டாயக் கடத்தல்
நடத்தும் போதும் ஒரு போராட்டம் நடத்தி அவர்
களுக்கு விமோசனம் கண்டிருக்க வேண்டும். இந்தச்
சூழ் நிலையில் தான், இலங்கைத் தோட்டத் தொழிலா
ளர்கள் இருந்து வருகிறார்கள்.

இவர்களுடைய அன்றாட உழைப்புப்பற்றி ஊதிய
உயர்த்திப்பற்றி வம்சாவழித் தலைவர்களும் ஏனைய
சிங்கள இடதுசாரித் தலைவர்களும், தமிழ்த்தலைவர்
களும் கருணை ரீதியில் அக்கறை காட்டினார்களே

ஒழிய அவர்களின் அரசியல் உரிமைகளுக்காகவோ அல்லது உடைமைப் பாட்டுப் போராட்டத்திற் காகவோ அணிவகுக்கவில்லை.

இந்த வகையில் பார்க்கும்போது மலையகத் தமிழர்களினதும், தொழிலாளர்களினதும் அரிசியல் உரிமைக்காக முதலில் குரல் கொடுத்தது மட்டுமல்லா மல், அவர்கள் நலனுக்காகவும் ஏன் இலங்கை வாழ் தமிழினத்தின் இனவாரி நலனுக்காகவும் வித்திட்ட வர்கள் காலஞ்சென்ற தந்தை செல்வநாயகமும், தலைவர் கு. வன்னிய சிங்கமும். அவர்கள் வழித் தோன்றலான திரு. அ. அமிர்தலிங்கமும் ஆவார்கள் என்பதை மறக்கவோ மறைக்கவோ முடியாது,

1949-ஆம் ஆண்டு மலையகத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோதுதான் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நடுத்தர வர்க்கச் சிந்தனையும் அபிலாசையும் பிரதிபலித்து அதன் அடிப் படையிலேயே ஆனைப்பந்தியில் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆவரங்கால் மாநாடு வரை இலங்கைத் தமிழர் களின் அரசியல் இருந்து வந்திருக்கின்றது.

இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையும் அவர் கள் தம் அரசியல் போக்கும் எவ்வளவு தூரம் நடுத்தர வர்க்கத்தின் பிரச்சினையையும் சிந்தனையையும் பிரதி பலிக்கின்றன என்பதை முன்னைய ஆய்வுகளில் தந் துள்ளோம். இருந்தும் இங்குக் குறிப்பிட வேண்டிய முக்கியமானதொன்றைக் கூறுகின்றோம்.



1977ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனமும்கூட, தமிழர்களின் சுயநிர்ணய முடிவு பற்றியதே ஆகும். ஒற்றையாட்சி அடிப்படையில் இருக்கும், எந்த இலங்கை அரசியல் அமைப்பிலும், இலங்கை வாழ் தமிழர்கள் அரசியல் பொருளாதார நலனுடன் வாழ முடியாது என்பதினாலேயே 1949 இல் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டதும் அதன் கோரிக்கையாக சமஷ்டி ஆட்சித் திட்டத்தை விஞ்ஞாபனப்படுத்தியது.

ஆனால் கடந்த கால அனுபவத்தின் மூலம் இது சாத்தியமில்லை என்பதையும், சிங்கள அரசியல் வாதி களின் தர்க்கீகமற்ற குதர்க்க வாதத்தையும் இன வெறிக் கொள்கையும்; தமிழ் மக்களையும் அவர்கள் வாழ்ந்து வரும் பிராந்தியங்களையும் இன ஒடுக்கல் செய்வதுமான சூட்சுமத்தையும் உணர்ந்த தமிழ் மக்கள் தமக்கென ஓர் ஆட்சி அமைக்க வேண்டும் என எண்ணினர். அதற்கான திட சங்கல்பம் செய்து கொண்டது அர்த்தம் பொதிந்த அரசியல் நெறியே.

இந்த அடிப்படையில்தான் 1977 தேர்தலிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞா பனமும் மக்கள் முடிவும் அமைந்தன. ஆனால் உரிமை கள் வேறு; உடைமை வேறு. இதை நம் தலைவர்கள் இன்னும் உணரவில்லை. உடைமைப் போராட்டம் தர்க்கீக அடிப்படையில் தான் உருவெடுக்க முடியும் அதைப் பாராளுமன்ற ஜனநாயக ரீதியில் முடிவுகான முடியாது. இந்த அடிப்படை விபரத்தை நம் தலைவர் களும், மக்களும் தெளிவாக இன்னும் உணரத் தயாராக இல்லை.

நம் மக்கள் தமக்கென ஒரு நாடு கோருவது அவர்களது ஆதர்ஸ உரிமை (Inalianable Rights). இதை யாரும் மறுக்க முடியாது. மறுப்பவர்களை யார் தடுத்தாலும் விட்டு விடக் கூடாது. ஆனால் அந்த உரிமையை உடைமையாக்கிக் கொள்வதற்குப் போராட்டம் அவசியம். வெறும் உரிமைப் போர் நடத்துவதுதான் தவறு. இங்குதான் ஜனநாயக அடிப்படையில் உருவாகும் பாராளுமன்றத்தின் பலவீனத்தையும் அதன் பயனற்றத் தன்மையையும் உணர வேண்டும்.

இந்த மக்கள் உடைமையையும் அதற்கான உரிமையையும் ஜே. ஆர். ஜெயவர்த்தனா போன்ற சமதர்மத்தின் பரம எதிரிகள் மறுப்பார்களே அன்றி அடிப்படை மனித சாசன உரிமைகளில் நம்பிக்கை கொண்ட ஏனைய தமிழர் அல்லாதவரும், இலங்கையர் அல்லாதவரும், இதை மறுக்க மாட்டார்கள். இதனாலோ என்னவோ லண்டனில் உள்ள 'கினிப்புரா' என்ற சிங்கள இடதுசாரிகளான மார்க்சீய சிந்தனையாளர்கள் 'இலங்கையின் தேசியப் பிரச்சினையும் சிறுபான்மையினரும்' என்ற தலைப்பில் நடாத்திய கருத்தரங்கிலும், அதன் பிரதிபலனாக வெளியிடப்பட்ட கருத்துப்பாட்டிலும் தமிழ் மக்களுடைய ஏகோபித்த அபிலாசையையும், சுயநிர்ணய உரிமையையும் ஆதரிக்கும் வண்ணம் We the recognise right of the Tamil speaking people for Self Determination ever to the extend of seperate existance as another socialist state' என்று எழுதியுள்ளார்கள். இதன் கருத்தடிப்



படையிலே ஏனைய சிங்கள இடதுசாரிகள் தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகுகிறார்கள் என்றாலும் அவர்கள் அணுகும் மார்க்கங்களில் கருத்துக் குழறுபாடுகளும், அஃகோண கோணல்பாடுகளும் காணக் கூடியதாக இருக்கின்றன. இல்லாவிட்டால் மேற்படிக் கருத்தைத் தெரிவிக்கும் 'கினிப்புரா' கருத்து விளக்கப் பிரச்சாரம் செய்யும் முகமாகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் தோழர் ரோகணா, 'தாம் பிரிவினையை ஆதரிக்கவில்லை' என்று பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கமாட்டார்.

மார்க்சிய லெனினிய சிந்தாந்த அடிப்படையில் 'இலங்கை வாழ் தமிழ் மக்களின் இனவாரி அடிப்படையில் தனித்தியங்குவதற்கான சுயநிர்ணய உரிமை உண்டு' என்ற கருத்தை வெளிப்படையாகவும் நாசூக்காகவும் அவர் தெரிவிக்கும்போது 'பிரிவினையைத் தாம் ஆதரிக்கப் போவதில்லை' எனவும் 'அப்படி பிரிவினைக்காகத் தமிழ் இளைஞர்கள் போராடும்போது தம் இயக்கத் தோழர்கள் பாராமுகமாக இருப்பார்கள்' எனவும் தெரிவித்திருப்பதிலிருந்து அவரது சிந்தனைக் குழப்பத்தை ஊகிக்க முடிகிறது. முன்னம் கூறியபடி அவரொரு மார்க்சியவாதி மட்டுமல்ல புரட்சிவாதியுங்கூட!

ஆனால் இன்று இவர்களை பொறுத்த மட்டில் அங்குள்ள அடிப்படை பிரச்சினையை அணுகுவதில் அல்லது அப்பிரச்சினையை அவதானிப்பதற்கு தர்க்கீக அடிப்படையில் கிரகித்துக் கொள்ள ஒரு மார்க்சியப்

புரட்சிவாதிக்கு வேண்டியதும் அவசியமானதுமான சிந்தனைத் தேர்ச்சியில் ஒரு தேக்கத்தைக் காணமுடிகின்றது. இல்லாவிட்டால் இந்த முரண்பாட்டை, மேற்படி அபிப்ராயக் கருத்துகளை ரோகணு தெரிவித்திருக்கமாட்டார். அதாவது தமிழ் மக்களின் தனித்தியங்கும் உரிமையை மறுக்காது ஆமோதிக்கும்போது தமிழர்கள் தம் போராட்ட நோக்கை எதேச்சை பண்ணுவது இந்த முரண்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது.

மேற்படி முரண்பாடு ஜே. வி. பி. தோழரிடம் மட்டுமல்ல; தமிழர்களின் சுயநிர்ணயம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் ஏனைய இடதுசாரிகளிடமும் காணக் கூடியதாக இருக்கின்றது. உதாரணத்திற்கு இந்த அடிப்படை முரண்பாட்டைத் தோழர் பாலாதம்புவிடமும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலண்டனில் ஈழ மாணவர்களுடன் கருத்துப்பரிமாறும் போது அரசியல்பற்றி பல விளக்கமான கருத்துகளைப் பாலாதம்பு கூறிய போதிலும் தேசிய இனப் பிரச்சினை பற்றிய அடிப்படைக்கருத்தில் அவரது தெளிவற்ற, திரிகரண சுத்தியற்ற கருத்து முடங்கல் காணக் கூடியதாக இருந்தது.

இவரைப் பொறுத்தமட்டில் தமிழ்ப்பேசும் மக்கள் இலங்கையில், இயங்கியல் ரீதியில் அடையாளம் அல்லது இனம் கண்டு கொள்ளக்கூடிய அளவிற்கு ஓர் உயிர்ப் பிறவி. அதைச் சிங்கள மக்களோ அல்லது ஏனையரோ தட்டிக் கழித்து விடவோ மறந்தும் மறைத்திடவோ;



இல்லை அசட்டைப் பண்ணவோ முடியாத அளவுக்கு ஒரு தனிப்பிறவி.

அது ஊசலாடும் பிறவி. அப்பிறவிக்கு ஏனைய பிறவிகளைப் போல் சில உரிமைகளுண்டு. அந்த உரிமைகளை நிர்ணயிக்கும் பொறுப்பு அவர்களிடம்தாம் உண்டு. இந்த அடிப்படையிலேதான் தோழர் தம்பு தமிழர்களின் சுயநிர்ணயத்தை அணுகிஞரே அன்றி, கடந்த பொதுத்தேர்தல் மூலம் தமிழர்கள் செய்த 'ஏகோபித்த சுயநிர்ணயமுடிவை' வாதத்திற்கு எடுக்க மறுக்கின்ருர்.

கடந்த பொதுத் தேர்தலின் மூலம் 'ஈழம் நமது திருநாடு இனிய செந்தமிழ்த் தாய்நாடு' என்ற உடைமைப்பாடு கோரி சுயநிர்ணயமுடிவு செய்துள்ளார்கள் இந்த முடிவைத் தோழர் தம்பு ஏற்கத் தயாராயில்லை. இதற்கு அவர் தெளிவாகக் கூறும் வெளிப்படைக். காரணம் தர்க்கீகமற்றது, ஆனாலும் அவர் 'நியாயமாக விவேகமாகக் கற்பிக்கும் காரணத்தைப் பார்ப்போம். கடந்த பொதுத் தேர்தலின் மூலம் தமிழர்களின் ஏகோபித்த முடிவாக 'ஈழம்' கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

ஜனநாயக ரீதியில் தமிழர்கள் எடுத்த இம்முடிவு சிங்கள மக்களுக்கும், இலங்கையர் அல்லாதோருக்கும் விஞ்ஞாபனப்படுத்தப்பட்டது. அதன் பொறுப்பாளிகளாக திரு. அமிர்தலிங்கம் தலைமையில் 18 நாடாளுமன்ற அங்கத்தவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகளாகப்

பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டனர். 'ஆண்டு இரண்டாகியும் ஆனதொன்றுல்லை' என ஆத்திரப்படும் தமிழிளைஞர்களைப் போல தமிழர் விடுதலைக் கூட்டணியின் அந்தரங்க சுத்திபற்றி கேள்விக்குறியை பாலா தம்பு எழுப்புவதும் விவேகமான பரிட்சையே.

அவர் கருத்தின்படிக் கடந்த பொதுத் தேர்தல் முடிந்ததும் தலைவர் அமிர்தலிங்கமும், அவரது ஆணையாளரும் நாடாளுமன்றம் நாடாமல் தனித்தியங்கி இருக்கவேண்டும்.

அப்படி தனித்தியங்கி இருந்தால் அதனால் ஏற்படும் தேசிய நெருக்கடி போன்ற விளைவுகளில் இருக்கக்கூடிய சாதகமான அம்சங்களையே அவர் கவனத்திற்கு எடுத்திருக்கின்றார். பாதகமான அம்சங்களை முக்கியமாகக் கடந்த இனக்கலவரம் ஏற்பட்ட சூழ்நிலையில் தமிழ்ப் பிரதிநிதிகள் தனித்தியங்கி இருந்தால் எவ்வளவு தூரம் இனக்குரோதம் தலையெடுத்திருக்கும் என்பதைப் பாலாதம்புவால் ஊகிக்க முடியவில்லையே என்பது வருத்தமாக இருக்கின்றது.

தமிழர்களின் நியாயமான உரிமைகள் பற்றிக் கடந்த தேர்தலில் முடிவு செய்திருந்தால் தம்பு தர்க்கிப்பது போல் தமிழ்த் தலைவர்கள் ஒத்துழையாது தனித்தியங்கியிருக்கலாம். அதனுடைய பலாபலனை நாடும், மக்களும் உணரக்கூடியதாய் இருந்திருக்கும்.

ஆனால் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் முடிவு வெறும் உரிமைகளுக்காக (Rights) அல்ல.



பதிலுக்கு அவர்கள் முடிவு செய்தது தேசிய உடைமைக்காக! (Statehood) வெறும் உரிமைகளைச் சட்டம் மூலமாக அரசியல் அமைப்புச் சட்டப் பாதுகாப்புகளின் கீழ் (Constitutional Guarantees) பெறலாம்.

இது கடந்த காலத்தில் நடைபெறாததால் இலங்கை ஆட்சியிலும், ஆட்சி அமைப்புச் சட்டத்திலும் நம்பிக்கை இழந்து தமக்கென ஒரு சுய ஆட்சியை நிர்மாணிக்க (Institute) முடிவு செய்தது தர்க்கீகமே. இதைத் தோழர் தம்பு புரிந்து கொள்ளவில்லை. தமது அரசியல் வாழ்க்கையில் வெறும் பொருளாதார உரிமைகளுக்காக போராடிய தொழிற்சங்கவாதியாக இருந்த தோழர் தம்புவுக்கு உடைமைப் பாட்டுப் போராட்டம் பற்றி எங்கே புரியப்போகிறது.

அந்த உடைமைப்பாட்டுப் போராட்டத்தின் தார்ப்பரியத்தை அவர் புரிந்திருந்தால் இலங்கையில் வர்க்க அடிப்படையில் நாடு தழுவிய உடைமைப் போராட்டத்தை என்றோ ஆரம்பித்திருப்பார்.

அந்த கைங்கர்யத்தில் ஈடுபடாமைக்கு அவரது நடுத்தர வர்க்கஞ் சார்ந்த சிந்தனையும் அவ்வர்க்க நலன் சார்ந்த ரீதியில் பிரச்சினையை அணுகுவதுமே காரணம்.

தோழர் பாலா தம்பு ஒரு தொழிற்சங்கவாதி. அவர் தம் தொழிற்சங்க இயக்கத்தினால் ஏற்பட்ட அனுபவங்களும் அவ்வியக்கம் ஏகிய நோக்குகளுக்கு ஏற்பட்ட தடைகளும் முட்டுக்கட்டைகளும் அவரை அரசியல் புரட்சிவாதத்திற்கு, உந்தியது. இதனாலேயே புரட்சிவாத மார்க்சிய லெனினியக்கட்சித் தோழர்

எட்மண்ட் சமரக்கொடி போன்ற, ஏனைய தோழர்களுடன் இணைந்து ஆரம்பித்தார்.

இவர் புரட்சிவாதத்தைக் கையாள்பவரே அன்றி, தோழர் ரோகண போன்று புரட்சிப்பாதையில் செல்ல மாட்டாரென்பது இவரது வர்க்கபரிசீலனை மூலம் தெரிகின்றது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் ஒரு நடுத்தர வர்க்கத் தன்மை வாய்ந்தது. இந்த இயக்கத்தில் கொழும்பிலும், ஏனைய முக்கிய நகரங்களிலும் உள்ள முதலாளித்துவ ஸ்தாபனங்களிலும் வங்கிகளிலும் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி ஸ்தாபனங்களிலும் (Agencies) வேலை பார்ப்பவர்களே (Clerks) அங்கத்தவர்களாக இருக்கிறார்களே அன்றி ஆலைகளிலும் தொழில் ஸ்தாபனங்களிலும் உடல் உழைப்பை விற்றுக் கூலி பெற்று வாழும் தொழிலாளர்கள் இவரது இயக்கத்தில் அங்கத்தவர்களாக இல்லை.

இவர்கள் நடத்தும் போராட்டம் வெறும் பொருளாதாரத் தன்மை வாய்ந்ததேயொழிய, அரசியல் தன்மையற்றதென்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய போராட்டங்களினால் மேலும் பாதிக்கப்படுபவர்கள் கூலித் தொழிலாளர்களே.

இலங்கை அபிவிருத்தி அடையாத நிலபிரபுத்துவ பொருளாதாரச் சூழ்நிலையிலிருந்து, ஒரு முதலாளித்துவ அடிப்படைக்கு மாற ஆரம்பித்த காலம் முதல் 'கூலித்தொழிலாளர்களாக' இருந்தவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களே இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களாகவும், அதனால் இலங்கையின் பண்டைய பாட்டாளிகளாகவும் இருந்து வருகின்றனர்.



இலங்கையில் உருவாக்கப்பட்ட முதல் 'சரக்கு உற்பத்தி' (Commodity Product) இவர்களின் உழைப்பினாலேயே உருவானது. இதனால் உருவாகிய முதலாளித்துவ வளர்ச்சியின் அரவணைப்பில் உருவாக்கப்பட்ட ஏனைய நகரத் தொழில்கள் அன்னியரால் ஆரம்பிக்கப்பட்ட தோட்டமயமான தொழில்களின் பெறுபேறும் பிரதிபலிப்புமே. அதன் பயனாக ஆக்கப்பட்டதே பட்டண பாட்டாளி வர்க்கம்.

இவ்வர்க்கத்தினர் நகரத் தொழிற்சாலைகளிலும், துறைமுகம் போன்ற தொழில்துறையிலும் இருக்கின்றனர். தோழர் தம்பு போன்றவர்கள் கடந்த காலத்தில் இந்தப் பட்டணப் பாட்டாளிகளின் நலனை நாடினார்களே அன்றி, இலங்கையில் முதலாளித்துவம் உருவான காலம் முதல் இன்றுவரை ஒடுக்கப்பட்ட வர்க்கமாக இருந்துவரும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நலனை நாடவில்லை.

ஆரம்பத்தில் கூறியதுபோல் மார்க்சியச் சிந்தனையுடைய எந்தப் புரட்சிவாதியும், ஒவ்வொரு போராட்டமும் வர்க்கப் போராட்டம் என்பதையும் அத்தகைய வர்க்கப் போராட்டம் தர்க்கீகப் புரட்சிவாத அடிப்படையிலான போராட்டம் என்பதையும், ஒரு சமூகத்தின் பாரதூரமாகப் பாதிக்கப்பட்ட,

அடக்கி ஒடுக்கப்பட்ட அடித்தள வர்க்கத்தை அரசியல் பொருளாதார ரீதியில் மீட்க வேண்டும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்த வகையில் பார்க்கும் போது மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களை இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் முதுகெலும் பாகவும் பண்டைய பாட்டாளி வர்க்கமாதலால் ஒடுக்கப்பட்டவர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள்.

அவர்களின் நலனை நாடாத அவர்களின் விமோசனத்தை விரும்பி அக்கறை காட்டாத எவரும், எந்தப் புரட்சிவாத சிந்தனையாளரும் ஒரு சோசலிசப் புரட்சிக்கு வித்திட முடியாது. இதைத் தோழர் பாலா தம்புவும் அவரது 'அன்னியப் போதனை'ச் சிந்தனையில் (Foreign oriented Ideolgy) அங்கலாய்க்கும் இடதுசாரிகளும் உணர மறுக்கின்றார்கள்.

ஆனாலும் அவர்கள் அக்கறை காட்டாத சோசலிச வர்க்கப் போராட்டத்திற்குட்படுத்தாத மலையகத் தோட்டத் தொழிலாளர்களை இனம் கண்டு அம்மக்களின் மொழி சார்ந்த இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைக்காக அதுவும் சுயநிர்ணய உரிமைக்காக வக்காலத்துப் பேசுவதுதான் விகற்பமாக இருக்கின்றது.

தோழர் தம்புவைப் பொறுத்தமட்டில் அவர் எண்ணத்தில் உருவாகியுள்ள தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்து இயங்கியல் ரீதியில் சோசலிசப் புரட்சியின் அடிப்படையிலானது என்பதும், அதுவும் ஜனநாயக ரீதியில் என்பதும் தெளிவாகின்றது.



அவரொரு சோசலிசவாதி என்பதை மறுக்க முடியாது. ஆகவே ஒரு சோசலிச சகாப்தத்தை எதிர்பார்ப்பதும், அந்தச் சோசலிச சகாப்தத்தில் தமிழர்களின் தனி உரிமைகளை நிர்ணயிக்கும் 'சுயநிர்ணய உரிமை'' உண்டு என்று எண்ணுவதும் ஊகிப்பதும் சரியே.

ஆனால் அப்படியொரு சோசலிச சகாப்தம் நாடுதழுவிய முறையில்' இலங்கையில் உருவாகுமா? அதற்கான சோசலிசப் புரட்சி ஏற்படுமா? அப்படி ஏற்படும் புரட்சி ஒரு தேசியப் புரட்சியாக இருக்குமா? என்ற கேள்விகளுக்கு அவர்பதிலோ அல்லது பாதையோ தரமுடியாது என்பதற்கு அவரது கடந்த கால இயக்கச் சரித்திரமும் பொருளாதார அடிப்படையிலான போராட்ட முறையும் உறுதிப் படுத்துகின்றன.

தோழர் தம்புவின் தவறான கண்ணோட்டக் கருத்தைத் தான் தோழர்கள் வாசுதேவநாணயக்காரா, விக்கிரமபாகு போன்றோரும் கைக்கொள்கிறார்கள். தமிழர்களின் சுயநிர்ணய உரிமைபற்றி இவர்களிடம் தெளிவான சிந்தனை இல்லை.

தர்க்கீக சித்தாந்த முறையில் இவ்விடயத்தை அவர்கள் அணுகவில்லை என்பது அவர்களின் 'மறை மொழிகள்' மூலம் புலனாகும். இவர்களிடத்து தேசிய அடிப்படையிலான சோசலிசப் புரட்சி பற்றியும் தமிழர்களின் தேசிய உரிமைக்கான சுயநிர்ணயம் பற்றியும் தவறான எண்ணப்பாங்குகளும் கருத்துக் குழறுபாடுகளும் காணக்கூடியதாக இருக்கின்றன.

உரிமை வேறு-உடைமைவேறு. ஈழம் இலங்கை வாழ் தமிழ்மக்களுடைய தேசிய உடைமை. ''ஸ்ரீலங்கா'' சிங்கள மக்களின் தேசிய உடைமை. ''ஸ்ரீலங்கா'' ''ஈழம்'' கொண்ட நாம் வாழும் தீவில் ஒரு தேசியப் புரட்சி உருவாகமுடியாத அளவுக்கு ஸ்ரீலங்காவின் ஆதிக்கவர்க்கத்தின் கெடுபிடிகள் வலுப்பெற்றுள்ளன. இலங்கை முதலாளித்துவத்தின் கெடுபிடியினுல் பாதிக் கப்படுபவர் சிங்கள மக்களே. அந்தச் சுரண்டலுக்கு எதிராக சிங்கள மக்கள் போராடமுடியாத அளவுக்கு ஒடுக்கும் வர்க்கம் இந்தப் பிரச்னையைக் கையாள் கின்றது. ஜே. ஆரின் பொருளாதாரக் கொள்கையே இதற்கு ஓர் உதாரணம்.

ஜே. ஆரின் அரசாங்கம் ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் வங்கியான உலகவங்கியிடமிருந்தும் மற்றும் முதலாளித்துவ நாடுகளிலிருந்தும் கோடிக்கணக்கில் கடனும் நிதியுதவியும் பெற்றிருக்கின்றது. இதை என்றோ எப்பொழுதோ ஏதோ வகையில் முதலும் வட்டியுமாக இலங்கை அரசாங்கம் கடனடைப்பு செய் தாக வேண்டும். அதற்கு உழைத்துக் கொடுக்கப் போகின்றவர்கள் சிங்கள மக்களே. அவர்கள் இந்தச் சுரண்டலைப் புரிந்து கொள்ளாமலிருக்க குடியேற்றத் திட்டம் என்ற பெயரில் மகாவலித் திட்டம் திசை திருப்பப்பட்டுள்ளது.

தமிழ்ப் பகுதிகளைக் கட்டாயக் குடியேற்றப் பகுதி கள் ஆக்குவதன்மூலம் சிங்கள மக்களை வெறும் ஆசா பாச உணர்வுகளுக்கு உள்ளாக்கித் தமிழர்களைக்



கருவியாகக் கொண்டு (Scape goat) சுரண்டலை அர சாங்கம் நடத்துகின்றது. இதற்குச் சிங்கள மக்கள் தங்கள் எதிரியாகத் தமிழர்களைக் கணக்கிடுகிறார்களே யன்றி தமது பரம விரோதியான ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையான ஆட்சியையும் முதலாளி வர்க்கத் தையும் கணக்கில் கொள்ள முடியாமல் தவிக்கும் நிலையில் உள்ளார்கள்.

இந்தநிலையில் ஒரு சோசலிசப்புரட்சி இரு இனங் கள் கொண்ட நாடு தழுவிய வகையில் உருவாகு வதற்குச் சிறிதேனும் சாத்தியக் கூறுகள் இல்லை யெனலாம். பதிலுக்கு இனக்குரோதம்தான் தலை யெடுக்கும்.

1971 இல் இலங்கையில் ஏற்பட்ட கிளர்ச்சியின் தோல்வி எதிர்காலத்தில் நாடு தழுவிய ஒரு புரட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் சாத்தியக் கூறுகளும் இல்லை எனக் கூறலாம்.

அத்தகைய நிலைமை சிங்கள மக்களின் வர்க்க ரீதியான புரட்சி நடைபெறுவதைத் தடுத்துவிடாது. சிங்கள மக்கள் பாரம்பரிய நிலப்பிரபுத்துவத்தில் இருந்தும் சிங்கள ஆட்சியதிகாரத்தில் இருந்தும் (State Bureaucracy) விடுவித்துக்கொள்ள ஒரு புரட்சி நடத்த வேண்டும். அந்தப் புரட்சி உணர்விலிருந்து கடந்த காலம் போல அரசாங்கமும் ஆதிக்கவர்க்கமும் அரசியல் சந்தர்ப்பவாதிகளும் சிங்கள மக்களின் எண்ணத்தைத் திசை திருப்புகிறார்கள்.

தமிழர்களைப் பிரிந்து போக அனுமதித்தால் தம் மக்களின் புரட்சிவாத நோக்கையும், எண்ணப்போக்கையும் மாற்ற முடியாது என்பதையும் உணர்கிறார்கள். இந்த அடிப்படைச் சூட்சுமங்களைப் புரிந்து கொண்டால் தான் சிங்கள இடதுசாரிகள் ஒரு நாடு தழுவிய புரட்சிக்கு உட்படாது பிரிந்துவாழும் ''சுயநிர்ணய உரிமை தமிழர்களுக்கு உண்டு'' என்று பகர்வார்கள். அப்படியானதொரு சூழ்நிலை இன்னும் எழவில்லை.

இதை உணர்ந்து புரட்சிப் பாதை வழி வகுக்க முடியாத வாசுதேவா போன்றவர்கள் நாடு தழுவிய புரட்சி பற்றியும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும், பேசுவது வெறும் பித்தலாட்டமே. இந்த அறியாமைத் தவற்றை சக சிங்கள இடதுசாரிகள் மட்டுமல்ல, வி. பொன்னம்பலம் போன்ற இடதுசாரிகள் கூட அதே தவறைத்தான் இழைக்கின்றார்கள். இல்லாவிட்டால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விலகி செந்தமிழர் இயக்கமென்று இன அடிப்படையில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தபின் அதன் திட்டங்களில் தெளிவற்ற கோரிக்கைகளை கொண்டிருக்க மாட்டார்கள்.

தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று பறை சாற்றிக்கொண்டு தமிழ் இளைஞர்களை அவர் தம் உரிமைப் போராட்டத்திற்கு வாசுதேவா அறைகூவி அழைப்பது போல் வி. பொன்னம்பலமும் சுயநிர்ணயம் என்று குரல் எழுப்பிக் கொண்டு குற்றுயிராய்க் கிடக்கும் நாடு தழுவிய உரிமைப் போராட்டத்தை நாடுவது அவரது அங்கலாய்க்கும் அரசியல் சூனியத்தையே எடுத்துக் காட்டுகின்றது.



இலங்கையில் கடந்த காலத்தில் இரண்டு முறை ''இடது சாரி ஐக்கிய முன்னணி'' ஏற்பட்டிருந்தது. இவற்றின் வீழ்ச்சிக்குப் பல வெளிப்படைக் காரணங்களை இடதுசாரிகள் கற்பித்தாலும், அடிப்படையிலான இயங்கியல் காரணம் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குள் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் முதுகெலும்பான தோட்டத் தொழிலாளர்களை உட்படுத்தாததே.

இவர்களின் பிரச்னையை இன்றும் கூட சிங்கள-தமிழ் இடது சாரிகளும், ஏன் சிங்கள மார்க்சிய லெனினிய வாதிகளும் தவிர்த்தே இலங்கையின் புரட்சி பற்றியோ அல்லது தமிழர்களின் சுயநிர்ணயம் பற்றியோ நோக்குகிறார்கள். இதன் காரணமாகவே இன்றைய சூழ்நிலையில் ஒரு இடதுசாரி முன்னணி உருவாகமுடியாத நிலை உள்ளது. அதுபோல் நாடு தழுவிய ஒரு மாற்றத்தையும் கொண்டு வர முடியாமலுள்ளது.

இந்த நிலையில்தான் தமிழர்கள் கடந்த தேர்தலில் ''ஈழம் நமது திருநாடு இனிய செந்தமிழ்த் தாய்நாடு' என உடைமைப்பாட்டுக் கோரிக்கைக்கு வெகுசன வாக்கெடுப்பின் மூலம் ஜனநாயக ரீதியில் சுயநிர்ணய முடிவுக்கு வந்துள்ளார்கள். இன்று இலங்கையில் நாடு தழுவிய பிரச்சினை அங்கு உள்ள தேசிய இனங்களின் பிரச்சினையாக மாறியுள்ளது.

இதற்குக் காரணம் அடிப்படையில் தேசிய உடைமைப்பாட்டுப் பிரச்னை தீர்க்கப்படாததே என்பதே உணர வேண்டும். அடிப்படை உடைமைப் பாட்டுப் பிரச்சினை இலங்கை சுதந்திரம் அடைந்தபோது தீர்த்து வைக்கப்படவில்லை.

ஒற்றையாட்சி அடிப்படையில் சுதந்திரம் பெற்ற இலங்கை முதலாளித்துவ பொருளாதாரத்தின் முதுகெலும்பான மலையகத் தோட்டத் தொழிலாளர்களை இனங்கண்டு இரண்டாந்தர பிரஜைகளாக்கியது, முதலினவாரிப்பிரச்னை தலையெடுத்தது. சிங்கள முதலாளித்துவத்தின் இனக்குரோத கொள்கையைக் கண்டும் அதை முறியடிக்கக்கூடிய சோசலிசப் போராட்டத்தை சிங்கள-தமிழ் இடதுசாரிகள் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில்தான் 1976 ஆம் ஆண்டு பண்ணுகத்தில் ''வட்டுக்கோட்டை பிரகடனம்'' உருவாகியது. அப்பிரகடனத்தின் காவலர்களில் ஒருவராக தொண்டைமான் இருந்தமையால் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களை இனவாரி ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் சமூக அடிப்படையிலும் இணைத்து அவர்தம் அபிலாசையை எதிரொலிக்க முடிந்தது. அதன் பெறு பேருகவே கடந்த பொதுத் தேர்தலில் தனித்து இயங்கும் முடிவும் மேற்கொள்ளப்பட்டது.

சுயநிர்ணயம் வேறு-உடைமைப் போராட்டம் வேறு. உடைமைப் போராட்டத்தில் உள்ளடக்க



வேண்டிய சக்திகளை அணி சேர்த்தால் ஈழத்தமிழர் போராட்டம் புரட்சி மார்க்கப் பாதையில் புதிய மைல் கல்லாக அமையும். சோசலிசப் போராட்ட வரலாற்றில் ஜெர்மனி, பிரான்சு போன்ற நாடுகளில் ஏற்பட்ட தோல்வி காரணமாக தர்க்கீக வித்தகர் மார்க்ஸ் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாட்டில் தான் முழுமையான சோசலிசப் போராட்டம் நடக்கும்-வெற்றியும் கிடைக்கும் என்பதன் காரணமாகவே இங்கிலாந்தில் இயங்கிக் கொண்டிருந்தார்.

இந்தக் கால கட்டத்தில்தான் லெனின் போன்ற புரட்சிப் புரவலர்களால் ரஷ்ய நாட்டு தொழிலாளர்களை புரட்சி மார்க்கத்தில் ஈடுபடுத்தி ஜாரின் சர்வாதிகார யதேச்சாதிகாரத்தை முறியடித்து சோசலிச சோவியத்தை உருவாக்க முடிந்தது. ''நேரடியாக யதேச்சாதிகாரத்தை எதிர்த்து முறியடித்ததின் மூலம் மறைமுகமாக ஏகாதிபத்தியத்தை எதிர்க்கவும் அதை தள்ளாட வைக்கவும் முடிந்தது'' இது போன்ற ஒரு சூழ்நிலை 'இன்று இலங்கையிலும் காணக் கூடியதாக உள்ளது.

இன்று உலக ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக, சர்வாதிகார யதேச்சாதிகாரியாக ஜே. ஆர். மாறி வருகின்றார். இவர் ஆட்சியின் அடிப்படை ''நவ காலனித்துவ'' கொள்கையைக் கடைப்பிடிப்பதே. அதனாலேயே தமிழ்ப் பகுதிகளைக் கட்டாயக் குடியேற்ற மயமாக்கத் திட்டம் தீட்டி வருகின்றார்.

இதற்கு எதிரான போராட்டம் வெறும் குடியேற்றத்தை எதிர்க்கும் போராட்டமாக அமைந்து விடக் கூடாது. குடியுரிமை, மொழியுரிமை, நில உரிமை, தமிழர்களின் மற்றைய உடைமைப்பாட்டு உரிமைகளை உள்ளடக்கிய பொதுவுடைமைப் போராட்டமாக அமைய வேண்டும். இதற்கு அணி வகுப்பார்களா இன்றைய தமிழர்கள்?

K.KALAMOGAN.—

